Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஓக. 29 - செப். 04, 2013

# வாரமலர் தினமுரசு



தளபதிக்கு அம்மா கொடுத்த 'டோஸ்'


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1029

# இலங்கையில் நவிப்பிள்ளை எதிர்பார்ப்பும் எதிர்ப்பும்





## இந்துமா கடலில் கேள்விக்குள்ளாகும் இறைமை





அற்புதன் எழுதிய

## மீண்டும் இடி அமீன்

உண்மைத் தொடர்...



## தேநீர் கோப்பைக்குள் விஷம்?

## ॐ தேங்காய் உடைப்பதன் தத்துவம்

கோயில்களில் பெரும்பாலும் இறைவனுக்கு தேங்காய் உடைப்பது வழக்கம். ஏன் தேங்காய் உடைக்கிறோம். இதில் என்ன தத்துவம் இருக்கிறது என்ற விவரம் நம்மில் பலருக்குத் தெரியாது. ஏதோ சுவாமிக்கு அர்ச்சனை பண்ணினோம். தரிசனம் செய்தோம் என்றவாறே இதை நாம் தொன்றுதொட்டு செய்துவருகிறோம். அதைப் பற்றி ஒரு சிறிய தத்துவ தகவல்.

தேங்காய் உடைப்பதில் ஒரு பெரிய உண்மை மறைந்து இருக்கிறது. தேங்காயின் மேல் கடுமையான ஓடும் அதனுள் மென்மையான பருப்புமாகிய காய்ப் பகுதியும் அதனுள் நீரும் உள்ளது.

உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்து இருக்கிறது. இரண்டும் கோள வடிவம் உடையது. இது உலக மாயையைக் குறிப்பது ஆகும். உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவை குறிக்கும்.

இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்து இருக்கின்றது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்த பிராப்தியையும் பெறாமல் நிற்கின்றது. அதுபோல் வெள்ளை பகுதியையும், நீரையும் காணமுடியாமல் ஓடு மறை(க்)கின்றது.

ஈசுவர சந்நிதியில் மாயையை அகற்றி தேஜோமய சுவரூபத்தை காட்டி அவர் அருளாள் பரமானந்த பேரமுதத்தை நுகரச்செய்யும் செயலையே இது காட்டுகிறது. இவ்வளவு உட்கருத்து இருப்பதால்தான் தேங்காயை இறைவழிபாட்டில் முக்கியபொருளாக வைத்து நம் முன்னோர்கள் வழிபட்டுவந்துள்ளனர் என்கிற உண்மையை நாம் உணரவேண்டும்.

## ஆன்மீகம்

### பயத்தை அறவேவிடுங்கள்

தேவனோடு உள்ள உறவை நாம் முழங்காலின் மூலமாகத்தான் உறுதிப்படுத்துகிறோம்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோண்நொக்ஸ் என்ற பக்தர் முழங்காலிட்டு ஜெபித்து, "ஸ்கொட்லாந்து தேசத்தை எனக்குத் தாரும். இல்லாவிட்டால் நான் மடிந்துபோகிறேன்," 'எனக் கதறினார். அப்படியே தன் முழங்காலின் பலத்தால் ஸ்கொட்லாந்தில் ஒரு பெரிய எழுப்புதலைக் கொண்டுவந்தார்.

அப்போது ஸ்கொட்லாந்தை ஆட்சி செய்த ராணி கொடுங்கோல் அரசியாக இருந்தாள். அவளை அந்த தேசத்து மக்கள், "இரத்த வெறிபிடித்தவள்," என்று அழைத்தார்கள். ஆனால், அவளோ ஜெபவீரராகத் திகழ்ந்த நாக்ஸ்'க்கு பயப்பட்டாள். "அந்த மனிதன் முழங்காலிட்டு நின்றால், என் சரீரம் எல்லாம் தீப்பற்றி எரிவதுபோல் வேதனை உண்டாகிறது," என்று சொல்லி நடுங்கினாள். இதுபற்றி நாக்ஸிடம், "இவளோ கொடுங்கோல் அரசி, இராணுவத்தை தன் கைக்குள் வைத்திருப்பவள். அப்படியிருக்க அவளை எதிர்த்து நிற்கும் துணிச்சல் எப்படி வந்தது?" எனப் பலரும் கேட்டனர்.அதற்கு நாக்ஸ்," எந்த ஒரு மனிதன் பரலோக ராஜாவுக்கு முன்பாக நிற்கிறானோ, அவன் உலக ராணிகளைக் குறித்து கவலைப்படமாட்டான். அவர்களுக்கு அஞ்சமாட்டான். பரலோக தேவதூதர்களின் சேனைகள் என்னோடு இருக்கும்போது, பூலோக இராணுவத்துக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்?" என்று அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்தார். தேவனை நம்புவோர் எந்த ஒரு சக்திக்கும் பயப்படத் தேவையில்லை.

## வான்மறை வழிநடப்போம்

அல்லாஹ்வின் அருள்மறை அல்குர்ஆன் அகிலத்திற்கு இறக்கப்பட்டு இறைதூதர் அவர்கள் இதனை ஏற்று இதன்படி இவ்வையகத்தில் வாழ்ந்துகாட்டினார்கள். மனிதர்களுடைய உள்ளங்களில் பொறுப்புணர்வை வைத்த பின்னர்தான் அல்லாஹ் அல்குர்ஆனை அகிலத்திற்கு இறக்கினான்.

அல்லாஹ்வின் அல்குர்ஆன் எமக்கு கற்பிக்கும் இபாதத்தின் பல்வேறு வழிகள் வாழ்க்கையை வணக்கமாக அமைத்து அதன்மூலம் நாளை மறுமையில் நமது பட்டோலை எமது வலக்கரத்தில் கிடைக்க வழி செய்யவேண்டும்.

மறுமையில் கிடைக்கப்போகும் உபகாரங்களை நாம் நம்பிவாழ்ந்தால் அல்லாஹ் அவன் அடியானுக்கு வாக்களித்த வெகுமதிகள் அந்நாளில் (கியாம நாளில்) நிச்சயம் கிடைக்கும்.

இதற்கு நாம் அல்லாஹ்வின் விடயத்தில் தூய்மையாக நடந்து அவனது ஏகத்துவத்தை ஏற்று விசுவாசித்து வான் மறை வழிநடப்போம்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1026



### பாதசாரிகள்

"உடுக்கை இழந்தவன்
கை போல" என்பது
பழைமை மொழி! இங்கு...
'இடக்கை - வலக்கை
இழந்தோர் கால்போல'
என்பது புதுமைக்
கூற்று அன்றோ!

கிண்ணியா, முத்தாலிப்

பாராட்டுக்குரியது


### இலையுதிர்ந்த மொட்டுக்கள்

இலையுதிர்ந்த மொட்டுக்கள்
சிலையாகாமல்
வலைவீசி வட்டமிடுகிறது
வாழ் + கை என்ற
வாழ்க்கை தத்துவத்திற்கு
வளம் சேர்க்க.

கே.எம்.ஏ.அஸீஸ்,
சாய்ந்தமருது - 11




## கவிதைப் போட்டி இல 1029



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09. 09. 2013

கவிதைப் போட்டி இல. 1029 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### மனிதம்

ஊனம் என்றாலும்
உறவுகளும்
உணர்வுகளும்
உள்ளமும் இருக்கும்.

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.

### இரு கரம்

இரு கரம் இழந்தும் கரை
ஒதுங்கி கட்டிலை நாடாமல்
கானம் இசைக்கும் இருகால் களும்
அதன் திறமைகளும் எம்மை
எங் கெங்கோ கொண்டு செல்கின்றன.

பீ.எஸ்.ஏ.தாஹிர்,
காத்தான்குடி -03.

### முயற்சி

கைகள் இல்லாவிட்டாலும்
கனவுகள் உள்ளது
கடமைகள் உள்ளது
கடைசிவரை தளராதே.

எஸ்.திலகவதி, பதுளை.

### கவிதைக்கா? காட்சிக்கா

புடங்கள் நான்கும்
படிப்பினை ஊட்டுபவை
சின்னஞ் சிறுசுகளின்
சிறப்புப் படங்கள்
கவிதைக்கா? - காட்சிக்கா?
கவிதைக்கென்றால் இரண்டாம் படம்
காட்சிக்கென்றால் மூன்றாம் படம்.

எம்.சி.கலீல், கல்முனை -05

### தன்னம்பிக்கை

தம் உடலில் ஊனமென்று
இச்சிறுவன் மூலையில்
முடங்கிக் கிடக்கவில்லை
எக்காரியமெனிலும் தன்னால்
முடியுமென மனதில்
தன்னம்பிக்கை கொண்டு
உலகமே வியக்க
சாதித்து நிற்கிறான்.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### சிலிர்ப்பு

கை கால்கள் யாவும்
உருப்படியாக உள்ளோர்
இழிவான கருமங்களில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கையில்
கைகளே அற்ற இச்சிறுவன்
தன் கால்களால் ஆற்றும்
சாகசங்களை நோக்கும் போது
நம் உடல் உளம் யாவுமே
வியப்பால் சிலிர்க்கின்றன.

அ.சத்தியாகோ, கண்டி.

## உங்கள் பக்கம்

### உரிமை கிடைக்குமா?

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றது நவகிரி எனும் குளம். இக்குளத்தில் கடந்த காலங்களில் குறிப்பிட்ட நவகிரி பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலுக்கான நீர்நிலையாக விளங்கிவருகின்றது.

ஆனால் யுத்தம் முடிவடைந்து சுமுகச் சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து இக்குளத்தில் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்துவந்த நவகிரி மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இக்குளத்தில் மீன்பிடிப்பதற்கான உரிமை தங்களுக்கே உரியது என அம்பாறையிலிருந்து வந்த சிலர் குறித்த குளத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றனர்.

இதனால் நவகிரி மீனவர் சங்கத்தைச் சார்ந்த குடும்பங்கள் தமது வாழ்வாதாரம் பறிக்கப்பட்ட நிலையில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகளுக்கும் பலமுறை எடுத்துக் கூறியிருக்கின்ற போதிலும் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே குறித்த விடயத்தை தினமுரசின் உங்கள் பக்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம். இதன்மூலமாவது பாதிக்கப்பட்டுள்ள எமக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கின்றோம்.

எம்.பரமு, நவகிரி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## வாசகர் சாலை



### பிரகாசம்....!!

காலங்கள் பல கடந்து
மக்கள் முன்
நீ உன்னை நிலைநிறுத்தி
நடுநிலை தவறா கட்டுரைகள்
எமக்குத் தந்து
எம் பிரச்சினைதனை
சுட்டிக்காட்டி
வழிகாட்டும் தினமுரசே!
நித்தமும் வந்து எம்மை
பிரகாசிக்க வைக்கின்றாய்!

ஆர்.சுமதி. பிபிலை.

### வாழ்த்துக்கள்!

அன்பான தினமுரசுக்கு,

சுழிகள் நிறைந்த அரசியல் கடலுக்குள் சிக்கி இருக்கின்ற தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதை மிகவும் சாமர்த்தியமாய் எடுத்துக்கூறும் உனது பங்கு வியக்க வைக்கின்றது. கடந்த காலங்களில் கூறிய எதிர்வுகூறல் களும் தற்போது கூறிவருகின்ற நிலவரங்களும் தினமுரசு மக்கள் நலன்சார்ந்த நிலைப்பாட்டில், உறுதியுடனும் தெளிவுடனும் பயணித்துக்கு கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் மக்களுக்கான கருத்துக்களை வழங்கவேண்டும் எனக்கூறி வாழ்த்துகின்றேன்.

தா.கவிசன் -வெள்ளவத்தை.


### கண்டுபிடிக்கப்படுவார்களா?

வாசகநெஞ்சங்களின் தேவைகளை அறிந்து முரசு பலவற்றை தந்து கொண்டிருக்கிறது. சென்றவாரம் காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களா...? என்ற கட்டுரை காணாமல் போனவர்கள் தொடர்பான தீர்க்கமான ஒரு திடமான முடிவு வேண்டுமென கட்டுரையாளர் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தார். அதுதான் இன்றைய நிலைமையுங்கூட.

காணாமல் போனவர்களின் உறவுகள் தங்கள் பிள்ளைகளோ அல்லது கணவன்மார்களோ திரும்பிவருவார்கள் என்ற ஏக்கத்துடன் காத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மனித உயிரும் விலைமதிப்பில்லாதது. அதை பறிக்கும் உரிமை எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை உயிர்ப்புடன் தெளிவு படுத்தியிருந்தார். தினமுரசு இதுபோன்ற சவால்மிக்க கட்டுரைகளை வெளியில் கொண்டுவரவேண்டும் என்பதே எனது விருப்பமுமாகும்.

திருமதி ம.சந்தியா, இணுவில்.

# மக்களின் நலன்களை அடகு வைத்துவிட்டு மக்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் நாமல்ல



## சந்திரகுமார் எம்.பி. சாட்டை

நம்மிடமுள்ள அரசியல் களத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கான பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எமது மக்களின் நலன்களை அடகுவைத்து விட்டு எமது மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் முடிவுகளை ஏற்றுக்கொள்பவர்கள் நாமல்ல என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் அங்கம்வகிக்கும் 17 கட்சிகளில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி நாம் அரசாங்கத்தில் அங்கம்வகிக்கின்றோம். எமது கட்சி ஒரு சிரேஷ்ட அமைச்சரை உள்ளடக்கிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டது. அந்தவகையில் நாம் எம்மிடமுள்ள அரசியல் பலத்தை வைத்துக் கொண்டு அரசாங்கத்துடன் பேரம்பேசி எமது மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கும் பிரதேசங்களின் கட்டுமானங்களுக்குமான பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இது மறுக்கப்படமுடியாத உண்மை. ஏனெனில் கடந்த இருபத்தைந்து வருடங்களாக எமது கட்சியின் அரசியல் பிரசன்னம் இல்லாதிருந்திருப்பின் எமது மக்கள் இன்றும் எவ்வித முன்னேற்றங்களும் அற்ற ஒரு இருண்ட யுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள்.

இந்நிலையில் எமது செயற்பாடுகளை சிலர் அரசுக்கு துணை நிற்பவர்கள், துரோகிகள் என்றெல்லாம் விமர்சித்ததுண்டு. ஆனால் நாம் அரசிடம் பேரம் பேசுகின்ற போது எமது மக்களின் நலன்களை அடகு வைத்துவிட்டு எமது மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் முடிவுகளை ஏற்றுக்கொண்டு செயற்படுபவர்கள் அல்ல என்பதற்கு நீண்ட வரலாறுகள் உண்டு. நாம் பிரேமதாசா அவர்களின் ஆட்சியிலும் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியிலும் அரசுடன் இணைந்து நின்று செயற்பட்டிருக்கின்றோம். ஆனால் எந்தக் கட்டத்திலும் எமது இனத்திற்கு எதிராக எடுக்கப்படும் முடிவுகளை நாம் ஏற்றுக் கொண்டதில்லை, மாறாக அதற்கு எதிராக செயற்பட்டு அந்த முடிவுகளை நடைமுறைக்கு கொண்டுவராத வகையில் தடுத்து நிறுத்தி இருக்கின்றோம், என்று தெரிவித்தார்.

## சந்தேக நபர் இரகசிய வாக்குமூலம்!

தெரணியகலை நூரி தோட்ட அதிகாரி நிஹால் பெரேரா கொலை வழக்கின் சந்தேகநபர்களில் ஒருவரான சிதம்பரம் பழனியாண்டி அவிசாவளை பிரதான நீதவான அனுஷ்க சென விரத்ன முன்னிலையில் ரகசிய வாக்குமூல மளித்துள்ளார்.

இந்த வழக்கின் ஏனைய சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உரியவர்களுடன் பேசி பிரச்சினைக்கு தீர்வு

அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் பலருக்கும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருவார உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த நவநீதம்பிள்ளை அம்மையார் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைப்பார் என்று பர தரப்புகளால் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அம்மையார் வெளியிட்ட கருத்துக்கள் பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர், யாழ். பொதுநூலகத்தில் பல்வேறு தரப்புகளுடனான சந்திப்பை மேற்கொண்டிருந்தார். அதன்போது அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்துகொண்ட நவநீதம்பிள்ளை, இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை அறிந்து கொண்டுள்ளதாகவும், அதுதொடர்பில் உரிய தரப்புகளுடன் பேசி, தீர்வுபெற்றுத்தர முயல்வதாகவும் மட்டும் கூறியதுடன் தனது கருத்துக்களை மட்டுப்படுத்திக் கொண்டார்.

அதேவேளை யாழபொது நூலக முன்வாசலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் போனோர் சங்கத்தின் ஆர்ப்பாட்டங்களையும் கண்டுகொள்ளாத அம்மையார் நூலகத்தின் பின் வாசல் வழியாக வெளியேறிச் சென்றுள்ளார். இதனால் குறித்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த தமிழ்த் தேசிய முன்னணியினருக்கு ஏமாற்றம் ஏற்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஒலுவில் துறைமுகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு

ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில், இழப்பீட்டின் ஒரு பகுதியினை முதற்கட்டமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நிர்மாணப் பணியின் பொருட்டு சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களில் ஒரு பகுதியினருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் இதுவரையில் வழங்கப்படாத நிலையில் இருந்துவந்தன. இந்நிலையில், காணிச் சொந்தக்காரர்களுடனான பேச்சுவார்த்தை ஒலுவில் துறைமுக சுற்றுலா விடுதியில் இடம்பெற்றது. இதன்போது முப்பத்தைந்து காணிச் சொந்தக்காரர்களுக்கு எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் முதற்கட்ட கொடுப்பனவாக பேர்ச் ஒன்றுக்கு ரூபா30,000 வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்துமா கடலில் கேள்விக்குள்ளாகும் இறைமைகள்

**ஒரு நாட்டுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி நுழைவதும் அந்த நாட்டின் வளங்களைச் சுரண்டுவதும் குறித்த நாட்டின் இறைமையை மீறுகின்ற செயலாகவே சர்வதேச சட்டவிதிகள் நோக்குகின்றன.**

**அருணாசலப் பரதேசத்தில் ஊடுருவுகின்ற சீனாவுக்கு எதிராகவும், காஷமீர பகுதியில் ஊடுருவுகின்ற பாகிஸ்தான் தீவிரவாதிகளையும் கடுமையாகச் சாடிவருகின்ற இந்தியா, இலங்கைக்குள் அத்துமறுகின்ற தமது நாட்டுப் பிரஜைகளை கண்டுகொள்ளாமல் இருக்கின்றது.**

தமிழக மீனவர்களின் பிரச்சினை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. தொடர்ச்சியாக அவர்கள் எல்லை தாண்டிவருவதும் அவர்களை இலங்கை கடற்படையினர் நீதிமன்றத்தின்முன் கைதுசெய்து ஒப்படைப்பதும், அதற்காக தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதும், தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதும் பின்னர், இலங்கை நீதிமன்றங்கள் மீனவர்களை விடுதலை செய்து அனுப்பிவைப்பதும் பழகிப்போன விடயங்களாக தொடர்ந்துகொண்டு இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இலங்கை யுத்தம் நடந்த காலப்பகுதியில் வடபகுதி மனவர்களுக்கு ஆழ்கடலில் சென்று மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் ஆழ்கடல் மீன்பிடிக்குத் தேவையான நவீன உபகரண வளங்களும் இவர்களிடம் இருக்கவில்லை. இதனால் இலங்கையின் கடல் எல்லைப் பிரதேசத்தில் பெருகிய மீன்வளத்தை தமிழக மீனவர்கள் அனுபவித்தனர். அந்தக் காலகட்டங்களிலும் கடற்படையினரின் முழுக்கவனமும் கடற்புலிகளின்மீது இருந்ததால் மீனவர்கள் எல்லைதாண்டுவது பிரச்சினையாக பார்க்கவில்லை.

ஆனால் யுத்தம் முடிந்து வடபகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான சூழல் ஏற்பட்ட நிலையிலேயே பிரச்சினை சூடுபிடிக்க ஆரம்பித்திருந்தது.

இதனால் தமிழக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே. ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை நம்பி நவீன மீன்பிடி உபகரணங்களுக்காக அவர்கள் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்திருக்கின்றார்கள். அவர்களின் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளும் வகையில் இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்வளம் காணப்படவில்லை.

எனவே அவர்களின் பக்கத்திலிருந்து பார்க்கும்பொழுது எல்லை தாண்டி வந்தே தீரவேண்டிய அவசியம் இருக்கிறது. இல்லையென்றால் பல்வேறு பொருளாதார, வாழ்வாதார சிக்கல்களை அவர்கள் எதிர்கொள்ளவேண்டிய ஏற்படும். மனிதாபிமான ரீதியில் பார்க்கும்பொழுது தமிழக மீனவர்களின் நிலை சிந்திக்கவேண்டியதாகவே காணப்படுகின்றது. ஆனால் அதற்காக இன்னொரு நாட்டுக்குள் நுழைவதற்கு அடம்பிடிப்பது நடுநிலையாளர்களால்கூட ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகவே காணப்படுகின்றது.

ஒரு நாட்டுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி நுழைவதும் அந்த நாட்டின் வளங்களைச் சுரண்டுவதும் குறித்த நாட்டின் இறைமையை மீறுகின்ற செயலாகவே சர்வதேச சட்டவிதிகள் நோக்குகின்றன.

அந்தவகையில் தமிழக மீனவர்களின் எல்லை மீறுகின்ற செயற்பாடானது அப்பட்டமான அத்துமீறலாகவே இருக்கின்றது.

எல்லைப் பாதுகாப்பு என்ற ரீதியில் இவ்விடயத்தில் இரண்டு நாடுகளின் மத்திய அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட விடயமாக இருக்கின்ற போதிலும் இராஜதந்திர நோக்கங்களுக்காக இரு நாடுகளும் கொஞ்சம் மென்போக்குடனேயே இப்பிரச்சினையை கையாள முயல்வதாகத் தெரிகிறது.

இலங்கை அரசை பொறுத்த வரையில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் இந்தியாவுடனான இராஜதந்திர உறவு, பாதிப்படைந்துவிடக் கூடும் என்பதால் அடக்கிவாசிப்பதாகவே தெரிகிறது.

இந்தப் பிரச்சினையை தீர்த்துவைப்பதில் கணிசமான பொறுப்பு இந்திய மத்திய அரசிடமே காணப்படுகின்றது. அத்துமீறி இன்னொரு நாட்டின் எல்லைக்குள் நுழையும் தமது நாட்டுப் பிரஜைகளை கட்டுப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு இருக்கின்றது. வடஇந்தியாவின் அருணாசலப் பரதேசத்தில் ஊடுருவுகின்ற சீனாவுக்கு எதிராகவும், காஷ்மீர் பகுதியில் ஊடுருவுகின்ற பாகிஸ்தான் தீவிரவாதிகளையும் கடுமையாகச் சாடிவருகின்ற இந்தியா, இலங்கைக்குள் அத்துமறுகின்ற தமது நாட்டுப் பிரஜைகளை கண்டு கொள்ளாமல் இருக்கின்றது.

குறித்த விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கமுடியாமல் இந்தியா திணறுவதற்கு காரணம் இருக்கின்றது.

கண்காணிப்பை தீவிரமாக்கி தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதை இந்தியா தடுக்க முனையுமானால் தமிழகத்தில் இருந்து மத்திய அரசாங்கத்திற்கு எதிரான அலை ஒன்று மேலெழும்பும் வாய்ப்பு இருக்கின்றது. தமிழகத்தில் தமது கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்காக தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது காங்கிரஸ் கட்சி. தற்போதைய நிலையில் தமிழகத்தின் தென் மாவட்டங்களிலேயே காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது.

ப.ராஜ்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்...)

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## நோய் காப்பு தேசியத் தேவை!!

குழந்தைகளுக்கான பால்மாவில் விஷத்துக்கு ஒப்பான மருந்துக் கலவை இருப்பதாக வெளியான செய்தி இலங்கைப் பெற்றோர்களை அதிர்ச்சியில் உறையவைத்துள்ளது.

நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களிலேயே இந்த இரசாயனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் தற்போது இலங்கை மக்கள் மத்தியில் பொன்டேரா நிறுவனத் தயாரிப்புக்களுக்கு மாத்திரமல்லாமல், இறக்குமதி செய்யப்படும் குழந்தைகள் பால்மா வகைகள் அத்தனையின் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால் பால்மாக்களை இறக்குமதி செய்த அத்தனை நிறுவனங்களும் பெரும் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

இலங்கையின் குழந்தைகளை, பரிசோதனை எலிகளைப் போல் வெளிநாட்டு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் பாவனை செய்துள்ளன. இதற்காக பெருந்தொகை நஷ்டஈட்டையும் இலங்கை அரசு கோரி வழக்குகளை தாக்கல் செய்யவேண்டும்.

பெரிய அளவில் நடக்கும் இது போன்ற குற்றங்கள் இலங்கையின் தலைமுறைகளை நோய்ச் சமூகமாக இதுவரை காலமும் மாற்றிவந்துள்ளன. எனவே இறக்குமதியாகும் பால்மாக்களில் மட்டுமல்லாது, எனர்ஜி குடியான வகைகள், அழகு சாதனப் பொருட்கள், பெண்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் என அத்தனையிலும் எதிர்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். இறக்குமதிப் பொருட்கள் மட்டுமல்லாது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரமும் நுட்பமாக பரிசோதிக்கப்படவேண்டும்.

தவிரவும் நோய்க்காப்பு நடவடிக்கைகள் குறித்தும் கடுமையான கண்காணிப்பு செய்யப்படுவதும் மிகமிக அவசியமாகும்.

நோய்வந்த பின்னர் மருத்துவமனைகளில் துன்பப்படுவதையும் பணத்தை வீண் விரயம் செய்வதையும் விடவும் நோயை முன்கூட்டியே தடுத்து மனிதர்கள் வாழ்வதே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் என்று வளர்ந்த நாடுகள் தெரிந்துகொண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

அதேபோல் நாமும் நோய்க்காப்பு நடவடிக்கைகளை முதலில் செய்ய வேண்டும். அந்தப் பணியை உணவகங்களிலிருந்தும், உற்பத்திச் சாலைகளிலிருந்தும் ஆரம்பிக்கவேண்டும். மலசலகூடங்களை சுத்தமாக வைத்திருப்பதை உறுதிப்படுத்துவது மிக மிக முக்கியமாகும். ஒவ்வொருவரும் தமது இல்லங்களிலிருந்து நோய்க்காப்பு நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# இலங்கையில் நவிப்பிள்ளை எதிர்பார்ப்பும் எதிர்ப்பும்

ஐக்கிய நாடுகள் மனித வுரிமை ஆணையகத்தின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை அவர்கள் ஒருவார கால பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

அவர் இலங்கையில் தங்கயிருக்கும் நாட்களில் ஜனாதிபதி, எதிர்கட்சித் தலைவர், நீதித்துறை அமைச்சர், தேசிய மொழிகள் அமைச்சர், பிரதம நீதியரசர், ஆகியோரை சந்திப்பதோடு அரசியல் கட்சிகளையும் சந்திக்கவுள்ளார்.

விசேடமாக வட மாகாணத்திற்கும் பயணிக்கவுள்ளார் என அவரது தகவல் தொடர்புச் செயலாளர் தெரிவித்திருந்தார்.

நவநீதம்பிள்ளை அவர்கள் இலங்கைக்கு வருகை தருவதானது இலங்கையின் மனித வுரிமைகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அடுத்து நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை மாநாட்டில் சிறப்பு தீர்மானமொன்றை முன்மொழிவார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், நவநீதம் பிள்ளையின் வருகையானது இலங்கையின் இறைமைக்கு பாதகமானது என்றும், இலங்கையை போர்க்குற்ற நாடாக அல்லது முறையாக மனித வுரிமைகளை பேணாத நாடாக சர்வதேச அரங்கில் சித்தரிப்பதற்கானது என்றும் கடும் போக்குசக்திகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் சகோதரி நவநீதம் பிள்ளை என்ற அளவிற்கு நவனீதம்பிள்ளைக்கான எதிர்ப்பை அந்த சக்திகள் தெரிவித்துள்ளன.

இதுதவிர, அரசாங்கத்தை பொறுத்தவரை நவநீதம் பிள்ளையின் வருகையானது நாட்டுக்குள் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாத வகையிலும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த பயங்கரவாதத்திலிருந்து மீண்டுவரும் இலங்கை நாட்டின் எழுச்சிக்கு உற்சாகம்தரும் வகையிலும், அமையவேண்டும் என்று கருத்துத் தெரிவித்து வருகின்றது.

எதிர்க்கட்சிகளோ நவநீதம் பிள்ளை இலங்கை அரசாங்கத்தின் மனிதவுரிமை மீறல்களையும் பொறுப்புக்கூறும் கடமையிலிருந்து தவறுகின்ற நிலைப்பாட்டையும் கடுமையான கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து இலங்கை அரசை சர்வதேச அரங்கில் குற்றவாளிகளாக இனம்காட்ட வேண்டும் என எதிர்பார்க்கின்றன.

இதற்கிடையே தனது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த நவநீதம்பிள்ளை, தனது இலங்கை விஜயமானது விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்காததும் பாரபட்சமற்ற வகையில் இலங்கையின் மனித வுரிமை தொடர்பிலான செயற்பாடுகளை ஆராய்வதுமேயாகும் என்றும் கூறியுள்ளார்.

எவரது எதிர்பார்ப்புக்களுக்காகவும் எதிர்ப்புக்களுக்காகவும் தமது நோக்கம் சிதைந்து விடாது என்பதையும் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு நவநீதம்பிள்ளை கூறியிருப்பதை தொடர்ந்து எதிர்கட்சிகள் நவநீதம் பிள்ளையின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான பல்வேறு நிகழ்ச்சிகளை திட்டமிட்டு செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர்:

அதில் சுத்தமான குடிநீர் கேட்ட பொதுமக்கள் மீது வெலிவேரியாவில் இராணுவத்தினர் நடத்திய கொடூரமான துப்பாக்கி தாக்குதல்கள் மனிதவுரிமை மீறல்களாக கணிக்கப்படவேண்டுமென்பதற்காக அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களை வீதியில் இறக்கி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை தென்னிலங்கை கட்சிகள் நடாத்தியுள்ளன.

வடபகுதியில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும், மன்னாரிலும், யுத்தகாலத்தில் மற்றும் அதற்குப்பின்னரான காலப்பகுதியில் காணாமற் போனவர்களின் உறவினர்களை வீதியில் இறக்கி கவனயீர்ப்பு போராட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்தியுள்ளனர்.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னரே என்னென்ன விடயங்கள் நவநீதம்பிள்ளைக்கு தேவையென்பதை பல்வேறு மட்டங்களிலிருந்து தகவல் திரட்டப்பட்டுள்ளன. அதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சில மதத்தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், ஆகியோரின் கருத்துக்கள் மற்றும் ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே நவநீதம் பிள்ளையின் வருகை திரட்டப்பட்ட ஆவணங்களை பொறுப்பேற்றுக் கொள்வதோடு அவ் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரமுகர்களை சந்திப்பதும், இடங்களுக்கு விஜயம் செய்வதும் மேலதிக உறுதிப்படுத்தலுக்காகவே என்பது எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடியது.

இதில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சிலகாலங்களே இருக்கின்றவேளையில், நவநீதம்பிள்ளையின் வட மாகாணத்திற்கான பயணமும் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பும் தேர்தல் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அதாவது, வட மாகாணசபையை வெற்றி பெற்று சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கத்தின் கழுத்தை நெரித்து அல்லது மூன்றாவது போராட்டத்தை ஆரம்பித்து தமிழ் மக்களுக்கு தனிநாட்டுக்கு ஒப்பான அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்கப் போவதாக உண்மைக்குப் புறம்பான பிரசாரத்தை மேற்கொண்டு வரும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டிற்கு நவநீதம் பிள்ளையின் வருகையும் சந்திப்பும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பிரசார நடவடிக்கையாகவே கருதப்பட்டது.

கூட்டமைப்பின் பிரசாரங்களுக்கு நவநீதம்பிள்ளை தனது பங்களிப்பை மிகநுட்பமாச்செய்து முடித்துள்ளார். நவநீதம்பிள்ளை பாரபட்சமற்ற நியாயமாகவும் நடந்துகொள்வதாயின் அவர் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் தளத்தை மதித்திருக்கவேண்டும்.

தமிழ் மக்கள் கூட்டமைப்பின் பொய் அரசியலை வெறுத்து ஜனநாயக அரசியல் தலைமைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை நவநீதம்பிள்ளை இங்கு ஏற்க மறுத்திருக்கின்றார்.

தமிழ் மக்களுக்கு ஒரே கட்சி ஒரே அரசியல் நிலைப்பாடு என்பது சர்வாதிகாரப் போக்கு என்பதை நவநீதம்பிள்ளையும் தட்டிக்கொடுப்பதாகவே நடந்துகொண்டுள்ளார்.

பொதுமக்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்து இருக்கமுடியாது என நம்புகின்ற நவநீதம்பிள்ளை மாற்றுக் கருத்துடைய மக்களின் கருத்துரிமையை நிராகரித்துள்ளார். அதுவும் ஒரு வகையான மனித வுரிமை மீறல் என்பதை நவநீதம் பிள்ளை போன்றவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையின் ஆணையகத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கும் இவர்களைப் போன்றவர்கள் மனிதவுரிமைகள் பற்றியும் நீதி நியாயங்கள் பற்றியும் பொறுப்புக்கள் வகிப்பதற்கு எந்தவகையில் தகுதியானவர்கள் என்ற கேள்வியை மனிதவுரிமை ஆர்வலர்கள் எழுப்புகின்றனர்.

சுயவிருப்பு வெறுப்புக்களுக்கு இடம்கொடுக்காமலும், பாரபட்ச மற்றும் தனது நடவடிக்கைகள் அமையுமென்று கூறிய நவநீதம் பிள்ளையின் செயற்பாடுகள் நம்பகத்தன்மையை இழந்திருக்கின்றது.

இந்த நிலையில் நவநீதம் பிள்ளை தயாரிக்கும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையானது இலங்கை அரசுக்கு ஏற்புடையதாகவோ, நிலைமையை மேம்படுத்துவதற்கு உதவுவதாகவோ அமையப் போவதில்லை என்ற கவலைகள் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மறுபக்கத்தில் தமிழ்மக்களுக்கு நவநீதம்பிள்ளையின் வருகையினால் கிடைத்த பலன் எதுவுமில்லை. தமிழ் மக்களிடையே எதிர்பார்ப்பையும், சிங்கள கடும் போக்குச்சக்திகளிடையே கடுமையான எதிர்ப்பையுமே நவநீதம் பிள்ளை சம்பாதித்துக் கொண்டுள்ளார்.

நவநீதம் பிள்ளையின் இலங்கை விஜயத்தை பயன்படுத்திக் கொண்டதில் கூட்டமைப்பினரே வெற்றி பெற்றுள்ளனர். இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் நவநீதம்பிள்ளையோ, ஒபாமாவோ வருகை தந்தாலும் அவற்றை யிட்டுக் கவலைப்படும் நிலையில் இலங்கை அரசு இல்லை.


எவரும் வரலாம், போகலாம் யுத்தத்துக்குப் பின்னர் இலங்கை தேசம் மெல்ல எழுந்து வருவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கும் உண்மைநிலையை நேரடியாக வருகை தந்து அவதானித்து இருக்கின்ற குறைபாடுகளை நியாயமாக சுட்டிக்காட்டியும், தேவையான முன்னேற்றத்துக்கு உதவியும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவவேண்டுமே தவிர, பக்கச்சார்பான அழுத்தங்களுக்கும், தீர்மானங்களைத் திணிப்பதற்கும் தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்பதை இலங்கை அரசு தெளிவாக தெரிவித்து வருகின்றது.

நவநீதம்பிள்ளை கேட்டதையும், பார்த்ததையும் தவிரவும் தவறவிட்டதையும், அறிவேண்டியதையும் அவர் கூறியது போல் சுயவிருப்பு வெறுப்புக்கு இடம்கொடுக்காமல் அலசி ஆராயவேண்டும் தன்னால் மறுக்கப்பட்ட உரிமை மறுப்புக்கும், கருத்துச் சுதந்திர மறுப்புக்கும் முதலில் நியாயமான தீர்வு காணவேண்டும்.



-சிவன்-





# காலமள்ளிய கனவுகளும் நீழும் நினைவுகளும்..

**றொட்டி** சுடுபவர்கள் ஒருபுறம்... தேநீர் வைப்பவர்கள் ஒருபுறம் என ஏதோ வீட்டில் மகிழ்ச்சியாக இருப்பதுபோல அவர்களின் மணித்துளிகள் கரைந்து கொண்டிருந்தது.

அவள் தன்கையால் சுட்ட ஒரு றொட்டியை என்னிடம் கொண்டு வந்துகொடுத்து..

"இது நான் சுட்டது... எப்பிடி ரேஸ்ற்" என்று சிரித்தபடி கேட்டாள். நான் மௌனமாக அதை வாங்கிச் சாப்பிட்டேன்.

அவள் எனக்காய்ச் சொல்ல வைத்திருந்தது போல வாய் திறந்து சொல்லத் தொடங்கினாள். "என்ரை வாழ்வோ, சாவோ அது இந்த மண்ணிலைதான். நாங்கள் சின்ன வயதிலயிருந்து ஒருத்தருக்கொருவர் மனதளவில் நாங்கள் கனவுகண்டபடி வாழ்ந்திட்டம். ரெண்டுபேரும் இந்த தேசத்திற்கு என்ன செய்யவேணுமோ அதைச் செய்தோம். எங்கடை போராட்டம், வாழ்க்கை, காதல் எல்லாம் நாங்கள் இல்லாமப் போனாலும் உயிரோடை வாழவேணும்... அதுக்கு நீங்கள் கட்டாயம் இங்கையிருந்து தப்பிப் போகத்தான் வேணும்"

அவள் எவ்வித தளம்பலுமின்றிச் சொல்லி முடித்தாள். துப்பாக்கிச் சத்தங்கள் எங்களை நெருங்கிக்கொண்டிருந்தது. அவள் எப்படியாவது என்னை அனுப்பிவைப்பதிலேயே குறியாக இருந்தாள்.

தனது நாட்குறிப்பிலிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்து அந்த வீரம்விழைந்த பூமியில் தான் சங்கமிக்கப்போகும் மண்ணில் கொஞ்சம் எடுத்து சிறுபொதியாகச் சுற்றித்தந்தாள்.

முதல்முதலாய் அன்று அந்த நொடியில் அழுதேன். அவளையும் அவளும் நானும் சேர்ந்து காதலித்த அந்தத் தாய்மண்ணைப் பிரியமுடியாத கொடுவலி என் கண்ணீராய் பெருகிக்கொண்டிருந்தது.

அவள் என்னைவிட்டுத் தள்ளிப்போனாள். திரும்பிப் பார்க்காமல் கையசைத்தாள். அத்துடன் எங்கள் தாயகத்திடமிருந்தும் அவளிடமிருந்தும் பிரியமனமின்றி இறுதி விடை பெற்றேன். துப்பாக்கிச் சத்தங்கள் நெருங்கி விட்டது. சிறிதுநேரத்தில் அந்த இடம் புகை மண்டலமாக மாறும்.

அந்தப் புகையில் அவளும் அவளுடைய தோழிகளும் கரைந்து அவள் என்னைவிட அதிகமாய் நேசித்த தாய்மண்ணுடன் கலந்து விடுவாள். நான் நடக்கிறேன். எனது உயிர் எனது காதல் எனது நேசிப்புக்குரிய அவள் நான் நடந்துகொண்டிருந்த அந்தக் காற்றோடு கலக்கிற சத்தத்தை உணர்கிறது என் காதுகள்.... திரும்பிப் பார்க்கத் துடித்த விழிகளை சனங்களுக்கு நடுவில் எறிகிறேன். கடைசிப் பிரிவில் அவள் கலங்காமல் போக நான் கண்ணீரோடு அவள் கலந்த காற்றைச் சுமந்துகொண்டு போகிறேன்.

ஒருகாலம் எமது எதிரிகள். எதிரியாகவே எம்மோடு போர் புரிந்தவர்கள் முன் நிராயுதபாணிகளாய் நிற்கிறோம். கேள்விகள், விசாரணைகள் என நாம் பிரிக்கப்படுகிறோம் எம்மிடம் எஞ்சியிருந்த எல்லாவற்றையும் சோதனையென்ற பெயரால் அவர்கள் கைப்பற்றுகிறார்கள். எனது காற்சட்டைப் பையில் பத்திரமாயிருந்த அவள் அள்ளித் தந்த மண்ணை ஒருவன் தட்டி விழுத்துகிறான்... என்னுயிரின் கடைசி நினைவும் கடைசி ஞாபகமும் அந்த இடத்தில் கால்களில் மிதிபடுகிறது.....

அவள்கொடுத்த ஒரு பிடி மண் சுற்றப்பட்டிருந்த அவளுடைய நாட்குறிப்பின் தாளில் எழுதப்பட்டிருந்த வரிகள் அவள் உரைத்த கீதையாக!! எனக்குள் நெருப்பை விதைக்கிறது...

காலமள்ளிக் கனவைக் களவாடிச் சென்றாலும் காதலியே என் இனிய கனவின் தேவதையே நீவிட்டுச் சென்ற காதலையும் உனது தேசப்பற்றையும் விடுதலையுணர்வையும் எனது உயிரணுக்களில் சுமந்து கொண்டுபோகிறேன்...

வருடங்கள் இரண்டைக் காலம் எட்டித் தொட்டுவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. அவளது நினைவுகள் வந்து நெஞ்சைத் துளைக்கிறது.

அவளைத் தனியேவிட்டுக் கடல் கடந்து வந்தது சுயநலம் என்று என் முகமே என்னை வெறுப்பதுபோல் என்னுள் ஆயிரம் கனவுகள் இரவுகளைக் கொல்கிறது...

(முற்றும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை -76

மணியம்

(அந்தக் காணிகளை சட்டப்படி ஈடுவைக்கவோ, நீதிமன்றங்களில் உறுதிப் பிணையாக சமர்ப்பிக்கவோ, சட்டப்படி விற்கவோ முடியாது) அந்தக் காணிகளின் பெர்மிட்டுகளை காணி அதிகாரிகள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி எந்தநேரமும் ரத்துச் செய்யமுடியும்.

எஸ்.டியின் கிளிநொச்சி விஜயத்தின்போது, கிளிநொச்சி நகரை அண்டியுள்ள திருவையாறு படித்த வாலிபர் திட்டத்துக்கும், பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலிருந்த விசுவமடு படித்த வாலிபர் திட்டத்துக்கும் செல்வதும் உள்ளடங்கியிருந்தது. அத்துடன் மிருசுவிலில் அமைந்திருந்த படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்கும் செல்ல ஏற்பாடாகி இருந்தது. இந்த இடங்களில் காணி பெற்றிருந்த பெரும்பாலோர் எமது விவசாயிகள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தனர்.

எஸ்.டி.பண்டாரநாயக்கா திருவையாறு குடியேற்றத் திட்டத்துக்கு வருகை தருவதற்கு முதல் நாள், அங்கு பொறுப்பாக இருந்த குடியேற்றத் திட்ட அதிகாரியிடம் (Colonization Officer) நேரடியாக வருகைதந்த அப்போதைய கிளிநொச்சி காரியாதிகாரி (D.R.O - இப்போதைய உதவி அரசாங்க அதிபர்) இ.யோகநாதன், கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி. பண்டாரநாயக்கவை திருவையாறு படித்த வாலிபர் திட்டத்துக்குள் உள்நுழைய அனுமதிக்கக் கூடாது என, அப்போதைய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரவிடம் இருந்து தனக்கு அறிவித்தல் வந்துள்ளதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

இந்தச் செய்தி அப்பொழுது திருவையாறு முதலாம் படிவத்தில் மட்டும் காணி பெற்றிருந்த 102 வாலிபர்களையும் கொதிப்பேற்றி விட்டது. அப்பொழுது அங்கு குடியேற்றத்திட்ட அதிகாரியாக இருந்தவர் ஆ.துரைராஜா. அவர் கரவெட்டி ஆசீர்வாதம் தம்பதிகளின் புதல்வர். நேர்மையானவர். குடியேற்றத் திட்ட இளைஞர்களின் அன்பைப் பெற்றவர். அவரது தந்தையாரும் தாயாரும் இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் கனிஸ்ட பாடசாலையில் அதிபராகவும் ஆசிரியராகவும் கல்வி கற்பித்த காலத்தில், நான் அவர்களிடம் இரண்டாம் வகுப்பு வரை கல்விகற்றிருக்கிறேன். அவர்களுக்கு பரந்தன் பகுதியில் நெல் வயலும் வீடும் உண்டு. அதன் காரணமாக துரைராஜா எம்மீது அனுதாபமாக இருந்ததுடன், கா.பொ.இரத்தினத்தின் பழிவாங்கும் அரசியலுக்கும் எதிராக இருந்த ஒருவராவார்.

அரசாங்க அதிபரின் தடைச் செய்தியை எடுத்துவந்த இ.யோகநாதன் அவர்களும் அப்பொழுது எம்முடன் நேசமானவராகவே இருந்தார். அதற்கொரு காரணம், அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்களிடம் கல்வி கற்றமையாகும்.

தோழர் கார்த்திகேசன் மீது இருந்த ஈடுபாட்டின் காரணமாக தேர்தல் காலங்களில் யோகநாதனின் குடும்பத்தவர்கள் கார்த்திகேசனையே ஆதரித்துவந்தனர். திரு.யோகநாதன் அவர்கள் கிளிநொச்சி காரியாதிகாரியாகப் பொறுப்பேற்க வந்தவுடன், முதன் முதலாக அவருக்கு அங்குள்ள அரச உயர் அதிகாரிகளாலும், நண்பர்களாலும் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்துபசாரத்துக்கு, அப்பொழுது கிளிநொச்சியில் கட்சி - விவசாய சங்கப்பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த தோழர் நா.யோகேந்திரநாதனுக்கும் எனக்கும்கூட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்றால், அதற்கு அந்த தொடர்பே காரணம்.

எனவே அரச அதிபரின் உத்தரவைக் கொண்டுவந்த யோகநாதன், இது முற்றுமுழுதாக கா.பொ. இரத்தினத்தின் வேலை என்பதை இரகசியமாகத் தெரிவித்ததுடன், தந்திரோபாயமாக எஸ்.டியின் கூட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி முடிக்கும்படியும் சொல்லிச் சென்றார். (அவர் பின்னைய காலங்களில் பதவி உயர்வு பெற்று மட்டக்களப்பு அரசாங்க அதிபராகவும் பணி புரிந்தார்) இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில், குடியேற்றத் திட்ட அதிகாரி துரைராஜா அவர்களை எந்தவொரு கட்டத்திலும் சிக்கலில் மாட்ட நாம் விரும்பவில்லை.

எனவே கூட்ட ஒழுங்குகள் குறித்து திருவையாறு படித்த வாலிபர் திட்ட இளம் விவசாயிகளுடன் நாம் கலந்தாலோசித்தோம். அவர்கள் துணிகரமாகவும் சிறப்பாகவும் ஒரு ஆலோசனையை முன்வைத்தனர். சிலவேளைகளில் 'மெத்தப்படித்த' மேதாவிகளைவிட, சாதாரண மக்களின் ஆலோசனைகள் பயனும் சக்தியும் வாய்ந்தவை என்பதற்கு அவர்கள் வழங்கிய ஆலோசனை ஒரு உதாரணம்.

அவர்களது ஆலோசனைப்படி, அன்றைய தினம் குடியேற்றத் திட்ட அதிகாரி துரைராஜா, எஸ்.டி. பண்டாரநாயக்கா கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளத் தேவையில்லை. அதே வேளையில் அங்குள்ள காரியாலயத்தில் உள்ள தளபாடங்கள் குடியேற்றவாசிகளுக்குச் சொந்தமானது என்றபடியால், அவற்றை எடுத்துவந்து முன்னால் உள்ள வீதியில் போட்டு கூட்டத்தை நடாத்துவது. அவர்கள் திட்டப்படியே தளபாடங்கள் யாவும் எடுத்துவரப்பட்டு, வீதியில் நின்ற முதிரை மர நிழலில் போடப்பட்டு கூட்டம் சிறப்பாக நடாத்தப்பட்டது.

பாருங்கள்! இன்றும் மூச்சுக்கு மூச்சு 'சிங்களவனின் அடக்குமுறை' பற்றியும், 'தமிழனின் பெருமை' பற்றியும் பேசும் இந்த தமிழ் தேசியப் 'பண்டிதர்கள்', இலங்கை மக்களின் பெரு மதிப்புக்கும் கண்ணியத்துக்கும் உரிய ஒரு அரசியல் தலைவருக்கு, அதுவும் தனது ஒரு சக பாராளுமன்ற உறுப்பினருக்கு தனது தொகுதியில் கொடுத்த கௌரவத்தை!

அதேநேரத்தில் கா.பொ.இரத்தினத்தின் இந்த அசிங்கமான செய்கையைக் கேள்விப்பட்ட, அப்பொழுது கிளிநொச்சி பட்டினசபையின் தலைவராக இருந்த (அதற்கு முதல் அது கரைச்சி கிராம சபையாக இருந்த போதும் தலைவராக இருந்த) வீ.ஆனந்தசங்கரி, தான் நீண்டகாலம் உறுப்புரிமை பெற்றிருந்த லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து விலகி தமிழ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருந்த போதிலும், அதையும் பொருட்படுத்தாது திருவையாறுக்கு விரைந்து வந்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டது மட்டுமின்றி, எஸ்.டிபண்டாரநாயக்காவின் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்ததுடன், எஸ்.டிபண்டாரநாயக்காவையும் எம்மில் சிலரையும் கரடிப்போக்கு சந்தியிலிருந்த தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று மதிய போசனம் தந்ததுடன், எஸ்டி.பண்டாரநாயக்கா மாலை நிகழ்ச்சிக்கு விசுவமடு செல்வதற்காக தனது செலவில் வாடகைக் கார் ஒன்றையும் ஏற்பாடு செய்துதந்தார்.

## விவசாயப்படையை கலைத்தது

இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்டி.பண்டாரநாயக்க அவர்களது கிளிநொச்சி வருகைக்கு முட்டுக்கட்டை போட முயன்ற அத்தொகுதியின் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம், அதேவேளையில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி கூட்டரசாங்கத்தில் காணி - நீர்ப்பாசன அமைச்சராகப் பதவி வகித்த சி.பி.டி.சில்வாவை அதற்கடுத்த வாரம் கிளிநொச்சியில் வரவேற்பதற்குத் தடல்புடல் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

இந்த சி.பி.டி.சில்வா ஒரு தீவிரமான சிங்களப் பேரினவாதி. 1958இல் நடைபெற்ற இன வன்செயலின்போது, தனது மின்னேரியா தொகுதியில் காடையர்களைக் கொண்டு பல தமிழர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர். இந்த விடயத்தை எஸ்.டி.பண்டாரநாயக்க பங்குபற்றிய திருவையாறு கூட்டத்தில் குறிப்பிட்ட திரு.வீ.ஆனந்தசங்கரி, கா.பொ.இரத்தினம் அமைச்சர் சி.பி.டி.சில்வாவை கிளிநொச்சிக்கு அழைத்துவரும்போது கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அன்றைய தினம் ஆனந்தசங்கரி அளித்த மதிய போசனத்தில் கலந்துகொண்ட பின்னர், விசுவமடுவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவசாயிகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக எஸ்.டி. பண்டாரநாயக்கவுடன் அங்கு சென்றோம்.

நாம் அங்கு சென்ற வேளையில் மாலையாகி விட்டதால், அங்கு தினசரி கூலி வேலை செய்வதற்காகத் தருமபுரம் குடியேற்றக் கிராமத்திலிருந்து வரும் நூற்றுக்கணக்கான பெண்களும் ஆண்களும் தமது வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

தருமபுரம் கிராம மக்கள் முழுக்க முழுக்க கூலி விவசாயிகள். அவர்கள் முன்னர் வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், மதவாச்சி போன்ற இடங்களில் வாழ்ந்தவர்கள்.

(தொடரும்...)




ஒவ்வொன்றும் அவர்கள் பாலஸ்தீன்காரர்கள் என்று சொல்லிச் சொல்லி வழங்கப்பட்டன.

கொஞ்சம்கூர்ந்து கவனிக்க வேண்டும். நெப்போலியன், ஒரு பாதுகாப்பு கருதியே யூதர்களைத் தொடர்ந்து பாலஸ்தீன்காரர்கள், வந்தேறிகள் என்று ஒவ்வொரு கட்டத்திலும் சொல்லி வந்திருக்கிறார். அதாவது பிரெஞ்சுக்காரர்களின், பாதுகாப்பு, யூதர்கள் அங்கே மெஜாரிடிகளாக ஆகி, பெரிய அளவில் பிரச்சினைக்கு வித்திட்டுவிடக் கூடாதே என்கிற பாதுகாப்புணர்வு. ஆனால் யூதர்களைப் பொறுத்த அளவில் இதை வேறுவிதமாக எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

ஐரோப்பாவில் வேறு எந்தப் பகுதியிலும் வாழக்கூட முடியாத சூழ்நிலை அவர்களுக்கு. எங்கே போனாலும் உதைத்தார்கள். எந்த ஒரு கிருத்தவ தேசத்திலும் அவர்களுக்கு நிம்மதி இல்லாத சூழ்நிலை. அப்படிப்பட்ட காலகட்டத்தில், வந்தேறிகள் என்று சொல்லியாவது இந்த நெப்போலியன் வாழ வழி கொடுக்கிறாரே என்கிற ஆறுதல் ஒரு பக்கம். அதிர்ஷ்டப் பரிசு மாதிரி பாலஸ்தீனிலிருந்து வந்தவர்கள் என்று திரும்பத்திரும்பச் சொல்கிறாரே, அந்த இடம் நம்முடையது தான் என்பதை இதுவே உலக மக்கள் மனத்தில் பதியச் செய்கிறதே என்கிற இரகசிய சந்தோஷம் இன்னொருபுறம்.

கி.பி.1799இல் நெப்போலியன் எகிப்திலிருந்து சிரியா நோக்கி படைநகர்த்திச் சென்றுகொண்டிருந்தார். நெப்போலியனின் போர்த்திட்டங்கள், நாடுபிடிக்கும் வேட்கை போன்ற விஷயங்களெல்லாம் மிகப் பெரிய கதை. பாலஸ்தீன் சரித்திரத்துடன் சம்பந்தப்படாதது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட படையெடுப்பு மட்டும் சம்பந்தம் கொண்டது என்பதால் இதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

நெப்போலியனின் அப்போதைய நோக்கம், இன்றைக்குச் சிரியாவிலும் அன்றைக்குப் பாலஸ்தீனிலும் இருந்த ஏக்ர் நகரக் கோட்டையைப் பிடிப்பது. சரித்திரகாலம் தொட்டு மிகமுக்கியமான நகரமாகக் கருதப்பட்டு வந்தது ஏக்ர்.

மாபெரும் வீரர் மிகப்பெரிய படை வைத்திருப்பவர் என்றாலும் அந்த முற்றுகை நெப்போலியனுக்கு வெற்றி தரவில்லை. காரணம், துருக்கியப் படைகள், அப்போது பிரிட்டிஷ் படைகளின் ஒத்துழைப்புடன் நெப்போலியனை எதிர்த்து நின்றது.

இதுவும் மிக முக்கியமானதொரு நிகழ்வு. முதல்முறையாக பாலஸ்தீன் பிரச்சினையில் அப்போதுதான் பிரிட்டன் தலையிடுகிறது. அதுவரை பிரிட்டன் கவனத்துக்கு உட்பட்ட பிரதேசமாக பாலஸ்தீன் இல்லை. பிரிட்டனின் ராணி எலிசபெத் 'கிருத்தவரல்லாத யாரும் பிரிட்டனில் வாழ லாயக்கற்றவர்கள்' என்று யூதர்களைக் குறிவைத்து அறிவித்திருந்த சமயமும்கூட அது.

ஏக்ர் கோட்டையைப் பிடிக்கும் எண்ணத்துடன் எகிப்திலிருந்து இன்றைய இஸ்ரேல் வழியே புறப்பட்டு வந்த நெப்போலியன் அப்போது ரமல்லாவில் தங்கியிருந்தார். ரமல்லாவில் சும்மா இருக்கும் நாட்களை வீணாக்க வேண்டாம் என்று அவர் அங்கிருந்த யூதர்களை ஒருங்கிணைத்து ஒரு சிறிய அணிவகுப்புடன் கூடிய 'நீதி கேட்கும் நெடும் பயணத்தை' மேற்கொண்டார். அந்தப் பேரணியின்போது அவர் அறிவித்தார். "யூதர்களே, எனக்கு உதவுங்கள். துருக்கியப் படையை நான் வெற்றி கொள்ள முடியுமானால் நீங்கள் நிம்மதியாக உங்கள் ஜெருசலேத்துக்குத் திரும்புவதற்கு நான் உதவி செய்கிறேன்.

இது ஒரு இராஜதந்திர அறிவிப்புத்



தான் என்றாலும் யூதர்களுக்குப் பரவசமூட்டப் போதுமான அறிவிப்பாக இருந்தது. ஏராளமான யூதர்கள் அப்போது நெப்போலியனின் படையில் இணைந்ததாகப் பல வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. பெரெக் ஜோஸ்லெவிச் என்கிற புகழ்பெற்ற யூத வீரர் அப்போது நெப்போலியனின் ஒரு படையில் சாதாரண வீரராகச் சேர்ந்தவர். பின்னாளில் அவரது படையில் கேணல் அளவுக்கு உயர்ந்து, ஆஸ்திரியப் போரில் உயிர்துறந்தவர்.

ஆனால் ஏக்ர் கோட்டைக்கான யுத்தத்தில் நெப்போலியன் தோல்வியடைய நேரிட்டபிறகு யூதர்கள் விஷயத்தில் அவர் அத்தனை ஆர்வம் செலுத்தவில்லை.

சரியான காரணங்கள் ஏதுமில்லை என்றபோதும் அவருக்கும் யூதர்கள் மீது கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டது உண்மை. அவர்களுக்கு வழங்கியிருந்த, வரையறுக்கப்பட்ட சுதந்திரத்திலேயே நிறைய புதிய வரையறைகளைச் சேர்த்தார். குறிப்பாக, நெப்போலியனின் இறுதிக்கால ஆட்சியின் போது யூத வர்த்தகர்கள் ஏராளமான வரிச்சுமைக்கு ஆளாக நேர்ந்தது. பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில், பல மானியங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. கொஞ்சம் வாலை நறுக்கி வைக்கலாம் என்று நெப்போலியனுக்கும் ஏன் தோன்றியது என்று தெரியவில்லை. ஆனாலும் அப்படித்தான் அவர் நடந்துகொண்டார்.

ஆனால் அவரது காலத்தில் போலந்து, லித்துவேனியா, பிரான்ஸ், (ஜெர்மனியிலுள்ள) ஹம்பார்க் நகரம் போன்ற இடங்களில் சரசரவென்று யூதர்களின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போனது. எங்கிருந்துதான் இவர்கள் வருகிறார்களோ என்று வியந்து முடிப்பதற்குள்ளாகவே பல இலட்சக்கணக்கான யூதர்கள் அந்தப் பகுதிகளில் குடியேறிவிட்டார்கள்.

அப்போது ரஷ்யாவும் நிலப்பரப்பு விஸ்தரிப்பில் தீவிர கவனம்செலுத்திக் கொண்டிருந்தது. இந்த விஷயத்தில் அப்போது நெப்போலியனுக்கு நிகரான ஆர்வம், ரஷ்யாவை ஆண்டு கொண்டிருந்த ஜோர் மன்னர்களுக்கும் இருந்தது. கி.பி.1772 தொடங்கி, 1815ஆம் ஆண்டு காலகட்டத்துக்குள் போலந்து, லித்துவேனியா உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன.

யூதர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட காலகட்டம் கொஞ்சம் சாதகமாக இருந்தது. அன்றைய ரஷ்ய அரசுத்தரப்பின் மிக முக்கிய நபராக விளங்கிய இளவரசர் பொட்ம்கின், சிலபல அரசியல் காரணங்களை உத்தேசித்து, யூத ஆதரவுநிலை எடுத்தார். ஐரோப்பாவில் வாழமுடியாத யூதர்களெல்லாம் ரஷ்யாவுக்கு வந்து, அதன் தென்பகுதி மாகாணங்களில் (அவை யாவும் குட்டி நாடுகள்) வாழத்தொடங்கலாம் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

அப்போதைய ஜோர் மன்னரின் பெயர் கேதரின் 2. மகா கேதரின் என்று அவர் தம்மைச் சொல்லிக்கொண்டார். மக்கள் சொன்னார்களா என்று தெரியவில்லை. அவரது விருப்பத்தின்படி, இளவரசர் பொட்ம்கின், ரஷ்யப் படையில் ஒரு யூதப்பிரிவை உருவாக்கினார். இந்தப் படை உருவாக்கப்பட்ட தன் ஆதார நோக்கமே, துருக்கியுடன் ஒரு யுத்தத்தை உத்தேசித்துத்தான். திரும்பத்திரும்ப துருக்கி, திரும்பத்திரும்ப பாலஸ்தீன் ஆசைக்கனவு. முன்பு நெப்போலியன் என்றால் இப்போது ஜோர். அவ்வளவுதான் வித்தியாசம்.

அந்த யூதப் படைப்பிரிவுக்கு பொட்ம்கின், இஸ்ரேலவ்ஸ்கி என்று பெயரிட்டார். இதுவும் ஒரு அரசியல் காரணத்தை உத்தேசித்துத்தான். இஸ்ரேல் என்றொரு தேசம் குறித்தெல்லாம் யூதர்கள் அப்போது சிந்திக்கக்கூட இல்லை. ஆனாலும் இனத்தின் பெயரால் அவர்களை ஒருங்கிணைத்து, இடத்தின் பெயரால் வழிநடத்த இது ஒரு உபாய மாகப் பயன்படும் என்று கருதி ரஷ்ய இளவரசர், புராதன ஹீப்ரு பைபிளில் வரும் இஸ்ரவேலர்களின் புத்திரர்களை நினைவுகூர்ந்து இப்படியொரு பெயர் சூட்டி யூதர்களைப் புளகாங்கிதமடையச் செய்தார்.

1768லிருந்து, 1774 வரை ஒரு யுத்தம். பிறகு 1787லிருந்து 1792 வரை ஒரு யுத்தம். ஆகமொத்தம் துருக்கியுடன் இரண்டு யுத்தங்கள். இரண்டுமே வெற்றி பெறவில்லை. மாறாக ஒட்டுமொத்த அரேபிய முஸ்லிம்களுக்கும் யூதர்கள் நிரந்தரப் பகைவர்களாக ஆவதற்குப் பெரியளவில் ஒரு பிள்ளையார் சுழி-யைப் போட்டுவைத்தன.

இத்தனைக்கும் ஒட்டாமான் துருக்கிய மன்னர்கள், யூதர்களுக்கு எத்தனையோ வசதிகள் செய்துதந்து, பாலஸ்தீன் உட்பட துருக்கியப் பேரரசின் அத்தனை இடங்களிலும் சர்வ சுதந்தரமுடன் வாழ அனுமதித்திருந்தார்கள்.

(தொடரும்...)



# "இளைஞர்களே! உங்களோடு சில நிமிடங்கள்"

இளைஞர்களே! உங்களோடு மனம் திறந்துபேசுகின்றேன், பேசமுயற்சிக்கின்றேன். நாளைய சமுதாயத்தின் மன்னர்கள் நீங்களே. வெறுமன உசுப்பேற்றுவதற்காக இதனைச் சொல்லவில்லை. உண்மை அதுதான்! இளைஞர் சக்தி தவறான பாதையில் செல்லக்கூடாது. உங்களுடைய தவறான பயணம் முழுச்சமூகத்தையும் சீரழித்துவிடும்.

இளைஞர்களே! உங்கள் மனதில் நல்ல இலட்சியம் உருவாக்கப்படல் வேண்டும். அந்த இலட்சியத்தைச் சுற்றிய தேவையற்ற பகுதிகளைச் செதுக்கி அகற்றவேண்டும். ஒரு கல்லிலிருந்து வேண்டாத பகுதிகளை வெளியேற்றிவிட்டால், மாசுக்களை நீக்கிவிட்டால் உள்ளிருந்து அழகான சிற்பம் வெளிப்படுகிறது. நாம் பொழுது போக்கிப்பாழாக்கும் ஒவ்வொருநாளும் மரணத்தை நோக்கி அழிவைநோக்கி எடுத்துவைக்கும் அடியாகும்.

பாட்டில் பாட்டிலாக விதவிதமான கல், சாராயம்... மதுவகைகளைக் குடித்துவிட்டு விதவிதமான கறிகளைச் சுவைத்து, பலபல பெண்களோடு உறவுகொண்டு எழுந்து நோய்வந்து நொந்துமூச்சு இளைத்து, வாதம் கபம் வந்து கொடூரமாக இறுமி இறந்துபோகிற மூடத்தனம், வெறிபிடித்த மாதிரி மரணத்தை நோக்கி பார்த்து ஓடுகின்ற தன்மை, இவைதான் வாழ்வின் இலட்சியமா?

இன்றைய இளைஞர்கள் அறிவுடையவர்கள் என்பதில் மறுப்பில்லை. ஆனால் செதுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். செதுக்க வேண்டிய பல பகுதிகள் உண்டு. சாதி, வறுமை, அறியாமை, பழியுணர்ச்சி, பகைமை... போன்றவற்றை முதலில் நீக்கியாகவேண்டும். அப்போது தான் நல்ல ஊர் உருவாகும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பது பழமொழி. அதற்கு இடம்கொண்டு பொருள் கொள்ளவேண்டும். உயிரோடு இருக்கும் போதே உன் தவறுகளைத் திருத்திக்கொள்.

இளைஞர்களே உங்கள் வாழ்வை உயர்த்துங்கள். இதற்கு முதலில் நல்ல கல்வி அவசியம். இப்போது பாடசாலைக்கு செல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

வாழ்க்கை உணவினால் மட்டும் ஆனதல்ல. வாழ்க்கைக்கு களிப்பும், மகிழ்ச்சியும் தேவை. இன்றைய பொழுதுபோக்கு சாதனைகள் நமது கலாசார பண்பாடுகளைச் சீரழிக்கின்றன. களிப்பும் மகிழ்ச்சியும் இசை, நாடகம், திரைப்படம் ஆகியவற்றினால் கிடைக்கும் இன்று, எங்கும் திரைப்பட மயக்கம். அந்தத் திரைப்படங்கள் இளைஞர்கள் தீயவழியில் செல்வதற்கு காரணமாக அமைகின்றன. இன்றைய திரைப்படங்களில் காமக்களியாட்டம், வன்முறை நிகழ்ச்சிகளே அதிகம் இடம்பெறுகின்றன. திரைப்படம் ஒரு நல்ல கலையே. இவற்றைப்பார்த்து உங்கள் வாழ்வைச் சீரழிக்காதீர்கள். நல்லதோர் மனிதப்பிறவி, அதனைப் பயனுடைய முறையில் அனுபவிக்கவேண்டும்.

தமிழ் முத்தமிழாகவே பிறந்தது. வளர்ந்தது. தமிழிசை வளர்த்த இசை கிராமம்தோறும் கலைப்பயிலகங்கள் உருவாகவேண்டும். இளைஞர்கள் நாடகமன்றங்கள் அமைத்து நல்ல நாடகங்களை எழுதி நடித்துப்பயில வேண்டும். முன்புபோன்று பௌர்ணமி தினங்களில் கலை நிகழ்வுகள் நடைபெறவேண்டும். மக்கள் வாழ்க்கையைச் சுமையாக கருதாமல் நடத்துவதற்குக் கலை துணைசெய்யும்.

இன்றைய இளைஞர்கள் மாதா, பிதா, குருவை மதிக்கும் பண்பை இழந்து வருகிறார்கள். பெரியோரை மதிக்காத தன்மை, காட்டுமிராண்டிக் கூட்டத்தை உருவாக்கிவிடும். நமது இதிகாச புராணங்கள் பெரியவரை மதிப்பதன் தேவையை விளக்குவதற்காகவே உருவாகின. நல்ல பண்புகளை எடுத்துக் கூறின. பெரியவர்களின் தவறுகள் இளைஞர்களைப் பாதிக்கிறது என்பதும் உண்மையே. ஒவ்வொருவரும் தமக்கு விதிக்கப்பட்ட பண்பாடுகளை மறக்கக்கூடாது. நல்ல குருவை மாணவன் என்றும் மனதில் வைத்திருப்பான்.

இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியில் தனிப்பட்ட முறையிலும் கூட்டுமுறையிலும், பங்கேற்கவேண்டும். நமது நாடு சட்டத்தால் ஆளப்படுவது. ஆதலால் சட்டத்திற்கு மதிப்பளித்து ஒழுகவேண்டும். நடந்துகொள்ளவேண்டும். சட்டமும் விதிமுறைகளும் மதிக்கப்படும் நாட்டில்தான் மக்களாட்சி முறை பயன்தரும்.

சட்டத்தை முடமாக்குவது அராஜகத்திற்கு வழிவகுக்கும். இன்று வீதி ஒழுங்கு பேணப்படுவதில்லை. பொதுஇடங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற பண்பு தெரியாமல் நடந்துகொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

நீதிமன்றங்களை நோக்கிய இளைஞர் படையெடுப்பு அதிகரித்துவருவது வேதனை தருகிறது. இளைஞர்களின் மனநிலையில் மீண்டும் ஆரோக்கியமான நிலை வரவேண்டும். இதற்கு இளைஞர்களுக்கு நல்ல ஆன்மீகம் புகட்டப்படல் வேண்டும். நமது நாடு சமயநெறிகளில் , செழித்துவளர்ந்த நாடு. யாழ்ப்பாண கலாசாரம், கந்த புராண கலாசாரம் எனப் போற்றப்பெற்றது, என்பதை நினைக்க வேண்டும். ஆன்மீகம் என்பது கடவுள் நம்பிக்கை மட்டுமல்ல, வழிபாடு மட்டுமல்ல. சமயநெறி சார்ந்த சடங்குகளும் அல்ல.

ஆன்மீகம் என்பது ஆன்மாவின் உயிரின் தரத்தை உயர்த்திக்கொள்ளும் கொள்கை, வாழ்க்கைமுறை, அன்பு, பொறுத்தாற்றும் பண்பு, மனிதர்கள் மீது விருப்பு. வெறுப்பற்ற உளப்பாங்குடன் பழகுதல், பிறிதின் நோய், தந்நோய் போல் போற்றுதல் ஆகிய உயர்பண்புகளைப் பெறும் முயற்சி முதலியன ஆன்மீகம்

இந்த முயற்சியுடைய வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கை இவைகளைத் தனியே பெறமுடியாத நிலையில் பெறுதலுக்குரிய சாதனம் கடவுள் வழிபாடு! கடவுளை "எண்குணத்தான்", "குறைவிலாநிறைவு", "கோதிலா அமுது" என்றெல்லாம் போற்றுவர். கடவுளை வழிபடுதல் என்பது கடவுள் வழிநிற்றல் என்பதாகும்.

கடவுளை முன்னிட்டு வழிபாடு நிகழினும் அந்த வழிபாடு கடவுளுக்கல்ல. ஆன்மாக்களுக்கே! அன்பின் பழுத்த மனம் பெறுதல் ஆன்மீகம், பிறருக்கென முயலும் வாழ்க்கை நெறி, ஆன்மீகநெறி, தியாகங்கள் செய்வது, ஆன்மீக வாழ்க்கையின் அடையாளம், தியாகமில்லாத வழிபாடு பயனற்றது.

நாம் அனைவரும் ஆன்மாவில் சிறந்து விளங்குவதே இலட்சியம்!

**"ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்**
**உலகு இன்பக் கேணி"**

என்ற சிந்தனை நமது வாழ்வாக மலரவேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவழவேல்**

# போராட்ட காலத்தில் பாராமுகம் அமைதி சூழலில் பதவி மோகம்

மூன்றாவது கட்டப் போராட்டம் நடக்கின்றது என்று வீரச் சூளுரைத்துள்ளார் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன். ஜனநாயக வழிகளில்வந்த போராட்டம் முதலாவது கட்டமாம். ஆயுதப் போராட்டம் இரண்டாவது கட்டமாம். இப்போது நடப்பது மூன்றாவது கட்டமாம். தமிழ் மக்களின் போராட்டம் பற்றித் திரும்பியும் பார்க்காமல் தனது பதவியையும் பதவிசார் நலன்களையும் பாதுகாப்பதிலேயே அக்கறையாக இருந்தவர் இப்போது, வடக்கில் கட்டங்கள் பிரித்துப் போதனை செய்கிறார். அதனை மக்கள் ரசித்து தன்னை அரியாசனம் ஏற்றுவர் எனப்பகல் கனவும் கண்டுவருகிறார். பதவிப்போட்டி காரணமாக ஒற்றுமை என்றால் என்ன என்பதை மறந்துநிற்கும் தமிழ்க் கூட்டமைப்பினரிடம் இவர் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்.

இந்தக் கண்மூடி வித்தைக் கட்டங்கள் தான் தமிழ் மக்களின் இன்றைய நிலைக்



குக் காரணம் என்பது படித்த நீதியரசருக்கு விளங்கவில்லை. தமிழசுக் கட்சியிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை பார்த்தால் தலைவர்களின் சுயநலத் தேவைகளுக்காகக் காலத்துக்குக் காலம் கொள்கைகளை மாற்றியதே வரலாறாக உள்ளது. இதில் இப்போது நீதியரசரும் இணைந்து கொண்டுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமையை கைப்பற்றுவதற்கான ஆயுதமாக சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த தமிழரசுக் கட்சி அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கான எவ்விதமான செயற்பாட்டையும் முன்னெடுக்கவில்லை. தமிழரசுக் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி சமஷ்டியைக் கைவிட்டுத் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. பின்னர் மாவட்ட சபையை ஏற்பதற்காக அதைக் கைவிட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அவதாரம் எடுத்ததும் பாராளுமன்றப் பதவிகளைப் பாதுகாப்பதற்காக மீண்டும் புலிகளின் தனி நாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டார்கள். இப்போது எந்தக் கொள்கையும் இல்லாமல் தமது குடும்பங்கள் மற்றும் உறவினர்களுக்காக மட்டுமே செயற்படுகின்றார்கள்.

சுயநலத் தேவைகளுக்காக காலத்துக்குக் காலம் கொள்கையையும் போராட்ட வழி-முறையையும் மாற்றியதன் விளைவாகவே தமிழ் மக்கள் மோசமான அழிவுகளையும் இழப்புக்களையும் அனுபவிக்க நேர்ந்தது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் பேசுவதற்கு ஆள் தேவை என்று சம்பந்தன் கொண்டு வந்திருக்கும் நீதியரசருக்கு இந்தச் சின்ன விடயம் கூட விளங்காதிருப்பது வேதனை தருகிறது.

நீதியரசர் குறிப்பிட்ட மூன்று கட்டங்களிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரே விளைவு தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்ததுதான். இனப்பிரச்சினையின் முழுமையான தீர்வை நோக்கிய நகர்வுக்காகக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தமிழரசுக் கட்சி பயன்படுத்தவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அறுபதுகளிலும் எழுபதுகளிலும் கிடைத்த சந்தர்ப்பங்களை உதாரணமாகக் கூறலாம். தனிநாடு என்று தமிழ் மக்களுக்கு உசுப்பேற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்ததும் மாவட்ட சபையுடன் திருப்திப்பட்டார்கள்.

இரண்டாவது கட்டம் என்று நீதியரசர் கூறும் ஆயுதப் போராட்ட கட்டம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் கறுப்பு அத்தியாயம் எனக் கூறலாம். இக்காலத்திலேயே தமிழ் மக்கள் இடம்பெயர நேர்ந்தது. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நாட்டில் சாத

**இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவை என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு. ஆனால், புலம்பெயர் அமைப்புக்களின் தாளத்துக்கு ஆடும் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வைத் தவிர்ப்பது பற்றியே சிந்திக்கின்றார்கள். இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அடையக்கூடிய பாதையையே தமிழ் மக்கள் இன்றைய அரசாங்கத்தின் மூலமாகத் தேர்ந்தெடுப்பதே சிறந்த வழி. இதுபற்றியே தமிழ் மக்கள் சிந்தித்து தீர்மானமெடுத்துள்ளனர். அதற்கு இடையூறாக தமிழ்க் கூட்டமைப்பு ஒருபோதும் இருக்கக் கூடாது.**

கமற்ற சூழ்நிலை தோன்றியதற்கான பிரதான காரணம் இக்கால கட்ட செயற்பாடுகளே.

நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமை வகிக்கும் மூன்றாவது கட்டம் எந்தக் கொள்கையும் இல்லாமல் வாய்வீச்சின் மூலம் தமிழ் மக்களை வெறுமையை நோக்கி நடக்கின்றது. தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளுக்குக் கூட்டமைப்புத் தலைவர்களால் ஒரு தீர்ப்பை முன்வைக்க முடியவில்லை.

இத்தலைவர்கள் சுயமாகச் சிந்தித்து ஒரு தீர்மானத்துக்கு வர இயலாத அளவுக்குப் புலம்பெயர் அமைப்புக்களின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்கின்றார்கள். புலம்பெயர் அமைப்புக்களின் கோரிக்கைகளை நிராகரிக்கும் நிலையில் தாங்கள் இல்லை என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஒத்துக் கொள்கின்றார்கள். இவர்களை வழிநடத்தும் புலம்பெயர் அமைப்புகள் அரசியல் தீர்வை விரும்பவில்லையென்பதால் இவர்களும் அரசியல் தீர்வைத் தவிர்க்கும் வகையில் செயற்படுகின்றார்கள். இந்தத் துரோகத்தைத் தமிழ் மக்களிடமிருந்து மறைப்பதற்காகச் சர்வதேச சமூகம் என்ற வாய்ப்பாட்டை ஒப்புவிக்கின்றார்கள்.

சர்வதேச சமூகத்துக்கு ஒற்றுமையை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது இந்தத் தேர்தலில் இவர்களின் கோஷம். எதற்காக ஒற்றுமையைக் காட்டவேண்டும்? இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவா? அப்படியானால் எத்தகைய தீர்வு என்று மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகத் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமே. எந்தத் தீர்வாக இருந்தாலும் சர்வதேச சமூகம் பெற்றுத் தரட்டும் என்று கூறுகின்றார்களா? அது தான் கூட்டமைப்பின் நிலைப்பாடென்றால் எங்கள் தீர்வை நாங்கள் தீர்மானிக்க இடமளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் வேட்பாளர் தமிழக மக்களுக்குக் கூறியதன் அர்த்தம் என்ன? எல்லாமே பொய் தமிழரசுக் கட்சியில் சேர்ந்துகொண்ட ஒரு மாத காலத்தினுள்ளேயே பொய்கூறப் பழகிவிட்டார் நீதியரசர்.

சர்வதேச சமூகம் தீர்வுடன் தயாராக நிற்கின்றது என்றும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தால் அடுத்தகணமே தீர்வுடன் வந்து இறங்கும் என்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் கதை அளந்தார்கள். தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தார்கள். ஆனால், சர்வதேச சமூகம் திரும்பியும் பார்க்கவில்லை. இது கூட்டமைப்பினரது தேர்தல் கால நாடகம். மக்கள் இதனை நன்கு உணர்ந்துள்ளார்கள். அவர்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது.

தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடாமலிருக்கும் புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று அரசியல் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவதைக் கூட்டமைப்பு தொடர்வது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம். எதிர்காலத்தில் தமிழ்ச் சந்ததிக்கு இனப்பிரச்சினையை விட்டுச் செல்வதற்கான முஸ்தீபு என்றே இதைக் கருதவேண்டும். தமிழ் மக்களின் நலனில் உண்மையாகவே கூட்டமைப்புக்கு அக்கறை உண்டென்றால் புலம்பெயர் அமைப்புகளின் பிடியிலிருந்து விடுபட்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். அதுவரை இவர்கள் பாராளுமன்றக் கதிரைகளிலும் தங்கள் சொந்த சுகபோகங்களிலும் மாத்திரம் அக்கறை செலுத்தும் சுயநல அரசியல்வாதிகளாகவே இருப்பர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவை என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு. ஆனால், புலம்பெயர் அமைப்புக்களின் தாளத்துக்கு ஆடும் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வைத் தவிர்ப்பது பற்றியே சிந்திக்கின்றார்கள். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அடையக் கூடிய பாதையையே தமிழ் மக்கள் இன்றைய அரசாங்கத்தின் மூலமாகத் தேர்ந்தெடுப்பதே சிறந்த வழி. இதுபற்றியே தமிழ் மக்கள் சிந்தித்து தீர்மானமெடுத்துள்ளனர். அதற்கு இடையூறாக தமிழ்க் கூட்டமைப்பு ஒருபோதும் இருக்கக் கூடாது.

**நன்றி: இணையம்**

# பறக்கும் கார்



பறக்கும் கார் பற்றி 1930களில் இருந்தே சொல்லப்பட்டு வந்தாலும், தற்போதுதான், நிஜமாகவே பறக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் அளவுக்கு சோதனை பறத்தல் ஒன்று செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க நிறுவனமான டெரா·.பூகியா, தமது தயாரிப்பான பறக்கும் காரை முதலாவது தடவை பறக்கவிட்டுள்ளது.

சுமார் 20 நிமிடங்கள் பறந்துவிட்டு, வெற்றிகரமாக வீதியில் இறங்கியது இவர்களது பறக்கும் கார். இந்த கார் பாதி பகுதி கார், பாதி சிறிய ஜெட் விமானம் என்ற விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது, தனியாருக்கு சொந்தமான ஜெட்டில் பறந்து ஒரு விமான நிலையத்தில் இறங்கியபின், நகருக்குள் செல்ல மற்றொரு காரை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இனி கிடையாது. 2015ஆம் ஆண்டு இந்தக் கார் விற்பனைக்கு வருகிறது. அநேகமாக அந்த ஆண்டே இலங்கைக்கும் வந்துவிடலாம்.

இரண்டு பேர் பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் காரை செலுத்துவதற்கு, விமானத்தை இயக்கும் அளவுக்கு பயிற்சி தேவையில்லை என்கிறார்கள்.

ஆனால், சாதாரண டிரைவிங் லைசென்ஸுடன் பறக்க அனுமதிப்பார்களா என்பது இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

இந்தக் காரில் உள்ள மற்றொரு விசேஷம், கார் பறப்பதற்கு ரன்வே தேவையில்லை. அதாவது சிறிது தொலைவு ஓடிதான் மேலே எழவேண்டும் என்ற அவசியமில்லை. காரணம், இவற்றின் இறக்கையில் உள்ளவை ரோட்டர்கள், ஹெலிகொப்டர்களில் உபயோகிக்கப்படும் ரகத்தை சேர்ந்தவை. வீட்டுக்கு வெளியே நின்ற இடத்தில் இருந்தே மேலே எழமுடியும்.



# தேநீர் கோப்பைக்குள் விஷம்?



தொகுப்பு வேணுகிருஷ்ணா

### முதலில் வெளியான பழைய செய்தி

பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி பொருட்களை தயாரித்தல் தொடர்பாக இலங்கைக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் உதவித் திட்டம் தொடர்பில் பல வாரங்களுக்கு முன்பு (டிசி.டி புரளிகளுக்கு முன்பு) ஒரு மாலைப் பொழுதில் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது. நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரேமெக்கலி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசை அமைச்சில் சந்தித் துரையாடினார். இதன்போது சில விடயங்களில் இணக்கமும் காணப்பட்டது.

இலங்கையின் பால் உற்பத்தி நடவடிக்கைகளில் குருநாகல், வாரியபொலை, தம்புல்லை, ஹங்வெல்லை ஆகிய இடங்களில் பால் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

### டி.சீ.டி புரளீகள் அதற்கிடையில் குத்தாட்டம் போடத்தொடங்கின காட்சி 1

இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்கள் மற்றும் பாலுற்பத்திகளில் உடலுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய டி.சி.டி மற்றும் வேபுரோட்டின் ஆகிய இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியிருப்பதாகக் கூறப்படும் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலே ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இறக்குமதி செய்யப்படும் சில பால்மாக்கள் மற்றும் பால் உற்பத்தி வகைகளில் உடலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளடங்கியிருப்பதாக பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

இது விடயத்தில் உண்மை நிலையை அறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைச்சரவை உபகுழு வொன்று அமைக்கப்பட்டுள்ளது. துறை சார்ந்த அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களை உள்ளடக்கியதாக இந்த அமைச்சரவை உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்த அமைச்சரவை உபகுழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால்மாக்கள் மற்றும் பால் உற்பத்திகளில் டி.சி.டி மற்றும் வேபுரோட்டின் ஆகிய இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதாகக் கூறப்படும் விடயத்தில் அரசாங்கம் தலையிட்டதாலேயே பல்வேறு காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. உரிய விசாரணைகளை நடத்தி தீர்மானமொன்றை எடுப்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

இவ்விடயம் குறித்து விரிவான ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். உடனடி ஆய்வுகளை நடத்தி தீர்மானமொன்றுக்கு வரமுடியாது. டி.சி.டி மற்றும் வேபுரோட்டின் அடங்கியதாக சந்தேகிக்கப்படும் பால்மா பைக்கற்றுக்களின் தொகுதிகளை சந்தையில் இருந்து நீக்குவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இதனைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### காட்சி 2 ∴போண்டெர்ரா பால் பொருட்களுக்கு இலங்கை நீதிமன்றம் இடைக்காலத் தடை

∴பொண்டெர்ராவின் பால்மாக்கள் பல்வேறு பெயர்களில் விற்கப்படுகின்றன. நியூஸிலாந்தின் ∴போண்டெர்ரா நிறுவனத்துடைய பால் உற்பத்திப் பொருட்கள் அனைத்துக்கும் இரண்டு வார காலத்துக்கு விற்பனை, விநியோக விளம்பரத் தடைவிதிப்பதாக இலங்கையிலுள்ள நீதிமன்றம் ஒன்று முதலில் உத்தரவிட்டுள்ளது.

தேசிய சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தினர் தொடுத்திருந்த மனு ஒன்றில் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வந்துள்ளது.

∴போண்டெர்ரா உட்பட சில இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் டி.சி.டி என்று சொல்லப்படுகின்ற டைசியண்டியமைட் இரசாயனக் கலப்படம் இருக்கிறது என இலங்கையின் தொழிற்சாலைத் தொழில்நுட்பக் கழகத்தினர் நடத்திய பரிசோதனைகளில் தெரியவந்ததாக இலங்கையின் சுகாதார அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது.

உலகின் மிகப் பெரிய பால் உற்பத்திப் பொருள் ஏற்றுமதி நிறுவனமான ∴போண்டெர்ரா இலங்கையில் விநியோகித்திருந்த பொருட்களைத் திரும்பப் பெறவேண்டுமென சுகாதார அமைச்சு உத்தரவிட்டிருந்தது.

இலங்கையில் உள்ளூர் அளவில் செய்யப்பட்ட பரிசோதனைகளின் துல்லியத் தன்மையை ஏற்க ∴போண்டெர்ரா மறுத்திருந்தது. ஆனாலும் இலங்கையில் அங்கர் பெயரில் விற்கப்பட்ட பால்மாவில் இரண்டு தொகுதிகளை கடைகளில் இருந்து முழுமையாக திரும்பப் பெற்றுவிட்டதாக ∴போண்டெர்ரா நிறுவனத்தின் இலங்கைப் பிரிவு தலைமை இயக்குநர் தெரிவித்திருந்தார்.

ஆனால் மக்களுக்கு குழப்பம் ஏற்படும் விதமான விளம்பர உத்திகளைச் ∴பொண்டெர்ரா கையாள்கிறது என்று புகார்தெரிவித்து சுகாதார சேவை ஊழியர்களின் தொழிற்சங்கம் நீதிமன்றத்திடம் இந்த தடை உத்தரவைக் கோரியிருந்தது.

டி.சி.டி கலப்படம், பாட்டுலிஸத்தை ஏற்படுத்தவல்ல பக்ரீரியா கலப்படம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பால்மா பொருட்கள் இலங்கையில் இல்லை என்பதை உறுதிசெய்யும் வரையில் ∴போண்டெர்ரா பொருட்களுக்கு விற்பனை, விநியோக மற்றும் விளம்பரத் தடைவிதிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாட்டுலிஸம் எனப்படும் அரிய வகை வாதநோயை ஏற்படுத்தவல்ல பக்ரீரியா ∴போண்டெர்ரா பால் உற்பத்திப் பொருட்களின் குறிப்பிட்ட சில தொகுதிகளில் கலந்துவிட்டதாக அந்நிறுவனம் சமீபத்தில் அறிவித்திருந்தது. அதனை அடுத்து பல நாடுகளில் இருந்து இந்தப் பொருட்களை திரும்பப் பெறப்பட்டிருந்தது. தவிர இந்த சர்ச்சை தொடர்பில் அந்நிறுவனத்தின் தலைவரும் இராஜினாமா செய்திருந்தார்.

### காட்சி 3 தடை செய்யப்பட்ட 4 வகையான பால்மா வகைகள்

தடைசெய்யப்பட்ட 4 வகையான பால்மா வகைகளையும் விற்பனைக்காக வைத்திருக்கும் வர்த்தகர்களுக்கும் சட்டவிரோதமாக களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் எம். ஜி.யூ.ரோஹன தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட 4 வகையான பால்மா வகைகளைத் தவிர தற்போது சந்தையிலுள்ள ஏனைய பால்மா வகைகளிலும் இரசாயன பதார்த்தம் அல்லது வேபுரோட்டீன் வகை உள்ளனவா? என்பதை கண்டறிய மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதவிர இறக்குமதி செய்யப்பட்டு அப்போது துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பால்மா வகைகளினதும் மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவை தொடர்பான அறிக்கை கிடைத்தபின்னரே அவை சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கர் 1+ Bacth No 107610163 மற்றும் அங்கர் முழு ஆடை பால்மா Batch No 0605 C0883 11:21, மெலிபன் ஆடை நீக்கிய பால் மா Batch No 130744 A1, டயமண்ட் பால்மா Batch No NWIFPDXI என்ற பால்மா வகைகளே தற்போது தடைசெய்யப்பட்டன.

நுகர்வோர் மேற்குறித்த இலக்க பால் மா வகைகள் வாங்குவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### காட்சி 4 நீதிமன்றம் தடை விதித்தது

அங்கர், மெலிபன், டயமன், லக்ஸ்பிறே, நெஸ்பிறே உள்ளிட்ட பால்மாக்களை உற்பத்தி செய்யும் பொன்ரேறா நிறுவனத்தின் அனைத்து உற்பத்தி பொருட்களையும் விற்பதற்கு நீதிமன்றம் தடைவிதித்தது.

கம்பஹா மாவட்ட நீதிமன்றம் 16.08.2013 வெள்ளிக்கிழமை இத்தடை உத்தரவைப் பிறப்பித்தது.

தேசிய சுகாதார சேவைகள் தொழிற் சங்கத்தினர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய போதே நீதிமன்றம் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தது.

அதுமட்டுமன்றி பொன்ரேறா நிறுவன உற்பத்திகள் தொடர்பில் விளம்பரம் செய்வது மக்களை தவறாக வழிநடத்தும் செயற்பாடாகும் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

### காட்சி 5 கம்பஹா நீதிமன்றம் விதித்த தடை நீக்கம்,

இலங்கையில் தனது பால் மா உற்பத்திப் பொருட்களின் நச்சுப் பதார்த்தம் கலந்திருப்பதாகத் தெரிவித்து அவற்றின் விற்பனைக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலதடை உத்தரவு தவறானதாகவும், நியாயப்படுத்தப்படாததாகவும் உள்ளதெனக் குறைகூறும் நியூஸிலாந்தின் பொன்டேரா நிறுவனம் குறித்த தடைக்கெதிராக தான் போராடப் போவதாக சூளுரைத்துள்ளது.

நியூஸிலாந்தின் பங்குப்பரிவர்த்தனை நிலையத்திற்கு மேற்படி நிறுவனத்தின் ஆசிய பசுபிக் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் ஜோன் பிரியெம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், "இந்த இடைக்காலத் தடை விதிப்புக்கு வழிகோலும் குற்றச்சாட்டுகளை நாம் அடியோடு மறுக்கின்றோம்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் விற்பனைக்கென விடப்பட்டிருந்த பொன்டெரா நிறுவன வர்த்தக நாமம் பொறித்த பால்மா உற்பத்திகள் எதிலும் டி.சி.டி இராசாயன பதார்த்தம் கலக்கப்பட்டிருக்கவில்லையென்பது எமது சுயாதீன ஆய்வுமூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன் பாதிப்புக்குள்ளான உறை புரத அடர் கரைசலைக் கொண்டுள்ள உற்பத்திகள் எதுவும் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை எனவும் விபரித்துள்ளார்.

மேற்படி டி.சி.டி இரசாயன பதார்த்தம் குறித்த அச்ச உணர்வு சீனா, ரஷ்யா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட நாடுகளிலும் பரவியதையடுத்து பொன்டெரா நிறுவன உற்பத்திகள் சிலவற்றை மீளப்பெறுவதற்கும் தடை செய்வதற்குமான கோரிக்கைகள் வலுவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், பொன்ரேறா நிறுவனத்தின் தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கு கம்பஹா நீதிமன்றம் விதித்த தடை 23.08.2013 வெள்ளிக்கிழமை நீக்கப்பட்டுள்ளது.

### காட்சி 6 பொன்ரேறா நிறுவனத்தின் பியகம தொழிற்சாலை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது

அங்கர் பால் மா உள்ளிட்ட பால் மா வகைகளை உற்பத்தி செய்யும் பொன்ரேறா நிறுவனத்தின் பியகம தொழிற்சாலை 23.08.2013 வெள்ளிக்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது.

இந்த தொழிற்சாலையில் கடமையாற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் நால்வர் உட்பட 750 பேரின் பாதுகாப்பை கருத்தில்கொண்டே இந்த முடிவு எட்டப்பட்டதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

### காட்சி 7 பால் பவுடர் இறக்குமதிக்கு சீனா தடை

நியூசிலாந்து ஆண்டுக்கு சுமார் ரூ.50 ஆயிரம் கோடிக்கு பால் பவுடர் ஏற்றுமதி செய்கிறது. அதில் சீனா மட்டும் ரூ.10 ஆயிரம் கோடி மதிப்புள்ள பால் பவுடரை இறக்குமதி செய்துவந்தது. இந்நிலையில் இந்த பால் பவுடரில் நச்சு கலந்த பக்ரீரியா இருப்பதாக கூறி பால் பவுடர் இறக்குமதிக்கு சீனா இம்மாதம் தற்காலிக தடை விதித்துவிட்டது. இந்த தகவலை நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் டிம் கிரோசெர் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த பால் பவுடர் இறக்குமதிக்கு ரஷ்யா, தாய்லாந்து நாடுகள் தடைசெய்ததுடன் மே மாதத்திற்கு பிறகு இறக்குமதி செய்த பொருட்களை திரும்பப் பெறவும் உத்தரவிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

### காட்சி 8 இந்தியப் பாற் கோப்பை வருமா?

நடப்பு 2013 - 14ம் நிதியாண்டில், இந்தியாவின் பால் உற்பத்தி, 5 சதவீதம் உயர்ந்து, 13.30 கோடி டன்னாக அதிகரிக்கும் என அங்கு மதிப்பிடப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, ஹட்சன் அக்ரோ புராடக்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆர்.ஜி. சந்திரமோகன் கூறியதாவது: உலகளவில் பால் உற்பத்தியில், இந்தியா முன்னணி நாடுகளுள் ஒன்றாக திகழ்கிறது. நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் பால் உற்பத்தி, 13.30 கோடி டன்னாக அதிகரிக்கும்.

பயன்பாடு: நாட்டின் பால் உற்பத்தியில் பெரும் பகுதி, உள்நாட்டிலேயே பயன்படுத்தப் படுகிறது. 120 கோடி மக்கள் தொகைகொண்ட நம் நாட்டிற்கான பால் தேவை, 12.80 கோடி

→

தொழில்நுட்பம்



# பணச்செலவைக் குறைக்கும் முகநூல்

இணைய இணைப்பே இல்லாத மக்களும் குறைந்த விலையில் புதிய இணைய இணைப்பை பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் முகநூல் நிறுவனம் Samsung, Ericsson , MediaTek, Nokia, Opera and Quallcomm ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து Internet.org எனும் ஒரு சேவையை துவங்கியுள்ளது.

உலகில் உள்ள இணைய இணைப்பு இல்லாத 5 பில்லியன் மக்களிடம் இணைய இணைப்பை கொடுப்பதே இவர்களின் நோக்கம்.

1. Making access affordable

மலிவு விலையில் கைபேசிகள் உற்பத்தி செய்தல். மற்றும் தொலைதூரத்தில் இருப்பவர்களுக்கும் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்துவது.

2. Using data more efficiently தரவு சுருக்குதல். (Data Compression) தன் நினைவுகொள்தல் (data caching) போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் அனுப்பப்படும் தரவுகளை மேம்படுத்துதல்.

3. Helping businesses drive access

அதிக மக்களை இணையம் பயன்படுத்த வைக்கும் நிரலாளர்கள் (Programmers), வன்பொருள் நிறுவனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களை ஊக்குவித்து வணிக நிறுவனங்கள் தங்களின் வணிகத்தை இணையம் வழியாக மேற்கொள்ள ஊக்குவித்தல்.

கூகுல் நிறுவனம் ஏற்கனவே லூன் (Project Loon) எனும் பெயரில் இணைய இணைப்பு இல்லாத தொலைதூர இடங்களில் இராட்சத பலூன்கள் மூலம் 3G அலையை வழங்கிவருகிறது. சில வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்கா முழுவதும் SMS வழியாக இலவசமாக Gmail பயன்படுத்தும் வசதியையும் கொடுத்தது.

Twitter நிறுவனமும் கைபேசி வழியாக Tweet அனுப்புவதற்கு மட்டும் இலவசமாக இருக்குமாறு பல சர்வதேச இணைய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தது.


# ஜி மெயிலில் BackUp வசதி




ஜிமெயில் மின்னஞ்சல் சேவைமூலம் பரிமாறப்படும் மின்னஞ்சல்களை பாதுகாப்புக் கருதி பேக்கப் செய்வதற்கு BackUp Gmail எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அப்பிளின் Mac OS இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளானது ஒன்றிற்கு மேற்பட்ட ஜிமெயில் கணக்குகளை பயன்படுத்தி பேக்கப் செய்யும் வசதியை தருகின்றது. இலகுவாக கையாளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள BackUp Gmail மென்பொருளில் பேக்கப் செய்த மின்னஞ்சல்களை மீண்டும் சேமிக்கும் (Restore) வசதியும் தரப்பட்டுள்ளது.

# மின்சாரம் அவசியமில்லை




இனிமேல் சார்ஜ் தீர்ந்துவிட்டால் மின்சாரத்தை தேடி ஓடவேண்டியதில்லை, இருந்த இடத்திலிருந்து கைபேசிகளுக்கு சார்ஜ் செய்துகொள்ளலாம். நம்மை சுற்றி எந்நேரமும் அலை வரிசைகள் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். எங்கோ ஒலிபரப்பாகும் ரேடியோவை கேட்கமுடிகிறது, அதேபோல எங்கோ ஒளிபரப்பாகும் TV ஐயும் எம்மால் பார்க்க முடிகிறது.

அதுமட்டுமா Wifi-யின் மூலம் மடிக்கணினியில் இணையத்தை பயன்படுத்தலாம். இவ்வாறு பல அலைவரிசைகள் எம்மைச் சுற்றி எப்பவுமே காணப்படுகிறது. காரணம் இதில் எலக்ட்ரோன்கள் உள்ளது. இதனைப் பாவித்து பற்றரிகளை சார்ஜ் செய்யும் சிப் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இதனை கைபேசியில் புகுத்தினால், நாம் அவசரத்துக்கு சார்ஜ் செய்ய அலையவேண்டியது இல்லை.

பற்றரி வீக் ஆனால், ஒரு பட்டனை அழுத்தினால்போதும். சார்ஜருடன் இணைத்தது போல அது சார்ஜ் செய்ய ஆரம்பித்துவிடும். அதிக மின்சாரத்தை அது உற்பத்திசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவசரத்துக்கு உதவும் வகையில் அது மின்சாரத்தை தயாரித்து பற்றரியை சார்ஜ் செய்யும் திறன் கொண்டது.

அதிலும் நாம் நல்ல சிக்கனல் கிடைக்கும் இடங்களில் இருந்தால், அங்குள்ள Routers TV சிக்னல்கள் மற்றும் ரேடியோ சிக்னல்களின் கதிர்களை அது பாவித்து மின்சாரத்தை உற்பத்திசெய்துவிடும். இதுபோன்ற சாதனங்கள் விரைவில் சந்தைக்குவர உள்ளது, இது மிகவும் அதிசயமான கண்டுபிடிப்புத்தான் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/= மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!


- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்". "பதிவிறக்கப் பெட்டகம்"



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# உள்ளுவதெல்லாம்...



"உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்" என்பது வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த கொள்கை. இதை ஒரு செயல்முறை மூலம் விளக்குவதாகச் சொன்னீரகளே... இன்று அதைத் தெரிந்து கொள்ளலாமா, ஐயா? என்று மணி கண்டன் துணிவுடன் கேட்ட கேள்வியோடு அந்த 9-ஆம் வகுப்பின் தமிழ்ப்பாட வேளை தொடங்கியது.

"என்னுடைய இடத்தில், இரண்டு பெரிய வாயகன்ற குடுவைகள், பெரிய கற்கள் ஐந்து, சிறிய கற்கள் ஐந்து வைத்துள்ளேன். இரண்டு பேர் சென்று, அவற்றை எடுத்துக்கொண்டு வாருங்கள் என்றார் ஆசிரியர்.

அம்பு போலச் சென்ற மாணவர்கள் இருவர் அவற்றை எடுத்துவந்தனர். ஒரு மாணவனிடம் ஒரு காலி குடுவை யைக் கொடுத்து அதில் அரைப்பாகம் மணல் நிரப்பி எடுத்துவரச் சொன்னார் ஆசிரியர்.

முன்வரிசையில் இருந்த மாணவர் ஒருவரை வரச் சொல்லி, மணல் நிரம்பிய குடுவை யில் சிறிய கற்களைப் போடச் சொன்னார். அவன் அவ்வாறே செய்தான்.

"அதற்கு மேல் பெரிய கற்களைப் போட முடியுமா?" என்று ஆசிரியர் கேட்க, மொத்த வகுப்பும் "முடியாது..." என்று ஒரே குரலா கக் கூறியது.

இப்பொழுது காலியாக இருந்த குடுவைக்குள் பெரிய கற்களை எடுத்துப் போடச் சொன்னார் ஆசிரி யர். பின்னர் சிறிய கற்க ளைப் போடச் சொல்லி குடுவையை நன்றாகக் குலுக்கினார். பெரிய கற் களின் இடுக்குகளில் சிறிய கற்கள் அடங்கிக் கொண் டன. மேலே இருந்த இடத் தில் மணலைக் கொட்டிய பின், குடுவையை மீண்டும் நன்றாகக் குலுக்கினார். மணல் கற்களின் இடையி லும் மேலே இருந்த வெற்றிடத்திலும் அடங்கிக்கொண்டது.

இப்பொழுது வகுப்பைத் தொடங்கி வைத்த மாணவனிடம் ஆசிரியர் கேட்டார், "இதிலிருந்து என்ன தெரிகிறது?"

"முதலில் பெரிய காரியங்களைச் செய்து முடித்துவிட்டால், சின்னச் சின்னக் காரியங்கள் எளிதில் முடிந்துவிடும் என்று தெரிகிறது..." என்றான் அவன்.

அதனால்தான் வள்ளுவர் சொல்கிறார், "நாம் எப்பொழுதும் உயர்ந்த செயல் களையே எண்ணிச் செய்யவேண்டும் என்று. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றால் என்னவென்று இப்போது புரிகி-றதா?" என்றார் ஆசிரியர்.

"புரிகிறது சேர்..." வகுப்பு முழுவதும் ஒரே குரலில்.

## வாரம் ஒரு திருக்குறள்



**அவை அறிதல்**

**நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.**

அறிவு மிகுந்தவரிடையே முந்திச் சென்று பேசாத அடக்கம் ஒருவனுக்கு நன்மை என்று சொல்லப்பட்டவை எல்லாவற்றிலும் நல்லது.

குறள்:715


## உயரத்தை அளப்பது எப்படி?

பூமியின் பரப்பைக் கணக்கிடுவதற்கு மிகப் பழைய முறைகள் உண்டு. அவை பல வகைப்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட முறையை அதிகம் பயன்படுத்துகின்றனர். அம்முறைக்கு, "முக்கோணமாக்கல்" என்று பெயர். கணக்கில் ஜியாமெட்ரி பாடங்கள் படிக்கும்போது முக்கோணத்தின் ஒரு பக்கத்தின் நீளம், கோணம் ஆகியவற்றைக் கொடுத்து மற்ற இரு பக்கங்களின் அளவுகளைக் கண்டுபிடிப்போமே அந்த முறைதான் பூமியின் பரப்பு பற்றிய கணக்கீடுகளுக்கும் பயன்படுகிறது.

ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள நிலமோ அல்லது ஆயிரம் ஏக்கர் நிலமோ, அளவிடும் முறை ஒன்றுதான். ஒரு சங்கிலி, கம்பி அல்லது கழி வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட பக்கத்தை அளந்துகொண்டு, அதை ஒரு முக்கோணத்தின் ஒரு பக்கமாகக் கணக்கிட்டு, அதற்கேற்ப இருபக்க முக்கோணங்களையும் கணக்கிட வேண்டும். இவ்வாறு ஒரு முக்கோணத்தின் பரப்பு கணக்கிடப்பட்டதும், மொத்தப் பரப்பையும் பல முக்கோணங்களாக்கிக் கணக்கிட்டுவிட முடியும். இவ்வாறு கோணங்களைக் கணக்கிட உதவும் கருவிக்கு ஹடிரான்சிட் என்று பெயர். இந்தக் கருவியை வைத்து செங்குத்தாகவும் கணக்கிட முடிவதால், மலை உச்சிகளின் உயரத்தையும் கணக்கிடமுடிகிறது.

இதற்குச் சமப்பரப்பு (லெவலிங்) முறையில் கணக்கிடவேண்டும். அதாவது இந்த டிரான்சிட் கருவியில் சமப் பரப்பைக் குறியிட்டுக் காட்ட ஒரு ஸ்பிரிட் முனை உள்ளது. இந்தச் சமப் பரப்பைக் கணக்கிட்டு முதலில் முக்கோணத்தின் ஒரு பக்கமாக வைத்துக் கொள்வோம். பிறகு டிரான்சிட் கருவின்மூலம் நம் பார்வையை ஒரு கோணத்தில் வைத்துக்கொண்டு மலையுச்சியைப் பார்க்கவேண்டும். இப்போது கோணத்தையும் கணக்கிட்டுக்கொண்டால், ஏற்கனவே சொன்னபடி முக்கோண முறைக்கு வழி கிடைத்து விடும். இவ்வாறு மலையின் உயரத்தைக் கணக்கிட்டு விடலாம்.

## வெள்ளைக்காரரும் விரும்புவார்



உடலை முன்னால் வளை!
கைகளை ஒன்றாய்ச் சேர்!
தும்பிக்கையாய் வளை!
அசைந்து அசைந்து நட!
ஆனை போல நட!
யானை யானை பார்!

சுளகு போன்ற காது
சுவர் போன்ற உடம்பு.
தூண் போன்ற கால்கள்.
குஞ்சரம் போன்ற வால்.
யானை! யானை! யானை!
யானை வருகுது பார்!

வெள்ளைத் தந்தம் பார்!
வெள்ளைக்காரரும் விரும்புவார்!
சர்க்கஸ்காரரும் பழக்குவார்!
மரங்கள் இழுக்கும் யானை.
ஆலயத்திலும் இருக்கும்
ஆசி கூடக் கூறும்.
யானை யானை யானை

யானை வருகுது பார்!
சேனையும் கண்டு நடுங்கும்.
யானை முகம் பிள்ளையாருக்கு.
யானை நிறம் கறுப்பு.
ஐராவதம் வெள்ளை யானை.

## தெரிந்து கொள்ளுங்கள்

❖ விமானி இல்லாத முதல் விமானத்தின் பெயர் ஸ்கை மாஸ்டர்.

❖ மைசூரின் பழைய பெயர் மஹிஈரு (எருமையூர்). மஹிஷம் என்றால் எருமை என்று பொருள்படும்.

❖ இந்தியாவில் பெண்களுக்கென தனிப் பள்ளிக்கூடம் 1727-இல் தஞ்சை மாவட்டம் தரங்கபாடியில் ஏற்பட்டது.

❖ டார்ஜிலிங் என்பதன் பொருள் இடி தாங்கும் இடம்.

❖ இந்திய மாலுமிகள் "லஸ்கார்" என்று அழைக்கப்படுகின்றனர்.

❖ இங்கிலாந்தில் பொலிசாரை "பாபி" எனவும் அமெரிக்காவில் "காப்ஸ்" என்றும் அழைக்கின்றனர்.

❖ சிங்கப்பூரில் 31 ஆண்டுகள் தொடர்ந்து பிரதமராகப் பணியாற்றி 1991-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர் லீ குவான் யூ.


## விடுகதைகள்

- தம்பியின் தொப்பியே அவனுக்கு நெருப்பு அது என்ன?
- அருந்த முடியாத பால், உலகம் சுற்றும் பால் அது என்ன?
- அடத்தியான ஒரு மரத்துக்குப் பல கால்கள் அது என்ன?
- கறுத்த நீண்ட பாயின் மேலே வாகனம் ஓடுது அது என்ன?
- வலை பின்னும் ஆனால் அதனிடம் நூலில்லை அது என்ன?
- வாலால் நீர் குடிக்கும் வெளிச்சத் திலே தான் இருக்கும் அது என்ன?
- ஒற்றைக்கால் மனிதனுக்கு பல கைகள் அவன் யார்?
- வீட்டைச் சுற்றி கருவேலி அது எண்ன?
- காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
- உலகமெல்லாம் கால் நீட்டி, உறக்க மின்றி அலைகின்றான் அவன் யார்?

**வீடை**

10. கடல்,09. சாமரம், 08. கண், 07. மரம், 06. விளக்கு, 05. சிலந்தி, 04. பிரதான வீதி, 03. ஆலமரம், 02. தபால், 01. தீக்குச்சி

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 09.09.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1007**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1005**

**எம்.எம்.நிஷாந்த், ஜின்னாநகர், திருகோணமலை**

பரிசுக்குரியவர்: 1005

பாராட்டுக்குரியவர்கள்

01. தா.சாருஜன், தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை.
02. சி.சர்மி, பிரதான வீதி, கம்பளை.
03. கா.சந்தியா, கச்சாய் வீதி, கொடிகாமம்.
04. மா.ரெம்சி, பூவரசங்குளம், வவுனியா.
05. தா.நவீன், வெள்ளவத்தை, கொழும்பு -06.
07. மா.இஷாரா, தர்ஹாநகர்.
08. தொ.கம்சனா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



மெல்லிய தோலால் ஆன இமைகள் நமது பார்வையைத் தடுக்காதபடி அவ்வளவு வேகமாக அசைகின்றன. இமைகள் தாமாகவே தமது பணியைச் செய்கின்றன. ஆறு வினாடிகளுக்கு ஒருமுறை நாம் இமைக்கிறோம். அதாவது ஒரு மனிதன் தன் வாழ்நாளில் இரண்டரைக் கோடி முறை இமைக்கிறான். இமைப்பது ஏன் முக்கியமானது? இமைப்பது கண்களை எவ்வாறு பாதுகாக்கிறது? இமையில் உள்ள முடிகள் விரிவாக அமைந்தவை.

அதன் பணி, தூசுகள் கண்ணில் விழாமல் பாதுகாப்பதே. மழை பெய்யும்போதோ, காற்று மணலைச் சுற்றி வீசும் போதோ இமைகள் தாமாகவே மூடிக்கொள்கின்றன. மழைநீர், வியர்வை ஆகியவை கண்களில் விழாமல் ஒரு பக்கமாக வடியும்படி புருவங்கள் தடுப்பாக இருக்கின்றன. மேலும், இமைப்பதால் கண்கள் ஈரத்துடன் இருக்கவும், எளிதில் சுழலவும் முடிகிறது. கண் இமையோரங்களில் இருபது, முப்பது சிறு சுரப்பிகள் உள்ளன.

இமைகளுக்கு இடையே இவற்றின் திறப்பு அமைந்துள்ளது. கண் இமைகள் மூடும்போது இந்தச் சுரப்பிகள் நீரைச் சுரக்கின்றன. இந்த நீர், கண்களுக்கு நன்மை பயக்கிறது. கண்ணீர்ச் சுரப்பியில் உள்ள கண்ணீர் இவ்வாறுதான் பயன்படுகிறது. அதனால் ஒவ்வொரு முறை இமைக்கும்போதும் நாம் அழுகிறோம் என்றே கூறலாம்.

## பனிக்கட்டியில் ஆவி

இப்போது குளிர்காலம். அந்த குளிரில் சூடாக ஆவி பறக்க ஒரு கப் கோப்பியோ அல்லது டீயோ குடித்தால் உடலுக்கு இதமாக இருக்கும். கோப்பி அல்லது டீயில் ஆவிபறக்க அதில் உள்ள வெப்பம் காரணம் என்றால், பனிக்கட்டியில் இருந்தும் ஒரு ஆவி வருகிறதே, அது என்ன ஆவி என்று எப்போதாவது நீங்கள் யோசித்தது உண்டா?

அதற்கு காரணம் இதுதான். பனிக்கட்டிக்கு அருகில் இருக்கும் காற்றில் ஈரத்தின் அடர்த்தி அதிகமாக காணப்படும். பனிக்கட்டிக்கும், அதன் சுற்றுப்புறத்திற்கும் உள்ள உஷ்ண வித்தியாசம் காரணமாக நீர்த்துளிகள் வெளிப்படுகின்றன.

அந்த நீர்த்துளிகள் மிக நுட்பமான தூசுத் துகள்களில் ஒட்டிக்கொண்டு ஆவி வடிவில் வெளியேறுகின்றன. அது, நம் பார்வைக்கு பனிக்கட்டி ஆவியாவது போல் தெரிகிறது. உண்மையில், அது நீராவிதான். நாம்தான் அதை ஆவி ஆக்கிவிட்டோம்.

**ஆறு** அடி நான்கு அங்குலம் உயரமான அந்த மனிதன் தன் எதிரியை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான்.

அவன்விட்ட ஒவ்வொரு குத்திலும் அவனுடன் மோதியவன் திக்கித் திணறிக் கொண்டிருந்தான்.

"என்ன பையா, போட்டியை இத்தோடு முடித்துக்கொள்ளலாமா? ஓடிவிடு. உன்னை உதைக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு கடகடவென்று சிரித்தான்.

அவன் குரல் இரும்புச் சட்டங்கள் உராய்வது போலிருந்தது. அவன் தோற்றம் கறுப்பு நிறத்தோடுகூடிய பயங்கரமாக, உருண்டு திரண்டு காட்சியளித்தது.

எதிர்த்துச் சண்டையிட்டவனுக்கு தன் தோல்வி உறுதி என்பது மிக நிச்சயமாக மிகமிக நிச்சயமாக தெரிந்திருந்தது.

பார்வையாளர்கள் "கொல்" என நகைத்தனர். அதனால் தோற்றாலும் பரவாயில்லை. புறமுதுகு காட்டி ஓடுவதில்லை என்று தீர்மானித்தான்.

மறுபடி குத்துச்சண்டை ஆரம்பமானது.

"நீ நல்லபடி சொன்னால் கேட்க மாட்டாய். இந்தா தொலைந்து போ!" என்றபடி அந்த கரியமனிதன் மாறி மாறிவிட்ட அதிரடி குத்துக்களால் அவனுடன் மோதியவன் மேடையின் மையமாக மல்லாந்து சரிந்தான். மல்லாந்து விழுந்தவனின் கால் ஒன்றை சட்டென்று மடக்கி, தடியை உடைப்பது போல அவன் முறித்த முறிப்பில், அரங்கமே பயத்தில் உறைந்து போனது.

அவனது ஆதரவாளர்கள் மட்டும் அவனது செயலை பாராட்டும் விதமாக கோஷமிட்டார்கள். ஆரவாரித்தார்கள்.

"இடி அமீனுக்கு ஜே"

பெயருக்கு ஏற்ப இடியாகத்தான் சிரித்தான்.

குத்துச் சண்டை விதிமுறைப்படி அமீன் செய்த தவறை சுட்டிக் காட்ட அவனை நெருங்கிய நடுவர் அடுத்த நொடியே அவனால் குண்டுக் கட்டாகத் தூக்கப்பட்டு பார்வையாளர்களை நோக்கி வீசி எறியப்பட்டார்.

பார்வையாளர்களில் பயத்தில் உறைந்திருந்தவர்கள் போக, மீதிப்பேர் அமீனின் அதிரடி வன்முறையை மெய்மறந்து ரசித்தனர்.

அவர்களுக்குள் பெண்களும் இருந்தனர். அமீனின் பார்வை அதற்குள் ஊட்டமாக, தளதளவென்று இருந்த பெண்ணின்மீது அம்பாகப் பாய்ந்து துளைத்து நின்றது.

தன் உதவியாளர்களில் ஒருத்தனை அழைத்தான்.

அந்தப் பெண்ணை தன் சுட்டு விரலால் காட்டி "அவள் வேண்டும், இன்று எனக்கு விருந்தாக!"என்றான் கண்டிப்பான குரலில்.

அவனது தனியறையில் அந்தப் பெண் வந்துநின்றாள். "உன்னைச் சாப்பிடப் போகிறேன்" என்றான். அவள் பயந்துபோனாள்.

சட்டென்று எழுந்து பேய்த்தனமாக கட்டியணைத்தான்.

"நான் விரும்பித்தான் வந்திருக்கிறேன். ஏன் இந்த முரட்டுத்தனம். எப்படி வேண்டுமானாலும் உனக்கு ஒத்துழைக்கக் காத்திருக்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

இடி அமீன் அவளைக் கன்னத்தில் அறைந்தான்.

"எனக்கு யார் புத்தி சொன்னாலும் பிடிக்காது. நான் சொல்வதைத்தான் நீ கேட்கவேண்டும்" என்றான்.

பின்னர் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டே உறுதியான குரலில் சொன்னான்

"நீ என்ன, இந்த நாடே நான் சொல்வதைத்தான் ஒருநாள் கேட்கப் போகிறது!"

இடியென்று அவன் சிரித்த சிரிப்பில், அந்தப் பெண் அடங்கிப்போனாள். அவள் ஆடைகளை ஒவ்வொன்றாக, ஓவியம் ஒன்றின் திரையை விலக்கும் ரசனையுடன், மிகநிதானமாக களையத் தொடங்கினான் இடி அமீன்.

***

இடி அமீனின் கதைக்குள் மேலும் செல்லமுன்னர் உகண்டா பற்றிய ஒரு சுருக்கமான விளக்கம்.

மத்திய ஆபிரிக்காவில் சுமார் இரண்டு இலட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டது உகண்டா.

உகண்டா மக்கள் தொகை ஒரு கோடி 80 இலட்சம்.

உகண்டாவின் வடக்கே இருப்பது சூடான். மேற்கே ஸயர், தெற்கே ருவண்டா, தான்ஸானியா, கிழக்கே கென்யா ஆகிய நாடுகள் உள்ளன.

உலகில் மிக நீளமான நைல் நதி உகண்டாவில்தான் உற்பத்தியாகிறது. உகண்டாவில் மலைகளும் உள்ளன. மழையும் அடிக்கடி பெய்யும், சுருக்கமாகச் சொன்னால் நீர் வளமும், நிலவளமும் கூடிக்குலவும் நாடு.

உகண்டா என்ற பெயர் எப்படி வந்தது? கண்டா என்னும் இன மக்கள் பெரும்பான்மையாக இருப்பதாலும், புகண்டா என்ற இராச்சியத்தை உள்ளடக்கியதாலும் உகண்டா என்று பெயர் வந்தது.

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம், வன்னி, கண்டி என்றெல்லாம் ஒரு காலத்தில் இராச்சியங்கள் இருந்தது போல, உகண்டாவிலும் புகண்டா, புனியோரா, அங்கோல் மற்றும் ரோஹோ என்று நான்கு இராச்சியங்கள் இருந்தன.

அந்த நான்கு இராச்சியங்களும் ஒன்றிணைந்த நாடுதான் உகண்டா.

புகண்டா அரசில் மக்கள் தொகை அதிகம். அங்கு செல்வவளமும் தாராளம். நான்கு இராச்சியத்துக்கும் நான்கு மன்னர்கள் இருந்தாலும் புகண்டா மன்னர்தான் மன்னர்களுக்கு மன்னர்.

இவைதவிர, பசிகா, பசிசு, புகேடி, பலேகா ஆகிய பூர்வீகக் குடிகளும் உள்ளனர். ஒவ்வொரு குடிக்கும் ஒரு மொழி இருக்கிறது.

பூர்வீக வழிபாட்டு முறைகளும், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்களும் பரவி உள்ளன.

ஆங்கிலமே உத்தியோக மொழி, ஆனாலும், பூர்வீகக் குடிகளின் மொழிகளும் பிரதேச மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

உகண்டாவின் வனப்பைக் கண்டு அதனை கட்டியாண்டு சுரண்ட பிரிட்டிஷ்காரர்கள், பிரான்சுகாரர்கள், ஜெர்மனியர்கள் ஆகியோர் கண்வைத்தனர்.

இறுதியில் உகண்டாவை பிடித்து வளைத்துப் போட்டுக் கொண்டவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்தான்.

வர்த்தகத்துக்காக உகண்டாவில் குடியேறிய முஸ்லிம்கள் அங்கேயே தங்கினார்கள்.

உகண்டா வானொலியில் 24 மொழிகளில் செய்தி வாசிக்கப் படுவது சிறப்பான விஷயம்.

பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் உகண்டாவை ஆபிரிக்காவின் முத்து என்று வர்ணித்தார்.

உகண்டாவில் உள்ள ஆண்கள் அநேகமானோர் ஒரு மனைவியுடன் நிறுத்திக் கொள்ளமாட்டார்கள். இரண்டு மனைவிகள் வேண்டும்.

இதில் ஒரு விஷயம் யாதெனில், முதல் மனைவிதான் இன்னொரு திருமணம் செய்யுமாறு கணவனைத் தூண்டுவாராம். அந்தளவுக்கு கணவனின் தொல்லைகளை சமாளிக்க முடியாத நெருக்கடி போலிக்கிறது.

ஒரு பெண்ணை மணம் புரிவது என்றால் 100 மாடுகளை பெண்ணின் பெற்றோருக்கு கொடுத்தால் போதும். உடனே பெண் தயார்.

மாடுகளை வாங்கி வரிசையாக கட்டிவிட்டு தங்கள் பெண்ணை கொடுத்துவிடுகிறார்கள்.

அடிக்கடி இனமோதல்கள் இங்கு நடக்கும். அந்த இனமோதல்களை பயன்படுத்தி ஆட்சி நடத்தத்தான் நான்கு இராச்சியங்களையும் ஒன்றாக்கி வைத்தனர் பிரிட்டிஷ்காரர்.

தனித்தனியாக இருப்பதைவிட ஒன்றாக இருந்தால் சண்டை சச்சரவுகள் அதிகமாகும் என்பது பிரித்தாளும் சூழ்ச்சியின் ஒரு அம்சம்.

1962ஆம் ஆண்டு உகண்டாவுக்கு பிரிட்டிஷ்காரர்கள் சுதந்திரம் கொடுத்தனர். அதற்கு ஆறு மாதத்திற்கு முன்னரே அங்கு பொதுத்தேர்தல் நடைபெற்றது.

'உகண்டா மக்கள் காங்கிரஸ்' பாராளுமன்றத்தில் அதிக இடங்களைக் கைப்பற்றியது.

அக்கட்சியின் தலைவர் மில்டன் ஒபொடே முதல் பிரதமராக பதவி ஏற்றார்.

புகண்டா மன்னர் கபாகா ஜனாதிபதியானார்.

பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையே ஆரம்பத்தில் உறவு நல்ல விதமாகத்தான் இருந்தது.

பின்னர் பதவி ஆசை, அதிகாரப் போட்டி என்ற நச்சுச் சூழலுக்குள் அந்த உறவு காணாமல் போகத் தொடங்கியது.

இந்த பகையின் பின்னணியில் தான் இடி அமீன் வளர்ச்சி ஆரம்பமானது.

***

உகண்டாவில் ஸயர் எல்லையை ஒட்டி வாழ்ந்த "ககாவா" இனத்தைச் சேர்ந்தவன்தான் இடி அமீன்.

அதிபாரக் குத்துச் சண்டை வீரர். சாகசம் செய்வதில் அலாதிப் பிரியம் கொண்டவன்.

அழகான பெண்கள் என்றால் பேயாக அலைவான். தன் படுக்கைக்கு கொண்டு வரும்வரை தூங்கவேமாட்டான்.

"நான் சொல்வதை ஒரு நாள் இந்த நாடே கேட்கப்போகிறது" என்று சும்மா ஒரு பேச்சுக்காகத்தான் சொன்னான்.

பெண்களிடம் எப்போதும் ஜம்பம் அடித்துப் பேசுவதுதான் அவனது வழக்கம். பெண்கள் தன் முன்னால் அடங்கிப் போவதை தன் மூர்க்கத்தின் முன் திணறித் துடிப்பதை காண்பதில் அவனுக்கு தனி இன்பம். **(தொடரும்)**



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி 01**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - கு.எ.போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 536

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | |
| 19 | 20 | 21 | 22 | 23 | |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | | 33 | | | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **09.09.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 536
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 534 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ந் | 3 த | 4 ர் | 5 ப் | 6 ப |
| 7 ந் | | 9 ச | 10 நீ | 11 க | 12 ம் |
| 13 த | 14 க் | 15 பி | 16 டி | 17 ண | 18 கு |
| 19 க | | 21 ன் | 22 கு | 23 ண | 24 வா |
| 25 ம் | 26 ஞா | 27 ன | | 29 க | 30 த |
| | 32 தி | 33 ம் | 34 ரு | 35 பு | 36 ம் |

**இடமிருந்து வலம்**

01. ஐந்நூறு.
07. கம்மியர் தொழில். நீர்.
10. ஆகாயம். தோற்றம். (திரும்பியுள்ளது)
13. விலங்குகள், பறவைகள் கால மாற்றத்திற்கு ஏற்ப இடம்பெயர்வது.
19. வைத்தியத் தொழில் கைராசி. (குழம்பியுள்ளது)
25. மலையாள, தமிழ் சினிமா நடிகர் ஒருவர்.
29. கற்றாழை. நன்னாரி. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. பூரண தினம்.
02. ஒரு காரியத்தைச் சாதிக்க இரகசியமாகக் கொடுப்பது.
04. அழகு. அன்பு.
05. அண்மையில் சமாதானத்துக்காக சர்வதேச விருதுபெற்ற கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண்.
06. திக்கு. பக்கம். (திரும்பியுள்ளது)
15. ஆராய்ச்சி. வாதம். (திரும்பியுள்ளது)
30. பலவித.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 534 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**ஆர்.பர்ஹானா, அண்ணல் வீதி, மாஞ்சோலைச்சேனை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. வி.சுரேந்திரன், 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
02. அ.யசிதரன், கனகரட்னம் வீதி, யாழ்ப்பாணம்.
03. கா.குகதாசன், பரந்தன், கிளிநொச்சி.
05. மா.பரிஷ்ரா, சிவன் கோவில் வீதி, புத்தூர்.
06. எஸ்.ரகுந்தினி, உடுவில் தெற்கு, உடுவில்.
07. கெ.அனன்யா, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
08. டெ.சர்மினி, உடப்பு, புத்தளம்.
09. கு.பிரியங்கா, கைதடி மத்தி, கைதடி.
10. எம்.சர்வேஸ்வரன், பூநகரி, கிளிநொச்சி.








# நம்ம தளபதிக்கு அம்மா கொடுத்த டோஸ்!

தனக்கு அரசியலுக்கு வரும் எண்ணமில்லை என்றும், ரசிகர்கள் அரசியலில் ஈடுபட்டால் மன்றம் கலைக்கப்படும் என்றும் நடிகர் விஜய் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் தளத்தில், "எனக்கு அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லை, தயவுசெய்து பேனர்களில் அரசியல் சம்பந்தப்பட்ட வசனங்கள் எதையும் போடவேண்டாம். இதையும் மீறி ரசிகர்கள் அரசியலில் ஈடுபட்டால் மன்றம் கலைக்கப்படும். இனி ரசிகர் மன்ற விஷயங்களில் நேரடியாக நானே சம்பந்தப்படுவேன். என் தந்தையோ, வேறு யாரோ மன்ற விஷயங்களில் தலையிடமாட்டார்கள்" என்று கூறியுள்ளார்.

விஜய்யின் சமீபத்திய 'தலைவா' திரைப்படம் தமிழகத்தில் வெளியாவதில் ஏற்பட்ட சிக்கலே அவரை இவ்வாறு கூறவைத்துள்ளதாக தெரிகிறது. 'தலைவா' படத்தின் விளம்பரத்தின் கீழ் 'Time to lead' (தலைமையேற்கும் தருணம்) என்று போடப்பட்ட வாசகமும், அப்படத்தில் விஜய் அரசியலுக்குவர மக்கள் அழைப்பதுபோன்று இடம்பெற்ற சில காட்சிகளும் ஆளும் தரப்பை வெகுவாக ஆத்திரப்பட வைத்ததாகவும், அதன் காரணமாகத்தான் படத்திற்கு மறைமுக முட்டுக்கட்டைகள் விழுந்ததாகவும் கூறப்பட்டது. இது, விஜய்க்கு கடும் நெருக்கடியையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்திய தாகவும், இதனால் ஆட்சி மேலிடத்திடம் சரணடைந்ததாகவும், அதன்காரணமாவே படத்தின் விளம்பரத்தின் கீழ்போடப்பட்ட வாசகம் நீக்கப்பட்டதோடு, முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியை புகழ்ந்து அறிக்கை ஒன்றும் விஜய்யிடமிருந்து பறந்து வந்ததாகவும் கூறப்பட்டது.

இதனிடையே தற்போது ஏற்பட்ட சிக்கல், இனி விஜய்யின் அடுத்த படங்களுக்கும் வராமல் இருப்பதற்காக தெளிவான நிலையை அறிவிக்கவேண்டும் என்று தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தரப்பிலிருந்து மட்டுமல்லாது, ஆளும் தரப்பிலும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கலாம், என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பீட்சா நாயகிக்கு பாடுவதில் ஆர்வமாம்!

தமிழில் குள்ளநரி கூட்டம், பீட்சா படங்களில் நடித்திருப்பவர் ரம்யா நம்பீசன். இவர் நடிப்பதை விட பாட்டு பாடுவதில் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளாராம்.

இதுகுறித்து அவர் கூறுகையில், பீட்சா பட வெற்றிக்கு பிறகு தமிழிலும், மலையாளத்திலும் நிறைய வாய்ப்புகள் வந்தன. தமிழ், மலையாளம் இரண்டிலும் சமமாக நடிக்கவேண்டும் என எண்ணினேன். இதற்கு காரணம் தமிழில் குடும்பப் பாங்கு, மலையாளத்தில் ஸ்டைலான ஹீரோயின் என வெவ்வேறு இமேஜ் இருந்தது.

தமிழில் எனது அடுத்த படமாக ரெண்டாவது படம் வெளியாக உள்ளது. விரைவில் பெரிய படநிறுவனம் ஒன்றில் நடிக்க உள்ளேன். இதற்கான அறிவிப்பை அந்நிறுவனமே விரைவில் அறிவிக்கும். படங்களில் பின்னணி பாடுவது பற்றிக்கேட்கிறார்கள். ரம்மி படத்தில் பாடலொன்று பாடி உள்ளேன். குழந்தை பருவம் முதலே கர்நாடக இசை கற்றுவருவதால், பாடுவதில் அதிக விருப்பம். தற்போதுள்ள படங்களை முடித்த பிறகு பாடுவதில் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# காதலிக்காக ஏங்கும் காதலன்!

அபினவ் கசாய்ப் இயக்கத்தில் உருவா
பெசராம். இப்படத்தில் கதாநாயகனாக ரன்பீர் க
மேலும் கதாநாயகியாக அறிமுக நாயகி பல்லவி
ஆனால் ரன்பீரோ தனது காதலியான கத்ரீனா
வைக்குமாறு இயக்குனரிடம் சிபாரிசு செய்துவரு
ஏனெனில் சிறந்த ரொமான்ஸ் ஜோடியா
வட்டாரத்தினை வலம் வருகின்றனர் ரன்பீர், கத்ரீ
இயக்குனர் அபினவ்க்கு பல்லவி நெருங்கிய
நண்பர் என்பதால் ரன்பீரின் கருத்தினை
மறுத்துவிட்டாராம்.




# அர்ஜுன் வீட்டு அடுத்

அக்ஷன் கிங் அர்ஜுனுக்கு ஐஸ்வர்யா,
இரண்டு மகள்கள் உள்ளனர். வெளிநா
ஐஸ்வர்யா, விஷாலுடன் இணைந்து ப
என்ற படத்தில் நடித்தர். இப்படம் எத
அளவு வெற்றி பெறாததால் இயக்குன
பலரும் கவலை அடைந்துள்ளனர்.
இந்நிலையில் இரது தங்கை அ
அறிமுகப்படுத்த உள்ளாராம் விஷால். அக்க
ஷூட்டிங் சென்று வந்த அஞ்சனாவுக்கும் படத்
ஆசை வந்துள்ளதாம். அதனால் இத்தனை நாட்க
ஆசையில்லாதவருக்கு தற்போது நாமும் ஒரு ரவு
என்ற நினைப்பு வந்துள்ளது.
உடனே ஐஸ்வர்யாவை போன்று அஞ்சனாவையு
அறிமுகப்படுத்துவேன் என்று விஷால் அர்ஜுனி
சம்மதத்தை தெரிவித்துவிட்டாராம்.

# குழப்பத்தில் சூப்

நடிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டு அரசியலி
டொலிவூட் சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி. தொடங்கிய
காங்கிரசில் இணைத்துவிட்டு, மத்திய அமைச்சர
இந்நிலையில் 150ஆவது பத்தில் அவர் ந
என்பது ரசிகர்களின் எதிர்பார்ப்பா உள்ளது. அ
அது இன்னும் நிறைவேறவில்லை. எங்களுக்காக
ஒதுக்கி, 150ஆவது படத்தில் நடிக்வேண்டும் என்
அவருக்கு கடிதம் எழுதியுள்ளார்களம். இதனால்
இருக்கிறாராம் சிரஞ்சீவி.

# கொதிக்கிறார்

பொலிவூட்டில் முன்னாள் கனவு கன்னிகள் குத்துப்பாட்டுக்கு நடனம் ஆடுவதற்கு முன்வந்த வண்ணம் உள்ளனர்.

சமீபத்தில் சஞ்சய் லீலாபன்சாலியின் ராம்லீலா படத்தில் குத்துப் பாட்டுக்கு ஐஸ்வர்யா நடனம் ஆடப்போகிறார் என்று பொலிவூட்

வட்டாரங்கள்
வெளியாகிய
ஆ
பிரியங்கா
இந்நிலையி
மூத்த நடி
எழுப்பியுள்ள
என்னிடம்
என்று கோப








## ...க்காக ... காதலன்!

...கசாய்ப் இயக்கத்தில் உருவாக இருக்கும் திரைப்படம் ...தில் கதாநாயகனாக ரன்பீர் கபூர் நடிக்கவுள்ளார். ...யாக அறிமுக நாயகி பல்லவி நடிக்கவிருக்கிறார். ...தனது காதலியான கத்ரீனாவை தன்னுடன் நடிக்க ...குனரிடம் சிபாரிசு செய்துவருகிறாராம்.
... சிறந்த ரொமான்ஸ் ஜோடியாக பொலிவூட் ...ம் வருகின்றனர் ரன்பீர், கத்ரீனா ஜோடிகள். ...பக்கு பல்லவி நெருங்கிய ...ரன்பீரின் கருத்தினை

## களம் காண தயாராகிறது பூலோகம்

ஜெயம் ரவி, த்ரிஷா இணைந்து நடிக்கும் படம் பூலோகம். இப்படத்தை ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரித்துள்ளது. புதுமுக இயக்குனர் கல்யாண கிருஷ்ணன் கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார். பல்வேறு இடங்களில் நடைபெற்ற இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது முடிவடைந்துள்ளது.

ஆசிய குத்துச்சண்டை வீரர் மதனால் ஈர்க்கப்பட்ட இயக்குனர், இந்தத் திரைப்படத்தின் கதையை ஒரு குத்துச்சண்டை வீரரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்திற்கு ஒரு புதிய பரிணாமம் கொடுப்பதற்காக நடிகர் ஜெயம் ரவி தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு நடித்துள்ளார். படம் முடிவடைந்ததை அடுத்து படத்தை வெளியிடுவதற்கான வேலைகள் வெகு விமர்சையாக நடந்துவருகின்றனவாம்.

## புரிந்துகொண்டாராம் உலக அழகி!

உலக அழகி பட்டம் பெற்ற கையுடன் நடிக்கவந்த பிரியங்கா சோப்ராவுக்கு, பொலிவூட்டில் துவக்கத்தில் சிவப்பு கம்பள வரவேற்பு கிடைக்கவில்லையாம். கடும் முயற்சி போராட்டத்துக்கு பின்தான் அவருக்கு வெற்றிக்கான கதவு திறந்துள்ளது.

இதுகுறித்து அவர் கூறுகையில், என் திரையுலக வாழ்க்கையில் கோட்பாதர் என யாரும் இல்லை. அதே போல் பொலிவூட்டில் நெருங்கிய போய் பிரண்ட் யாரும் இல்லை. சினிமா பின்னணி இல்லாத குடும்பத்தை சேர்ந்தவள் நான். இதனால் பொலிவூட்டில் என்னை நிலைநிறுத்துவதற்கு ரொம்பவே சிரமப்பட்டேன்.

மேலும் 10 ஆண்டுகளுக்குப்பின் இப்போது தான் திரையுலகை பற்றிய ஒரு புரிதல் ஏற்பட்டுள்ளது. எப்படிப்பட்ட கதாபாத்திரத்தில் நடித்தால் வெற்றி கிடைக்கும் என்பதை இப்போது தெரிந்துகொண்டேன். இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு பொலிவூட்டில் என் கொடி பறக்கும் என்பதில் சந்தேகமும் இல்லை என்கிறார் ப்ரியங்கா சோப்ரா.




## ஜில்லாவை தொடர்ந்து அதிரடியில் விஜய்

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வெளிவந்த துப்பாக்கி படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இந்த மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் இக்கூட்டணி ஒரு புதிய படத்தில் இணையவிருக்கிறது.

இந்நிலையில், விஜய் - ஏ.ஆர்.முருகதாஸ் இணையவிருக்கும் புதிய படத்திற்கு அதிரடி எனப் பெயரிட்டு இருப்பதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இன்னும் இது உறுதிசெய்யப்படவில்லை.

விஜய் தற்போது அறிமுக இயக்குநர் நேசன் இயக்கும் ஜில்லா என்ற படத்தில் நடித்துவருகிறார். இப்படத்திற்கு பின்பு ஏ.ஆர். முருகதாசுடன் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜப்பானில் சிம்பு - ஹன்சிகா

சிம்பு, ஹன்சிகா இருவரும் ஜோடியாக 'வாலு', 'வேட்டை மன்னன்' படங்களில் நடித்து வருகின்றனர். இரண்டு படங்களையுமே 'நிக் ஆர்ட்ஸ்' சக்கரவர்த்தி தயாரிக்கிறார். இரு படங்களுமே நீண்டநாட்களாக இழுத்துக் கொண்டுவந்தன. தற்போது ஒருவழியாக 'வாலு' படத்தின் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. 'வேட்டை மன்னன்' படத்தின் 50 சதவீத படப்பிடிப்பு மீதம் இருக்கும் நிலையில், விரைவாக படவேலைகளை முடிக்கத் திட்டமிட்டுள்ளனர். இறுதிக் கட்ட படப்பிடிப்பு ஜப்பானில் நடக்கப் போகிறதாம். சிம்பு, ஹன்சிகா உள்ளிட்ட படக்குழுவினர் ஜப்பான் செல்ல உள்ளனரவாம். இந்தப் படத்தில் சிம்புவின் நண்பராக ஜெய் நடித்துள்ளார். யுவன் சங்கர் ராஜா இசை அமைக்கிறார்.



## ...ன் வீட்டு அடுத்த வாரிசு

...கிங் அர்ஜுனுக்கு ஐஸ்வர்யா, அஞ்சனா என ...மகள்கள் உள்ளனர். வெளிநாட்டில் படித்த ...யா, விஷாலுடன் இணைந்து பட்டத்து யானை ...டத்தில் நடித்தார். இப்படம் எதிர்பார்த்த ...வெற்றி பெறாததால் இயக்குனர் உட்பட ...கவலை அடைந்துள்ளனர்.
...நிலையில் இவரது தங்கை அஞ்சனாவையும் ...த உள்ளாராம் விஷால். அக்காவுடன் ... வந்த அஞ்சனாவுக்கும் படத்தில் நடிக்க ...ம். அதனால் இத்தனை நாட்களாக சினிமா ...த தற்போது நாமும் ஒரு ரவுண்ட் வருவோம் ...துள்ளது.
...ாவை போன்று அஞ்சனாவையும் நான்தான் ...வேன் என்று விஷால் அர்ஜுனிடம் கூற, அவரும் ...தரிவித்துவிட்டாராம்.

## ...பத்தில் சூப்பர் ஸ்டார்

...முழக்கு போட்டுவிட்டு அரசியலில் குதித்தவர் ... ஸ்டார் சிரஞ்சீவி. தொடங்கிய புதுக்கட்சியை ...ைத்துவிட்டு, மத்திய அமைச்சராகிவிட்டார். ... 150ஆவது படத்தில் அவர் நடிக்கவேண்டும் ... எதிர்பார்ப்பாக உள்ளது. அமைச்சராகிவிட்டதால் ...வேறவில்லை. எங்களுக்காக கொஞ்சநேரம் ...படத்தில் நடிக்கவேண்டும் என்று ரசிகர்கள் பலர் ...ழுதியுள்ளார்களாம். இதனால் குழப்பத்தில் ...வி.

## ...திக்கிறார் ஐஸ்வர்யா

...னாள் கனவு ...டிக்கு நடனம் ... வண்ணம் ... லீலாபன்சாலி ...் குத்துப் ...டனம் ...பொலிவூட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அந்தச் செய்தி கடந்த வார முரசிலும் வெளியாகியிருந்தது.

ஆனால் இடையில் என்ன நடந்ததோ, குறித்த படத்தில் பிரியங்கா சோப்ரா ஆடப்போவதாக தகவல்கள் கூறுகின்றன. இந்நிலையில் ஐஸ்வர்யாவை சந்தித்த ஊடகவியலாளர் ஒருவர், மூத்த நடிகைகள் குத்துப்பாட்டுக்கு ஆடுகிறார்களே என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு கோபம்கொண்ட ஐஸ்வர்யா இதை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள், அவர்களிடமே கேட்கவேண்டியதுதானே என்று கோபமாக ஊடகவியலாளரிடம் தெரிவித்துள்ளார்.

## தேன் கிண்ணம்

### அநீதியை எதிர்ப்போம்

மாண்புகள் மாண்டே மறைந்திட - இங்கு
மா பலம் பெற்றே யெழுகிறது குற்றங்கள்
வஞ்சனை செய்திடும் ரஞ்சிந்தனை கூட்டத்தை
வம்புகழ் பாடி யொடிந்திடவே செய்திடுவோம்!
தவறுகளை எதிர்த் துரத்துப் பேசியே - நம்
தன்மான மிழக்காது தலை நிமிர்ந்திடுவோம்!

சத்தியம் தளர்த்திடவே தட்சணை பெற் றுணை
சார்படை நிற்கும் பொய் யடை கோழையரே!
பாரிடம் பெற்று பாவிடம் சேர வந்தீரோ? - பிறர்
பலமெண்ணியிலகா துனதுள்ளம் உகந்தே
உண்மை சார்ந்துன் நா துணை நிற்கச் செய்து
உணர்த்திடுவாயா மனமஞ்சா ரின் உரத்தை?

அநீதிகள் அளாதிடும் போததை கண்டெழுந்திடு!
அதை எதிர்த்திட எடுத்திடு மையிட்ட மா வுரத்தை
பொய் வசம் அடங்கிப் போவாறென் றெண்ணிடும்
புரட்சியரைப் புரட்டிட பாடிடுவோம் வசைகள்
உள் மனத்தி லூரம் கொண்டோரே வீரர் - அதை
உடைமையாக்கினி எதிர்த்திடுவோம் அநீதியை.

சி.அரவிந்ராஜ். ஆலங்கேணி.

## ஈழத்துக் கவிஞர்கள்

### தமிழோவியன்

தமிழோவியன் இலங்கையின் மலையகத்தின் மூத்த இலக்கியவாதியும் கவிஞருமாவார். நல்ல இலக்கிய நடைகொண்டு எழுதுபவர். ஐம்பதுகளில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். இரா.ஆறுமுகம் என்ற இயற்பெயர் கொண்ட தமிழோவியன் ஊவா மாகாணத்தில் பல எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் உருவாக்கியதில் முன்நின்றவராவார்.

ஊவா மாகாணத்தில் பல இலக்கிய விழாக்களையும் நாடகங்களையும் இளமைக் காலத்திலிருந்தே நடத்தி வந்தவர்களில் தமிழோவியன் முக்கிய பங்களித்தவர். கவிஞர் கண்ணதாசன், நெடுஞ்செழியன் போன்றவர்களை பதுளைக்கு அழைத்து இலக்கிய விழாக்களை நடத்தியவர். அறிஞர் அண்ணா, பாரதிதாசன் இருவருடைய பிறந்த நாள் ஞாபகார்த்த கட்டுரைகளை தவறாமல் வருடாவருடம் பத்திரிகைகளில் எழுதிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊவா மாகாணத்தில் சில சாகித்திய விழாக்களை பொறுப்பேற்று பல இலக்கிய மலர் வெளியீடுகள் வெளிவருவதற்கும் முக்கிய பங்களிப்பினை தமிழோவியன் வழங்கிவந்துள்ளார். தமிழோவியனின் கவிதைத் தொகுப்பு இலங்கை சாகித்திய மண்டல விருதுபெற்றது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான தமிழோவியன் இறக்கும்போது வயது 68 ஆகும்.

**இவரது நூல்கள்**

தமிழோவியன் கவிதைகள், குமரன் பதிப்பகம், சென்னை.

**வெளி இணைப்புக்கள்**

தமிழோவியன் கவிதைகள்: விளிம்புநிலை மக்களின் அனுபவத்தெறிப்பு (யமுனா ராஜேந்திரன்)
தமிழோவியன் கவிதைகள் நூல் விமர்சனம்.

## எங்களூர் வாவி!

அல்லியும்
குவளையும்
அதிகம் பூத்திருக்கும்...
கொள்ளை அழகு
வாவியில்
செந்தாமரை இதழ் விரிக்கும்
பழைய நினைவுகள்...!

புதியதாக
சூழும்....
நடை பாதை எங்கும்
இருக்கைகள்!

உல்லாசம் பார்க்க
வரும் பயணிகள்
விட்டெறிந்த
ஐஸ்கிறீம் குவளைகள்
எங்கும் சிதறிப்
பூத்திருக்கும்...!

முகமிழந்த
செவ்விளநீர்க் குரும்பைகள்
பொலிவிழந்து
சிரித்திருக்கும்....!
வேலி ஓரத்தின்
வடலி மறைவில்
பனங்காய் ஈய்க்கும் நாம்பன்

கொண்டை மீன்கள்
கொண்டாடும்
எங்களூர் வாவியது!

'மண்டைதீவு மகிழ்நன்'

## என்னை நினைத்துக்கொண்டு...!

உனது நாக்குகளால்
உன் இதழ்களை
நனைத்துப் பார்...!
இன்னும் இனிக்கும்
நான் தந்த முத்தங்கள்.

உனது விரல்களால்
உன் உடலெங்கும்
தொட்டுப் பார்!
உனது ஸ்பரிசம்
நான் தொட்ட உணர்வுகளை
இப்போதும் உணரும்.

உன்னை நீயே
மணந்து பார்...!
என் மேனி வாசம்
உனக்குள் புகுந்துகொண்டே
இரகசியம் புரியும்.

உன் விழிகளை
நிலைக் கண்ணாடியில்
பார்!
உன் விழிகளில்
என் உருவம் தெரியும்.

உன்னை நீயே
கேட்டுப்பார்!
உன்னை நானென்று
சொல்லும்.

K.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.

## அழகி

சிறு வயதில் ரோஜாவைப் பார்த்தபோது
இதைவிட எதுவுமே
அழகில்லை என்று நினைத்தேன்.
பள்ளிப் பருவத்தில் வானவில்லை
பார்த்தபோது அழகினில்
முதலிடம் என்று நினைத்தேன்.
என்று உன்னை பார்த்தேனோ?
அன்று தான் புரிந்தது
உன்னைவிட இந்த உலத்தில்
எதுவுமே அழகில்லை என்று.

கிருஸ் காஜா, அராலி.

## ஏக்கம்!

கனவினூடே நகருது – நம்
கனிவான நினைவுகள்.
வலியினூடே வளருது – எம்
வாலிப வயதுகள்.

வேதனைகள் தந்திங்கு – மடல்
விழிகளும் நனையிது
பாகங்கள் வலித்திங்கு – உடல்
பாழ்பட்டுப் போகுது.

வேஷமாய் பழகியே – கடும்
நாசங்கள் நடக்குது.
மோசமாய் உருகியே – பெரும்
பாசங்கள் உடையிது.

சாலைகள் எங்கிலும் – சில
சோகங்கள் தெரியிது.
தவறுகள் செய்யிலும் – பல
கதவுகள் திறக்குது.

வதங்கியே வெழக்குது – மனசு
விம்மியே வேகுது
பொய்மையே உலகிது – அதன்
போலியே விலகிடு.

வே. முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.



## காலங்கள் வருமா?

பல நாள் காத்திருந்து
அறிமுகம் பெற்ற உறவு
உன் உறவு
உனக்குள் நான் எனக்குள் நீ
இதுதான் கலப்பற்ற காதல்
கண்கள் சந்திக்காமலே
நகருது நம்முடைய காதல்
இதுவும் கூட இன்பமாகத்தான்
இருக்கிறது – இனியாவது
நானும் நீயும் காதலர்களாய்
மீண்டும் சந்திக்கும்
காலம் வருமா பெண்ணே!

தோ. சமீதரன், நயினாதீவு.

## பிள்ளை மனம் கல்லு!

முதுகோரம் வயிறொட்டி
அத் தெருவோரம் ஓர் மாது
வறுமையின் கொடுமையினால்
கை நீட்டி பிச்சை கேட்கிறது
வழிப்போக்காளர்களிடம்!...
அம் மாதைப் பார்த்த கணம்
என் மனக் கண்முன்
என் தாயின் முகம் நிழலாடிட
அருகில் சென்று தாயே என்றேன்!
கண்ணீர் உகுத்தவாறு
என் முகம் நோக்கி யாரப்பா நீ?,
என்றாள்
உன் முகத்தில் என் தாய்முகம்
தெரிகிறது தாயே - நீ
இத்தெருவோரம் கிடந்திட
காரணமும் யாதோ? என வினவினேன்
பத்தும் பெத்தேன் - அன்று
பத்திரம் பாராது நடுத்தெருவில்
கைவிடப்பட்டேன் - இன்று
அதனால் வயிற்றுப்பசி
களையவென
கரம் நீட்டி விட்டேன்.
இத்தெருவோரம் - நின்று
அத்தாயின் வார்த்தைகளால்
மனம் குமுறி அழ
நிலை தடுமாறி விழிகளிரண்டும்
நிலைதடுமாறி கண்ணீரை
வெகுவாக உகுத்தன!

எம்.யூ. அல்சாத்,
ஓட்டமாவடி.



# அன்புள்ள அம்மா

பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறிய விளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# தாயாக தயாராகுங்கள்

**ம**ழலைச் செல்வம் உங்கள் வாழ்வின் விலைமதிப்பற்ற செல்வத்தை வரவேற்கத் தயாராகுங்கள். வானுயரக் கட்டடத்திற்கு அதன் அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ, அதுபோல் உங்கள் குழந்தை உருவாகுவதற்கு பாதுகாப்பான சூழலைக்கொடுப்பது முக்கியமும் உங்கள் கடமையுமாகும். உங்கள் குழந்தை கருத்தரிப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே கவனங்கள் செலுத்துவது சாலச் சிறந்ததாகும்.

### திருமணமாகி எவ்வளவு நாட்களில் கருத்தரிக்கும்?

பெரும்பாலான தம்பதியினர் (70%) முதல் வருடத்திலேயே கருத்தரிக்கின்றனர். 10 - 15 வீதமானோர் முதல் மாதத்திலேயே கருத்தரிப்பதுண்டு. 2 வருடங்களுக்கு மேலாக கருத்தரிக்காமல் இருப்போர். குழந்தைப்பேறு வேண்டின் மருத்துவ ஆலோசனை பெறுதல் அவசியம்.

**(01)** கருத்தரிக்க முன்னர் எடுக்கவேண்டிய கவனங்கள் என்ன? குடும்பக் கட்டுப்பாட்டு வில்லைகளைப் பாவிப்போர் (Pill) அதனை 3 மாதங்களுக்கு முன்னரே நிறுத்தி, 3 மாதங்களுக்கு பாதுகாப்பு உறை (ஆணுறை, பெண்ணுறை) (Condoms)களைப் பாவிப்பது, மாதவிலக்கு வட்டம் சீரடைய வழிசெய்யும்.

**(02)** ருபெல்லா ஊசி (Rubella vaccines) ருபெல்லா என்பது குழந்தைகளை கருவிலே பாதித்து அங்கவீனமடையச் செய்யும் ஒரு கொடிய வைரசுக்கிருமியாகும். உடலில் ருபெல்லா எதிர்ப்புச்சக்தியற்றோர் இதனை



ருபெல்லா வக்சீன் மூலம் தடுக்கமுடியும். நீங்கள் இந்த வக்சீனை முன்பு பெற்றிராவிடின் இதுதொடர்பாக உங்கள் வைத்தியரை அணுகவும், ருபெல்லா ஊசி போட்ட பின்னர் 3 மாதங்களுக்கு கருத்தரித்தல் கூடாது, ஏனெனில் இது மிக அரிதாக குழந்தையை பாதிக்கும் சாத்தியம் உள்ளது.

**(03)** இயலுமானவரை மருந்து வகைகளை தவிர்க்கவும். நீங்கள் வேறு ஏதாவது நோய்களுக்குட்பட்டிருந்தால் உங்கள் வைத்தியரிடம் நீங்கள் குழந்தைபெறுவதற்கு திட்டமிடுவதைக்கூறி ஆலோசனைகளைப் பெறுங்கள். பின்வரும் நோய்கள் மகப்பேற்றுக் காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியன.

01. இருதய நோய்கள்.
02. சலரோகம்.
03. காக்கை வலிப்பு.

**(04)** உங்கள் குடும்பத்தில் ஏதாவது பரம்பரை வியாதிகள் இருப்பின் இவை உங்கள் குழந்தையையும் பாதிக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கக்கூடும். இதுபற்றி உங்கள் வைத்தியருடன் ஆலோசியுங்கள்.

**(05)** 3 மாதங்களுக்கு முன்னிருந்தே போலிக்கமிலம் (Folic Acid) என்னும் விற்றமின் சத்தை பாவிக்கத் தொடங்குங்கள். இது உங்கள் குழந்தை அங்கவீனமாக பிறப்பதை தவிர்க்கும்.

(தொடரும்)

## உதடு மற்றும் அண்ணப்பிளவு



கர்ப்பமாக இருக்கும்போது சிகரெட் பிடிப்பது, புகையிலை போடுவது, சட்டத்துக்குப் புறம்பான தடைசெய்யப்பட்ட மருந்துகளை எடுத்துக்கொள்வது... வலிப்பு, புற்றுநோய், ஆர்த்ரைடிஸ் மற்றும் டிபி போன்றவற்றுக்கு எடுத்துக் கொள்கிற ஸ்டீரோய்டு கலந்த மருந்துகளாலும், குழந்தையின் முக அமைப்பு பாதிக்கப்படலாம்.

மருத்துவரின் ஆலோசனையின்றி, கன்னாபின்னாவென எடுத்துக்கொள்ளும் ஆபத்தான மருந்துகளும் இதற்குக் காரணம்.

கர்ப்பம் தரித்தது தெரியாமல், கர்ப்பத்தடை மாத்திரை எடுத்துக் கொள்ளும் பெண்களுக்கும் பிறவிக் குறைபாடுகளுடன் குழந்தை பிறக்கலாம்.

வயது கடந்து குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களுக்கும், போலிக் அமிலம், இரும்புச்சத்து, அயோடின் மற்றும் துத்தநாகக் குறைபாடுள்ள பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அண்ணப் பிளவு பாதிக்கலாம் என்கின்றன ஆய்வுகள்.



# வருமுன் காப்போம்!

**ப**ரவலாக நாற்பது வயதிற்கு மேல் முதுகு வலி, கழுத்து வலி ஏற்படுதல் சாதாரணம். இதற்கு காரணம் எலும்புத் தேய்மானம் என்று சொல்வார்கள். நாம் அனைவரும் அறிந்ததுபோலே எலும்புக்கு வலுச்சேர்ப்பது கல்சியம் என்னும் தாதுச்சத்துதான். உடலில் கல்சியம் அளவு குறையும்போது, எலும்புகள் வலுவிழந்து தேய்மானம் ஏற்படும். கல்சியம் எலும்புகளை பலப்படுத்தும் என்று பெரும்பாலான மக்கள் அறிவர். ஆஸ்டியோபோரோசிஸ் என்பது எலும்புப்புரை என்னும் நோயாகும். இந்த நோயானது எலும்பை உருக்கி எலும்பு முறிவுக்கு இட்டுச்செல்வதோடு, கழுத்து மற்றும் முதுகு வலியை ஏற்படுத்தி காலப்போக்கில் உயரம் 6 அங்குலம் வரையில் குறைய வழி செய்துவிடும். இந்நோயில் எளிதில் ஏற்படும் எலும்புமுறிவின் ஆபத்து இருப்பதனால், இது குறிப்பாக ஆயுள் எதிர்பார்ப்பு மற்றும் வாழ்க்கை முறையை பாதிக்கலாம்.

இப்போது அந்த எலும்புப்புரை அல்லது ஆஸ்டியோபோரோசிஸ் பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான சில எளிய வழிகளைக் கொடுத்துள்ளோம். அதைப் படித்து பின்பற்றி, எலும்புப்புரை அல்லது ஆஸ்டியோபோரோசிஸ் நோயிலிருந்து விடுபடுங்கள்.

### உடற்பயிற்சி

ஆஸ்டியோபோரோசிஸ் நோயை தடுக்க உதவும் விஷயங்களில் உடற்பயிற்சி மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்நோயால் பாதிக்கப்பட்டால், வாரத்தில் ஐந்து முதல் ஆறு நாட்கள் வரை உடற்பயிற்சி செய்யவேண்டும். அதிலும் வாரம் இரண்டு மூன்று முறையாவது ஏரோபிக் மற்றும் வலுப்படுத்தும் உடற்பயிற்சிகளை 30 நிமிடங்கள் செய்யவேண்டும்.

### உப்பு உட்கொள்ளுதலை குறைக்கவேண்டும்

உப்பை அதிகம் உட்கொள்ளும்போது, அது சிறுநீர் மற்றும் வியர்வையின்மூலம் வெளியேற்றும் கல்சியத்தின் அளவை அதிகரிக்கிறது. அதிலும் ஏற்கனவே கல்சியம் குறைபாடு இருந்தால், அது மிகவும் ஆபத்தாய் முடியும் மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவருக்கு சிறுநீரில் கல்சியம் அதிகளவில் வெளியேறுவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

### காப்பைன் உட்கொள்ளுதலை குறைக்க வேண்டும்

உடலில் கல்சியம் உறிஞ்சுதலை, காப்பைன் தலையிட்டு கெடுத்துவிடும். ஆகவே காப்பைன் இருக்கும் சோடா, கோப்பி மற்றும் சொக்லெட் போன்றவற்றை அளவாக உட்கொள்ளவேண்டும்.

### புகைப்பிடித்தல் கூடாது

புகைப்பிடித்தல் எலும்பு முறிவுகள் குணமடைவதை தடைசெய்கின்றது மற்றும் உடலில் மீண்டும் புதிய எலும்பு வளரசெய்யும் திறனையும் குலைக்கின்றது. ஆகவே புகைப்பிடித்தலை நிறுத்தினால், எலும்புகள் வலிமையடைவதோடு, முறிவிலிருந்தும் விரைவில் குணமடையலாம்.

### கல்சியம் அதிகம் உட்கொள்ளுதல்

தேசிய சுகாதார நிறுவனங்கள் பரிந்துரையின்படி, பெரியவர்களுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 1000 மில்லிகிராம் வரை உடலில் சேரவேண்டும். இந்த பரிந்துரை 50 வயதுக்குட்பட்ட பெண்களுக்கும், 70 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கும், 1200 மில்லிகிராம் இருக்க வேண்டும் என்றும் சொல்கின்றது.

### விற்றமின் டி அதிகப்படுத்துதல்

விற்றமின் டி உடல் கல்சியத்தை உறிஞ்சுவதற்கு பெரிதும் உதவியாக உள்ளது. குறிப்பாக இத்தகைய விற்றமின் டி சத்தை சூரிய வெளிச்சமானது அதிகம் உற்பத்தி செய்கிறது. மேலும் பால், ஒரேஞ்சு மற்றும் காலை உணவு தானியங்களில் விற்றமின் டி சத்தானது செறிந்துள்ளது.

### உட்கொள்ளும் மருந்துகளில் கவனம்

சில மருந்துகள் ஆஸ்டியோபோரோசிஸ் வருவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துகின்றன. அதில் அழற்சி எதிர்ப்பு கார்ட்டிகோஸ்டீரோய்டுகள் (Anti - Inflammatory corticosteroids) எனப்படும் ப்ரிட்னிசோன் (Prednisone) முக்கியமான காரணி ஆகும்.

### மது உட்கொள்ளுதலை கட்டுப்படுத்தல்

ஒரு நாளைக்கு என்று அளவு வைத்து மது அருந்துதல் உண்மையில் எலும்பு முறிவுகளை தடுக்கும். மதுஅருந்தினால் கல்சியம் உறிஞ்சுதலை குறைத்து, உடலில் கல்சியம் அளவுகளை சீர்குலைத்து, ஈஸ்ட்ரோஜன் போன்ற எலும்பை வலுப்படுத்தும் ஹோர்மோன்களை குறைக்கிறது.

# அரிசி வகைகளும், அதன் பயன்களும்



**நமது** உணவில் முக்கிய இடம்பிடிப்பது அரிசி உணவே. அரிசி உணவில்தான் எத்தனை எத்தனை வகைகள். அரிசி உணவில் மட்டும் அல்ல அரிசியிலும் ஏராளமான வகைகள் உள்ளன. அவற்றுக்கு தனித்தனியாக நன்மைகளும் உள்ளன.

பொதுவாக தமிழர்கள் புழுங்கல் மற்றும் பச்சரிசியை மட்டுமே உணவுக்கு பயன்படுத்துவார்கள். அதையும் தாண்டி, பிரியாணிக்கு என பாஸ்மதி அரிசி பயன்படுத்தப்படுகிறது.

### புழுங்கல் அரிசி

தற்போது நாம் சாப்பிடும் புழுங்கல் அரிசி பொலிஷ் செய்வதாகக் கூறி அதில் உள்ள ஏராளமான விற்றமின்களும், சத்துக்களும் நீக்கப்பட்டுவிடுகிறது. அதையும் நாம் சில முறை தண்ணீரில் கழுவி, நன்கு வேகவைத்து கஞ்சியை வடித்துவிட்டு வெறும் சக்கையாக சாப்பிட்டு வருகிறோம். எனவே, பொலிஷ் செய்யப்படாத அரிசியே உடலுக்கு ஏற்ற உணவாக இருக்கும்.

### புழுங்கல் அரிசியில் உள்ள நன்மைகள்

புழுங்கல் அரிசி எளிதாக, விரைவாக ஜீரணம் ஆகக்கூடிய தன்மைகொண்ட ஒரு உணவாகும். அரிசி சாதம் முழுமையாக ஜீரணம் ஆக ஒரு மணிநேரம்கூட போதுமானது. பைபர் குறைவாக உள்ள உணவாகவும் புழுங்கல் அரிசி உள்ளது. எளிதாக ஜீரணம் ஆகக் கூடிய உணவு பொருட்களை சாப்பிடவேண்டிய குழந்தைகள், வயதானவர்களுக்கு புழுங்கல் அரிசி சாதம் ஏற்ற உணவாக இருக்கும்.

### பச்சரிசி

நெல்லை அவிக்காமல் அதில் இருந்து அரிசியை எடுப்பதே பச்சரிசியாகும். இது அவிக்கப்படாத அரிசி என்பதால், ஜீரணமாக கடினமாகவும், அதிகநேரம் எடுக்கும் உணவாகவும் கருதப்படுகிறது. பச்சரிசி சாப்பிட்டால் உடல் சதைப்பிடிப்பு ஏற்படும் என்று கூறுவார்கள். எனவே, உடல் மெலிந்தவர்கள் பச்சரிசியை சாப்பிடலாம்.

### பச்சரிசியின் நன்மைகள்

பச்சரிசியை சாப்பிட்டால் உடலில் கொழுப்புச்சத்து அதிகமாகும். உடல் மெலிந்து கொழுப்புச்சத்தே இல்லாமல் பலவீனமாகக் காணப்படுபவர்கள் பச்சரிசி சாதம் சாப்பிடலாம். இதனால் உடலும் பருமனாகும். ஆனால், வயிறு மற்றும் ஜீரண உறுப்புகளில் பிரச்சினை உள்ளவர்கள் பச்சரிசியை தவிர்க்கவேண்டும்.

### சிவப்பரிசி

சிவப்பரிசி உடல்நலனுக்கு மிகவும் ஏற்ற உணவாக உள்ளது. ஆனால், புழுங்கல் அரிசியைவிட இது விலை அதிகம் என்பதாலும், இதன் சுவை மற்ற சுவையோடு நன்றாக சேர்வதில்லை என்பதாலும், இதனை உணவில் பயன்படுத்துவது மிகமிகக் குறைவு.

### சிவப்பரிசியின் நன்மைகள்


சிவப்பரிசியில் அதிகமான பைபர் உள்ளது. இதனை சாப்பிடுவதால், இரத்தத்தில் அதிகமான கொழுப்பு சேர்வது தவிர்க்கப்படுகிறது. மேலும், சிவப்பரிசியில் எண்ணெய் தன்மை இருப்பதால் இரத்த அழுத்தம் குறைகிறது. உடலுக்குத் தேவையான கொழுப்புச் சத்து போதிய அளவுக்குக் கிடைக்கிறது.

மேலும், சிவப்பரிசி சாதத்தை சாப்பிட்டால், உணவில் சீனியின் அளவு சேர்வதுமிக தாமதமாக நடைபெறும். சிவப்பரிசியில் மேலும் ஏராளமான விற்றமின்களும், சத்துக்களும் உள்ளன. இது இயற்கையிலேயே உடலுக்கு ஏற்ற உணவாகும்.

### பாஸ்மதி அரிசி

பாஸ்மதி அரிசியிலும் ஏராளமான வகைகள் உள்ளன. பாஸ்மதி அரிசி வெள்ளை மற்றும் பிரவுன் நிறங்களில் உள்ளன. மற்ற அனைத்து அரிசி வகைகளையும்விட பாஸ்மதி அரிசியில் நிறைய பைபர் அடங்கியுள்ளது.

இதில் பல வகையான உணவு வகைகளை தயாரிக்கலாம். இதன் மற்றொரு சிறப்பு, இந்த அரிசிக்கு என்று தனியாக மணமும், சுவையும் உண்டு. இதில் உடலுக்கு நன்மை பயக்கும் சில வேதிக்குணங்களும் அடங்கியிருப்பதால், ஏனைய அரிசிகளைவிட, பாஸ்மதி அரிசி உடலுக்கு பல நன்மைகளை தருகின்றது.



# பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், பெண்ணுரிமையும்

மேலும் குறிப்பாக குடும்ப செயற்பாடுகளில் மிகவும் அத்தியாவசியமான சில விடயங்கள் காணப்படுபடுகின்றன. அவை இங்கு கிடைக்காத பட்சத்தில் குறிப்பாக பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் சொத்துடைமைகள் என்பன கிடைக்காத சந்தர்ப்பங்களில் அங்கு குறித்த நபர்களுக்கடையில் அதிருப்தி நிலை ஏற்பட்டு அது பாரிய சிக்கலைக் கொடுக்கின்றபோது அதனை வன்முறையாகக் கொள்ளலாம்.

அதாவது வறுமை மற்றும் அழுத்தம் மற்றும் சமூக பண்பாட்டுக் காரணிகளின் காரணமாகவும் இலங்கை மட்டுமன்றி உலகிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்படக் காரணமாகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் பெருந்தோட்ட துறைகளிலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்களும் வீட்டு வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறுகின்றது. ஆகவே தான் இன்றைய சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதன்மூலமும் ஏனைய வன்முறைகளை ஒழிப்பதன் மூலமும் நாம் அமைதியான வாழ்க்கையை வாழ முடியும் என்பது உண்மையாகும்.

அதேபோன்று பெண்களுக்கு எதிரான வன்முறை அல்லது துஷ்பிரயோகம் என்னும்போது பெண்கள் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். எவ்வெவ் வழிகளில் பாதிப்புக்களை எதிர்நோக்கி, அதன்காரணமாக பெண்கள் எந்தந்த அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர் என்பதனைக் குறித்து நிற்கின்றது. குறிப்பாக உலகில் காணப்படுகின்ற வன்முறைகளின் காரணமாக பாதிக்கப்படுகின்றவர்களாக பெண்களே காணப்படுகின்றனர் என்று பெண்கள் தொடர்பான ஆய்வுகள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




பொதுவாக பெண்கள் தங்களது பெயருக்குப் பின்னால் தந்தையின் பெயரை சேர்த்து குறிப்பிடுவார்கள். ஆனால், திருமணம் முடிந்தபிறகு தந்தை பெயருக்கு



# தந்தையின் பெயரையே தொடரும் பெண்கள்

பதிலாக கணவரது பெயரை சேர்த்துக்கொள்வார்கள். ஆனால், தற்போது திருமணத்துக்குப் பிறகும் தந்தையின் பெயரையே தொடர பெரும்பாலான பெண்கள் விரும்புவதாகவும், அவ்வாறே பலரும் செய்கின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

சில பெண்கள், குழந்தைகள் பிறந்துவளர்ந்த பிறகு, அவர்களது முதலெழுத்து வேறாகவும், தாயின் முதலெழுத்து வேறாகவும் இருப்பதால் ஏற்படும் குழப்பதைத் தவிர்க்க, தனது கணவரின் பெயரை சேர்த்துக்கொள்வதாகவும், சில கலாசார, சமூக அழுத்தங்கள் காரணமாகவே பலரும் தங்கள் தந்தையின் பெயரை மாற்றிக்கொள்ள ஒப்புக்கொள்கிறார்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற சமூக அழுத்தங்களை எதிர்த்து வாழ விரும்புவோரும், பெண்ணியத்துக்கு குரல்கொடுப்பவர்களும், தந்தையின் பெயருடனே வாழ்கின்றனர்.

இது குறித்து ஆராய்ச்சி செய்தவர்கள், திருமணமானதும் 62 சதவீத பெண்கள் மட்டுமே தங்களது கணவரின் பெயரை இணைத்துக் கொள்வதாகவும், 74 சதவீத பெண்கள், திருமணமாகி 10 ஆண்டுகளுக்குப் பிறகே இந்த முடிவை எடுப்பதாகவும், 88 சதவீதம் பெண்கள் தங்களது 60வது வயதில் மட்டுமே கணவரின் பெயரை சேர்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பதற்றமில்லாத அழகு வேண்டுமா?

சிலரை பார்த்தால் ப்ரிட்ஜில் வைத்த அப்பிள் பழம்போல எப்போதும் ப்ரெஷ் ஆக இருப்பார்கள். இன்னும் சிலரோ எப்போதும் தூங்கி வழிந்த மூஞ்சியுடன் இருப்பார்கள். இப்படி இருப்பவர்களுக்கு சுறுசுறுப்பும் இல்லாமல் இருப்பதோடு அவர்களின் அழகும் காணாமல் போய்த்தான் இருக்கும். இவ்வாறு அழகை வைத்து அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு ஒன்று மேற்கொண்டனர்.

அந்த ஆய்வு இயற்கை அழகு யாருக்கு கிடைக்கும் என்ற கோணத்தில் அமைந்து இருந்தது. 500க்கும் மேற்பட்ட இளம் ஆண்கள், பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடம் அவர்கள் தினமும் மேற்கொள்ளும் செயல்களில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆய்வின் முடிவில் அடிக்கடி பதற்றமாக இருப்பவர்களை காட்டிலும் பதற்றம் இல்லாமல் எதையும் சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்பவர்கள் ப்ரெஷ் ஆகவும் அழகாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி ஆய்வாளர்கள் கூறும்போது அழகுக்கும் மனதிற்கும் நிறையவே தொடர்பிருக்கிறது.

இந்த மனதை இயற்கையாக அதாவது பதற்றம் இன்றி வைத்துக்கொண்டால் முகமும் அழகாக இருக்கும் என்று தெரிவித்தனர். என்ன நீங்களும் டென்ஷன் பார்ட்டி என்றால் இப்பவே உங்களை பதற்றத்தை தூக்கி எறிந்துவிடுங்கள். இல்லையெனில் அழகு உங்களிடம் இருந்து எஸ்கேப் ஆகிவிடும்.

# ஒரு பெண்ணின் சாமர்த்தியம்

ஒரு ஹெலிகொப்டரில் இருந்துவந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு 9 ஆண்களும், ஒரு பெண்ணும் தொங்கிக்கொண்டிருந்தனர்.


இதில் யாராவது ஒருவர் கையிற்றை விட்டால் மட்டுமே ஹெலிகொப்டர் மேற்கொண்டு பறக்கமுடியும். இல்லை என்றால் கயிறு அறுந்துவிடும்.

இந்த நிலையில், ஹெலிகொப்டரில் இருந்து யாராவது ஒருவர் தனது உயிரை தியாகம் செய்யுமாறு கோரிக்கை குரல் வருகிறது.

ஆனால், ஆண்களில் யாருமே உயிரை தியாகம் செய்ய முன்வரவில்லை. அந்த சமயத்தில், அவர்களைக் காப்பாற்ற அந்த பெண்தானே முன்வந்து கயிற்றை விடுவதாகக் கூறுகிறாள்.

அவள் கயிறை விடுவதற்கு முன்பு, என் குடும்பத்துக்காக நிறைய தியாகம் செய்துள்ளேன். அதுபோல் இன்று உங்களுக்காக இந்தத் தியாகத்தைச் செய்கிறேன் என்று கூறினாள். இதைக் கேட்ட அனைத்து ஆண்களும், தங்களை மறந்து கைதட்டினர்.

பிறகென்ன... அந்த பெண் மட்டும் மீட்கப்பட்டு தனது இடத்தை அடைந்தாள்.



## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக,
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-383

**கேள்வி: முகத்தை அழகாக வைத்திருக்க என்ன செய்யவேண்டும்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 09.09.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 383
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :-381 இற்கான விடை :- இந்தியாவின் அசாம்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- யோ.யசிந்தா, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

383

பெயர் : ..............................
முகவரி : ..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................

டன் என்ற அளவில் உள்ளது. உள்நாட்டு தேவை போக, மீதமுள்ள பாலை, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடராக ஏற்றுமதி செய்யவேண்டும். இவ்வாறு, அவர் கூறினார். நியூசிலாந்தின், பால் பொருட்களில், கலப்படம் செய்யப்படுவதாக உள்ள அச்சப்பாட்டால், சீனா உள்ளிட்ட இதர ஆசிய நாடுகள், நியூசிலாந்திலிருந்து பால் பொருட்கள் இறக்குமதி செய்வதை குறைத்து கொண்டுள்ளன. இது, இந்தியாவின், பால் பொருட்கள் ஏற்றுமதிக்கு மிகச் சிறந்த வாய்ப்பாக உள்ளது. இந்நிலையில், இந்தியாவின் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் ஏற்றுமதி, நடப்பாண்டில், 1 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, “அமுல்” என்ற பெயரில் பால் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுவரும், குஜராத் கூட்டுறவுபால் சந்தைப் படுத்தும் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனர் ஆர்.எஸ்.சோதி தெரிவித்தார்.

## டைசியன்டை ஏமைட் (Dicyandiamide) அல்லது டி.சி.டி என்பது என்ன?

டைசியண்டை ஏமைட் (Dicyandiamide) அல்லது டி.சி.டி. எனப்படும் இரசாயன பதார்த்தமானது சில பிளாஸ்டிக் வகை உற்பத்தியில் பயன்படுத்தப் படுவதுடன் பொதிசெய்வதற்கான நடவடிக்கையிலும் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

30 வருடங்களுக்கு முன்னர் விருத்தி செய்யப் பட்ட இந்த இரசாயன பதார்த்தம் நியூஸிலாந்தின் கால்நடை வளர்ப்பு நிலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காரணம் மண்ணில் நைத்திரேற்றுச் சேர்வைகள் உருவாகுதலைத் தடுத்து, நைத்திரேற்றுச் சேர்வைகளால் நீர் மாசு படுதலைத் தடுத்தலாகும். அதன்மூலம் தூய நீரை கால்நடைகளுக்கு வழங்கமுடியும் என்பதே எதிர்பார்ப்பாகும். பசுக்களின் ஆரோக்கியத்தைப் பேணி, சுத்தமான பாலைப் பெற்று, சுத்தமான பால்மாவைத் தயாரிப்பதற்காக, நிலத்திற்கு பிரயோகிக்கப்பட்ட டிசிடி எங்கனம் பால்மாவுக்குள் வந்தது என்பது விஞ்ஞான ஆய்வுக்குரிய விடயம்.

2004ஆம் ஆண்டிலிருந்து நியூஸிலாந்து கால்நடை விவசாயிகள் குறித்த இரசாயன பதார்த்தத்தை பயன்படுத்திவருவதாக தெரியவருகிறது. டி.சி.டி. என்னும் இரசாயனப் பதார்த்தம் மனித உடலுக்கு எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்து இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினரான வைத்தியர் நலந்த ஹேரத் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

டி.சி.டி. எனப்படும் இரசாயனப் பதார்த்தம் இலங்கைக்கு புதியதல்ல. இதற்கு முன்னர் பால்மா தொடர்பிலான பிரச்சினைகள் எழுந்தபோது டி.சி.டி. இரசாயன பதார்த்தம் குறித்து பேசப்பட்டது. ஆனால், அவை மக்களைச் சென்றடையவில்லை. டி.சி.டி.யானது மனித உடலில் சேர்ந்தால் சிறுநீரகம் தொடர்பான நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ள அதேவேளை புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் காணப்படுவதாக தெரியவந்துள்ளது. இலங்கையில் அண்மைக்காலங்களில் சிறுநீரகம் தொடர்பான நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் டி.சி.டி அதனை மேலும் ஊக்குவிப்பதாக அமையும் என்ற சந்தேகம் நம்மிடையில் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார்.

பொன்டெரா நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பால் மா இலங்கையில் அங்கர், அங்கர் 1+, மெலிபன், டயமன்ட் போன்ற பெயர்களில் மக்களை வந்தடைகின்றது. குறித்த பால்மா வகைகளுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஹைலண்ட், பெலவத்த போன்ற பால்மாவின் மாதிரிகளை ஐ.டி.ஐ(ITI) (தொழில்நுட்பவியல் துறை நிலையம்) ஆய்வு செய்தது.

தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சின் கீழ் செயற்படும் ஐ.டி.ஐ., பொன்டெரா நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பால்மாக்களில் ஒரு கிலோ கிராமிற்கு 0.64 மில்லிகிராம் டி.சி.டி இரசாயன பதார்த்தம் அடங்குவதாக இனங்கண்டனர். அதுமட்டுமல்லாது டயமன்ட் பால்மாவில் 0.67 மில்லிகிராமும், மெலிபன் பால்மாவில் 0.66 மில்லிகிராமும் சிறுவர்களுக்கு வழங்கப்படும் அங்கர் 1+இல் 0.68 மில்லிகிராம் டி.சி.டி இரசாயன பதார்த்தம் காணப்பட்டது.

ஐ.டி.ஐ.யால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் உள்நாட்டு உற்பத்திகளான ஹைலண்ட் மற்றும் பலவத்தையில் டி.சி.டி. இரசாயன பதார்த்தம் காணப்படுவதில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் டி.சி.டி. இருப்பதாக ஐ.டி.ஐ. சந்தேகம் வெளியிட்டிருந்ததுடன் குறித்த பால் மா வகைகளில் டி.சி.டி.காணப்படுவதையும் உறுதிசெய்தது. ஆரம்பத்தில் ஐ.டி.ஐ.யின் கருத்தை முழுவதுமாக புறக்கணித்த சுகாதார அமைச்சு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போர்க்கொடி தூக்கியதன்பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் டி.சி.டி. இருப்பதை ஒப்புக்கொண்டு சந்தேகத்தை உறுதி செய்ய இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மாதிரிகளை தாய்லாந்துக்கு அனுப்பிவைத்தது.

இந்நிலையில் பொன்டெரா நிறுவனம் உட்பட பால்மாக்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தமது பால் மா உற்பத்திகள் தொடர்பிலான விளம்பரப்படுத்தலை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டதையடுத்து பால் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தமது உற்பத்தி பொருட்களை மீளப் பெற்றுக் கொள்வதாக உறுதியளித்துள்ளது.

பால் மாவில் காணப்படும் இரசாயன பதார்த்தம் தொடர்பில் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க சில ஆதாரங்களை முன்வைத்திருந்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் கருத்துதெரிவிக்கையில்,

சீனாவில் சிறுவர்களுக்காக விற்பனை செய்யப்பட்டுவந்த பால்மாவில் மெலமைன் கலந்திருப்பதாக ஒரு செய்தி கடந்த வருடம் வெளிவந்தது. மெலமைன் கலக்கப்பட்ட இந்த பால்மா நியூசிலாந்தில் உற்பத்தி செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சீனாவில் ஏற்பட்ட இப்பிரச்சினை பால்மா குறித்து இலங்கை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும் இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் மெலமைன் காணப்படுவதாக தகவல் கடந்த வருடம் வெளியானது. அண்மையில் பால் மாவில் கதிர்வீச்சு காணப்படுவதாக என்ற மற்றொரு தகவல் வெளியானது. தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பால்மாவில் டி.சி.டி. காணப்படுவதாக செய்தி வெளியாகியது. அந்த விடயம் ஆய்வுரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் மெலமைன் எனப்படும் இரசாயனப் பதார்த்தம் டி.சி.டி. எனப்படும் இரசாயனப் பதார்த்தத்தால் உருவாக்கம் பெற்றது என்பதாகும். நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா உற்பத்திகளில் டி.சி.டி. காணப்படுவதாக நாம் இப்போது தான் கண்டறிந்துள்ளோம். ஆனால், கடந்த வருடம் சர்வதேச விவசாய தகவல் வலையமைப்பு மேற்கொண்ட ஆய்வில் நியூஸிலாந்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் பால் உற்பத்தி பொருட்களில் டி.சி.டி. இருப்பது உறுதிசெய்யப்பட்டது என தெரிவித்திருந்தார்.

அண்மையில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டிருந்த போசாக்குத் துறை நிபுணர் வைத்தியச தமயந்தி பின்வருமாறு தெரிவித்திருந்தார். பைக்கற்றில் அடைக்கப்பட்ட இரசாயனம் கலந்த பால்மாக்களை வாங்குவதை தவிர்த்துவிட்டு மீண்டும் நாம் பாரம்பரிய முறையைக் கைப்பற்றவேண்டிய நேரம் தோன்றியுள்ளது.

பால்மா பாவனையிலிருந்து மீண்டும் பின்னோக்கி செல்வதென்பது மிகவும் கடினமாக செயலாகும். அத்துடன் பொதுமக்கள் தூய பசும்பாலை நுகர்வதற்கு நீண்டகாலம் எடுக்கும் ஆனால், தற்போதைய நிலையில் அதுவே சிறந்த முறையாக பார்க்கப்படுகிறது.

பால் மா பாவனை அதிகரிக்கப்பட்ட காலப்பகுதியில் கால்நடை வளர்ப்பின் அழிவு ஆரம்பமாகியது. இன்று சன நெருக்கடியான பகுதியில் பால்பண்ணையொன்றை காண்பதென்பது அரிய விடயமாக ப்ர்க்கப்படுகிறது.

பால்மாவுக்கு பிரதியீடாக நாம் தூய பாலை தவிர வேறொரு உற்பத்திப் பொருளை நுகர்வோமென்றால் அது முட்டாள்தனமாகவே பார்க்கப்படும் என தெரிவித்திருந்தார்.

உணவு விற்பனை தொடர்பில் சட்டம் என்ன கூறுகின்றதென்பதனையும் நாம் பார்க்கவேண்டும். அந்த வரிசையில் உணவுச் சட்டத்தில் இரண்டாம் பிரிவில் மனிதனின் சுகாதாரத்துக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் உணவுப்பொருளை உற்பத்தி செய்யவோ இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நுகர்வோர் அதிகார சபை சட்டத்திலும் மேற்படி சட்டவாக்கியம் குறிப்பிடப்பட்டதோடு நுகர்வோரை பாதுகாக்கும் பொறுப்பு நுகர்வோர் அதிகார சபைக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உணவுப் பொருட்களினதும் தரத்தினையும் குணத்தினையும் பரிசோதித்து அப்பொருளின் தன்மையை அறிந்து அதனை மக்கள் பாவனைக்கு உரித்துடையது என்பதனை நுகர்வோர் அதிகார-சபை உறுதி செய்யவேண்டும்.

2013 ஜுன் மாதத்திற்கு பின் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் DCD இல்லை.

ஐ.ரி.ஐ. நிலையத்தின் ஆய்வில் உறுதி: சர்வதேச தரத்தில் ஆய்வுகூடம்

நியூசிலாந்திலிருந்து கடந்த வருடம் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மாதிரிகளில் டி.சி.டி இரசாயனப் பதார்த்தம் கலந்திருந்த போதிலும் இவ்வருடம் ஜுன் மாதம் இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பால்மா மாதிரிகளில் டிசிடி இல்லாமை தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) பரிசோதனைகள்மூலம் நிரூபணமாகியுள்ளதென தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதன்படி, 2013 ஜுன் முதல் வெளிவரும் புதிய பால்மா மாதிரிகளில் டி.சி.டி. கலப்படம் இருக்காது என்ற நியூசிலாந்து அரசாங்கத்தின் உறுதிமொழியுடன் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இணங்குகின்ற போதிலும் இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து பால்மா வகைகளினதும் வெவ்வேறு காலப் பகுதிக்குரிய மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் செயன்முறையை நிறுவனம் கைவிடப் போவதில்லையெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

டி.சி.டி. இரசாயனத்தை பருகுவதன் மூலம் உடலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து இதுவரை திட்டவட்டமாக கண்டறியப்படாத போதிலும் அதனை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகூட எலிகளாக எமது பிள்ளைகளை பலி கொடுக்கமுடியாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

மேலும் பல்வேறு தரப்பினரும் குற்றஞ் சுமத்துவது போல் இல்லாமல் எமது தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் சகலவிதமான இரசாயன பரிசோதனைகளையும் முன்னெடுக்கக் கூடிய வசதிகளும் திறமையான விஞ்ஞானிகளும் உள்ளனர் என்றும் அமைச்சர் ஆணித்தரமாக கூறினார்.

கொழும்பு 07 இல் அமைந்துள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால்மா மாதிரிகளின் டி.சி.டி. இரசாயன கலப்படம் தொடர்பிலான சர்ச்சை குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் மேறகண்டவாறு கூறினார்.

இம்மாநாட்டில், நிறுவனத்தின் தலைவர் பணிப்பாளர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் தம்மால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மற்றும் அதற்கூடாக கண்டுபிடிக்கப்பட்டவை குறித்தும் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தனர். நியூசிலாந்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில் கறவை மாடுகள் உண்ணும் புற்களின் நிலத்திற்கு டி.சி.டி. என்னும் இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது. டி. சி.டி. உபயோகத்தினால் பால் உற்பத்திக்கு எந்தவொரு பாதிப்பும் வராது என்ற கொள்கையடிப்படையிலேயே இது பயன்படுத்தப் பட்ட போதிலும் பால்மாவில் இதன் தாக்கம் குறித்து அறியப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டின் அரசாங்கம் இதன் பாவனையை தடைசெய்துள்ளது.

2012 செப்டெம்பருடன் இதன் பாவனை நிறுத்தப்பட்ட போதிலும் அதனுடைய தாக்கத்தின் விளைவாக அதே வருடம் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் குறித்த இலக்கத்தின் கீழ் (Batch number) இறக்குமதிசெய்யப்பட்ட பால்மா மாதிரிகள் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் சோதனைக்கு உட்படுத்தப் பட்டது.

இதன்போது, அங்கர் முழு ஆடை பால்மா, அங்கர் 1 பிளஸ், மலிபன் ஆடை நீக்கப்பட்ட பால்மா, டயமன்ட் ஆகிய 04 பால்மா வகைகளிலும் டி.சி.டி.யினளவு 0.6 இலும் சற்று அதிகமாகக் காணப்பட்டது.

இதனையடுத்தே சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய மேற்படி பால்மா கம்பனிகளும் பொதுச் சுகாதார அதிகாரிகளும் நாடு முழுவதுமுள்ள விற்பனை நிலையங்களிலிருந்த 2012 அக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குரிய பால்மாக்கள் உடனடியாக அகற்றப்பட்டன.

இந்நிலையில், 2013 ஜுன் மாதம் முதல் நியூசிலாந்திலிருந்து வரும் பால்மாக்களில் டி. சி. டி. கலப்படம் இருக்காது என அந்நாட்டு அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்தது. இருப்பினும், சர்ச்சையைத் தொடர்ந்து பாதுகாப்புக் கருதி இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு பால் மாவையும் நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டாமெனவும் சுகாதார அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதற்கிடையில், சுகாதார அமைச்சினால் துறைமுகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட பால்மா மாதிரிகள் தொழில் நுட்ப நிறுவனத்தின் சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இதன்போது அந் நாட்டு அரசாங்கம் கூறியதுபோன்று, 2013 ஜுன் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மாதிரிகளில் டி.சி.டி. காணப்படவில்லை. இருந்தபோதிலும், வெவ்வேறு காலப் பகுதிக்குரியவை. தனியார் இறக்குமதியாளர்களினால் எக்காலத்திற்குள்ளும் நாட்டிற்குள் கொண்டு வரப்படலாம். ஆகையினால் இறக்குமதி செய்யப்படும் அனைத்து தொகுதி இலக்கங்களும் கட்டம் கட்டமாக சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே நுகர்வுக்கு அனுமதிக்கப்படுமாகையினால் பொதுமக்கள் இதுகுறித்து வீணாக அச்சமோ, கலக்கமோ அடையத் தேவையில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

## டி.சி.டி. நச்சுப் பதார்த்தமா?

மெலமைன் நச்சுப் பதார்த்தம் என்பது



ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலக்கூற்றில் ஒரு பகுதியே டி.சி.டி யாகும். டி.சி.டி. நஞ்சா என்பதும் அதனால் உடலில் ஏற்படக்கூடிய அறிகுறிகள் மற்றும் பின்விளைவுகள் இதுவரை கண்டறியப்படாத உண்மை. இருப்பினும், இது மெலமைனின் ஒரு மூலக்கூறு. ஆகையினால் இதுவும் நஞ்சாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

டி.டி.ரி.(DDT) என்னும் களைநாசினி, க்ளோறோ ப்ளோறோ காபனினால் ஓசோன் படையில் துவாரம் ஏற்படல் உள்ளிட்ட பல விடயங்கள் சுமார் 30 வருட ஆராய்ச்சியின் பின்னர் உடலுக்கும் பூமிக்கும் தீயவையென்பது நிரூபிக்கப்பட்டது. அவ்வாறு நீண்ட காலத்துக்குப் பின்னர் டி.சி.டி.யின் உண்மைத்தன்மையும் கண்டறியப்படக் கூடும். அதுவரை காலமும் எமது குழந்தைகளை பரிசோதனைக்கூடத்தின் எலிகளாக்க எம்மால் இடம்கொடுக்க முடியாது.

ஒரு அமைச்சராகவன்றி ஒரு தந்தை என்னும் வகையிலும் எமது நாட்டுக் குழந்தைகள் சந்தேகத்திற்கிடமான இரசாயனப் பதார்த்தம் கலந்த பாலை வழங்குவதற்கு தனியார் நிறுவனங்களுக்கு இடம் வழங்கமுடியாது.

இதுவே டி.சி.டி. கலந்த பால்மாவை தடைசெய்வதற்குரிய காரணமேயின்றி பலரும் குற்றஞ்சாட்டப்படுவது போல் தனியார் நிறுவனங்களின் வளர்ச்சியை வீழ்த்துவதற்கும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்குமான சூழ்ச்சி கிடையாது எனவும் அமைச்சர் பதிலளித்தார்.

## தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வுகூடம்

எந்தவொரு ஆய்வினையும் உபகரணங்களை வைத்துக் கொண்டு உடனடியாக ஆரம்பித்துவிட முடியாது. அதற்கென விசேட ஒழுங்கு முறையொன்றினை எமது விஞ்ஞானிகள் கைவசம் வைத்திருக்கவில்லை.

எனவே, கடந்த முறை இதே சர்ச்சை ஏற்பட்டிருந்த போது எம்மால் இது குறித்து ஆய்வு செய்யமுடியாது எனக் கூறியதற்கான காரணம் இதுதான். தற்போது எமது விஞ்ஞானிகள் டி.சி.டி. கண்டறிவதற்கான ஒழுங்குமுறையொன்றினை ஸ்தாபித்துள்ளனர். எமது ஆய்வுகூடம் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. நான்கு விசேட நிபுணத்துவம் பெற்ற விஞ்ஞானிகளின் கீழேயே அனைத்து சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன. பரிசோதனைக்கென நியூசிலாந்தில் பயன்படுத்தும் டி.சி.டி. இரசாயன பதார்த்தம் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டது எனவும் கூறினார்.

அதேவேளை, பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட அங்கர், லக்ஸ்பிரே, லங்கா ச.தோ.ச., மில்குரோ, ரத்தி, மலிபன், நெஸ்பிரே, ஹைலண்ட், பெலவத்த ஆகிய பால்மாக்களில் டி.சி.டி. கலப்படம் இல்லையென்பதும் நிரூபணமாகியுள்ளது.

நிறுவனத் தலைவர் பேராசிரியர் டபிள்யு. அபேவிக்ரம, மற்றும் பணிப்பாளர் டாக்டர் ஜி. ஏ. எல். பிரேமகுமார ஆகியோர் தாம் மேற்கொண்ட பரிசோதனைகள் குறித்து இதன்போது பூரண விளக்கமளித்தனர்.




ஜோசெப் கிருஷ்ணா

# அவசியம் தேவை





**தென்** ஆபிரிக்க சகல துறை விற்பன்னர் ஜக் கலிஸ் ஒரு நாள் போட்டிகளில் தனது வசதிக் கேற்ப விளையாட அனுமதிக்கப் பட்டிருந்தார். இருந்தும் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் விருப்பத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் இத்தகைய சலுகை முறை சரிவராதென்று தென் ஆபிரிக்க பயிற்றுனர் றஸல் டெமிங்கோ கூறிவிட்டார். கடந்த பெப்ரவரியில் நியூசிலாந்துக்கு எதிராக தனது 321 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடிய இவர் அதன்பின் ஒரு நாள் போட்டியில் ஆடவில்லை.

ஆனால் இப்போது தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபையின் அட்டவணைக்கு ஏற்ப செயற்பட கலிஸ் இணங்கியுள்ளார்.

இதுபற்றிப் பேசிய பயிற்றுனர், இப்போது முதல் அடுத்த உலகக் கிண்ணம்வரை தென் ஆபிரிக்கா 30 ஒரு நாள் போட்டிகளில் விளையாட இருக்கிறது. எங்கள் திட்டம் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு அவரை உள்ளே கொண்டுவருவதே எமது நோக்கம். அதற்காக 30 ஒரு நாள் போட்டிகளிலும் இவர் விளையாடித்தான் ஆகவேண்டும் என்பதல்ல. இப்போதுள்ள அணி உலகக் கிண்ணத்தை நோக்கிய இளமையான அணி. இத்தகைய அணியில் கலிஸ் போன்ற தன்னிகரற்ற வீரர் இருப்பது அணிக்கு எவ்வளவோ பலம் என்றும் கூறியுள்ளார்.

கலிஸ் 2012 இன் பின் ஒருநாள் போட்டிகளில் இருந்து தன்னைத் தவிர்த்துக்கொண்டாலும் பண மழை பொழியும் ஐ.பி.எல் சுற்றுப்போட்டியில் தன்னைத் தவிர்த்துக் கொள்ளவில்லை. ஜக் கலிஸ் போன்றதொரு ஆளுமைக்கு இது ஒரு கறைபடிந்த செயற்பாடாகவே இருந்தது. இருந்தாலும் என் நாட்டுக்கு விளையாடுவதே எனது முதன்மை விருப்பம். தற்பொழுது மனத்தளவிலும் உடற்தகுதி அளவிலும் மிகுந்த உயர் நிலையில் காணப்படுகின்றேன். நான் என்னால் இயன்ற அத்தனையையும் அணிக்குச் செய்வேன் என்கிறார். முப்பத்தெட்டு வயதாகும் கலிஸ் 1996 இல் இருந்து ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர் என்ற பெருமை பெற்றவர். சந்தேகமின்றி இவர் அணியில் இருப்பது தென் ஆபிரிக்க அணிக்கு மிகப் பெரிய பலம்தான்.

# சாதிப்பாரா செரினா



**றெ**ன்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் நடைபெறும் அமெரிக்க ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் கிண்ணம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுபவர். ஆனால் இவருக்குச் சவால்விட்டுக் கொண்டிருக்கும் ஒரு வீராங்கனை தர வரிசை இரண்டில் இருக்கும் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரென்கா.

செரினா அமெரிக்க ஓப்பன் போட்டிகளில் வென்றால் பதினேழாவது கிராண்ட் ஸ்லாம் வெற்றியும், அமெரிக்க ஓப்பன் ஐந்தாவது வெற்றிக் கிண்ணமுமாக இருக்கும்.

கடந்த பதினான்கு மாதத்துக்குள் செரினா விம்ள்டன் கிராண்ட்ஸ்லாம், லண்டன் ஒலிம்பிக் வெற்றிக் கிண்ணம், அமெரிக்க ஓப்பன் கிராண்ட் ஸ்லாம், இவ்வருட பிரான்ஸ் கிராண்ட் ஸ்லாம் என்று வெற்றிகள் பெற்று எல்லோருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தவர்.



ஆனால் இன்னொருபுறம் இவர் அடைந்த டோஹாவில் பெப்ரவரியில் நடைபெற்ற றென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டித் தோல்வி, மற்றும் கடந்தவாரம் அமெரிக்க சின்சினாட்டி றென்னிஸ் கிண்ண இறுதிப் போட்டித் தோல்வி இரண்டும் விக்ரோரியா அஸரென்காவின் கையாலேயே ஏற்பட்டது என்பது விசேடமான செய்தி.

எனவே இப்போதுள்ள கேள்வி முப்பத்தொரு வயதிலும் சாதனைகள் புரிந்துகொண்டிருக்கும் செரினாவை, அமெரிக்க ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் வெல்ல இவர் விடுவாரா அல்லது அந்தச் சாதனைக் கிண்ணத்தை அஸரென்கா தட்டிப் பறித்துக்கொள்வாரா என்பதுதான். ஏனெனில் இப்பொழுது இரண்டு வீராங்கனைகளுமே சமபலத்தில்தான் இருக்கிறார்கள்.

கடந்துபோன ஒன்பது கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் இந்த இருவரும் ஏழு கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார்கள். எனினும் அஸரென்காவைவிட செரினா மீதான பார்வையே அதிகம் என்பதால் என்ன செய்யப் போகிறீர்கள் என்று அவரை நோக்கியே கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக, அஸரென்காவிடம் இரண்டு போட்டிகளில் தோற்றுவிட்டீர்களே என்று கேட்டபோது, அதுதான் நன்மையோ என்றும் தெரியவில்லை. ஏனெனில் தொடர் வெற்றிகளுடன் அமெரிக்க ஓப்பன் களத்தில் இறங்கும்போது அதுவே பெரியதொரு அழுத்தமாக இருந்திருக்கும். இப்போது அந்தப் பதட்டம் இல்லை. இது முற்றிலும் புதிய களம். " புதிய நிகழ்வு என்று எடுத்துக்கொண்டு திறம்படவிளையாடும் சந்தர்ப்பம் உண்டென்று கூறியுள்ளார். தரவரிசை முதல் இரண்டு இடங்களிலும் இருக்கும் செரினாவுக்கும், அஸரென்காவுக்கும் அமெரிக்க ஓப்பன் றென்னிஸ் போட்டிகள் மிகப்பெரிய பலப்பரீட்சையாகத்தான் இருக்கப் போகின்றது.

# பெரும் பாய்ச்சல்




**சீ**னாவில் நான்கிங் நகரில் நடைபெறும் ஆசிய இளையோர் தடகளப்போட்டிகளில் 400மீற்றர் மகளிர் பிரிவில் நிர்மலி மதுஷிகா வெண்கலப் பதக்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளார்.

சீன மங்கை தங்கத்தையும், தைப்பே மங்கை வெள்ளியையும் பெற வெண்கலப் பதக்கத்தை வென்றவர் மதுஷிகா. இவர் காலி பிரதேசத்தில் உள்ள கட்டலுவ மகா வித்தியாலயத்தில் பயின்ற இவர் கடந்த வருடம் 400மீற்றர் ஓட்டத்தில் 16 வயதிற்குட்பட்ட பிரிவில் 57 செக்கன்களில் ஓடிமுடித்து அசத்தியவர். அதன்பின் தேசிய இளையோர் போட்டிகளில் அதிரடியாக 56.4 செக்கன்கள் என்று முன்னேற்றம் கண்டவர்.

முன்னதாக உலக இளையோர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கு கொள்ளும் தகுதியை இவர் பெற்றிருந்தாலும்கூட உபாதைகளின் காரணமாக கலந்துகொள்ள இயலாமற் போயிற்று. அதுவும் போட்டிகளுக்காக உக்ரெய்ன் நாட்டுக்குச் சென்றபின் ஓடமுடியாமற் போனது. அவருக்கு மிகுந்த வேதனையாக இருந்திருக்கும். ஆனால் இந்த இளம் புயல் சீனாவில் சாதித்திருக்கிறது.

**இலங்கை வென்றெடுத்த மேலும் சில பதக்கங்கள்:**

❖ தில்ஹாணி பெர்னான்டோ
800மீற்றர் ஓட்டம்- (வெண்கலம்)
குளியாப்பிடிய மத்திய கல்லூரி

❖ அனுராதா விதுஷாங்க
400மீற்றர் தடைதாண்டல் (வெண்கலம்)
· சென்.மேரிஸ் வித்தியாலயம் கேகாலை.

❖ மிஹிலியா மெத்சரணி
மகளிர் ஒற்றையர் ஸ்குவாஷ் (வெண்கலம்)
சிறிமாவோ பண்டார நாயக்க மகளிர் கல்லூரி.

# எங்கிருந்தோ வந்தான்



**நா**ன்கிங் நகர் சீனாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிய இளையோர் தடகளப் போட்டியில் அகில ரஷடிங்க 110மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். முதல் இடம் பெற்ற யப்பான் வீரர் புராயா தங்கம் வென்றார். சீன தைப்பே வீரர் வெண்கலம் வென்றார்.

அகில, தனது நிகழ்வை 13.99 செக்கன்களில் ஓடிமுடித்தார். இந்த வகையில் 110மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தை 14 செக்கன்களுக்குள் ஓடிமுடித்த இரண்டாவது வீரர் என்கிற பெருமையைப் பெறுகிறார். இரத்தினபுரியில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த இந்த பதினைந்து வயதுச் சிறுவன். இவர் உடவளவை சீவலி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன்.

எனக்கொரு தங்கை உண்டு. மொத்தம் நான்கு பேர்தான் எங்கள் குடும்பம். எனது தந்தை வராந்திரச் சந்தையில் சிறு வர்த்தகம் செய்பவர். சராசரிக்கும் குறைந்த வருமானம். ஆனால் இவரது பெற்றோர் அதெல்லாவற்றையும் புறந்தள்ளி இவரது விளையாட்டுத்திறனை வளர்க்கத் தங்களால் ஆன எல்லாவற்றையும் செய்திருக்கிறார்கள். அகில கடந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பாடசாலைகள் தடகளப் போட்டிகளில் தன் நிகழ்வை 14.38 செக்கன்களில் ஓடித் தங்கப்பதக்கம் வென்றவர்.

தன்னை மென்மேலும் வளர்த்துக்கொண்டு அடுத்த வருடம் நடைபெறவுள்ள இளையோர் ஒலிம்பிக் போட்டியில் பங்குகொண்டு சாதிக்க வேண்டுமென்று ஆசை என்கிறான் இந்தச் சிறுவன். இவர் எதிர்காலத்தில் நிறையவே சாதிக்க வாழ்த்துவோம். நாட்டின் நல்ல மனங்கள் இப்பொழுதே இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தயாராகக் காத்திருக்கும் என்று நம்பலாம்.

# வடக்கு தேர்தல் வரை காத்திருக்க வேண்டிய பட்டதாரிகள்

**பட்டதாரிகளின் நலன்களையும், திறமைகளையும், ஊக்குவிக்கக் கூடிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் அரசாங்கம் முன்வைத்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளின் மத்தியில் வழங்கப்பட்ட பயிலுனர் நியமனங்கள் இப்போது இழுபறி நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது.**

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டவர்களுக்கு முதலில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று நம்பிக்கொண்டே ஒரு வருடத்தைக் கடத்தி விட்ட நிலையில் எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஒரே தடவையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என்றும், 35 வயதைக் கடந்தவர்களுக்கு நியமனங்கள் கிடைக்காது என்றும், கட்டம்கட்டமாக என்றும் சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை என்றே சொல்லவேண்டும்.**

**பிரகஸ்பதி**

பட்டதாரிகள் வேலையற்றிருப்பதனால் ஏற்படும் குழப்பங்களைக் குறைப்பதற்காகவும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்வகையிலும் கடந்த வருடத்தின் கால் பகுதிக்குப் பின்பிருந்து பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இது இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இருந்தபோதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களே முதன்மைப் படுத்தப்பட்டிருந்தன. இந்த நியமனங்கள் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் வந்த கையோடு வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இது வரையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாத நிலையே காணப்படுகிறது. இந்த வாரம் பட்டதாரிகளின் இவ்விவகாரம் குறித்து ஆராயலாம்.

பட்டதாரிகளைப் பயிலுனர்களாக உள்ளீர்ப்பது தேர்தல் வெற்றியை மையமாகக் கொண்டது என்ற விமர்சனங்களுக்கு அப்பால் அனைத்து பட்டதாரிகளையும் உள்வாங்கும் வகையில் மாவட்ட ரீதியில் நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தனது அமைச்சின் கீழ் உள்ள செயலகங்களுக்கு பட்டதாரிகளை உள்வாங்கியது. அதனை மேற்கொள்கையில் இன்னும் ஒரு சில மாதங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை உறுதிப்படுத்தப்படாத தரப்புகளால் உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றினை நம்பி அடிபுடிபடாத குறையாகப் பட்டதாரிகள் அவ் அமைச்சில் இணைந்துகொண்டனர்.

அதற்கான பயிலுனர் நியமனங்கள் தனியாக வழங்கப்பட்டன. போலவே ஏனைய அமைச்சுக்கள் தங்களுடைய அமைச்சுகளுக்கான பட்டதாரிகளையும் சேர்த்துக்கொண்டனர். மிகுதியாக எஞ்சியவர்களை வேறு மாவட்டங்களுக்கும், மாகாணங்களுக்கும் நியமனம்செய்வது என்றும் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

நிரந்தர நியமனங்களுக்காக எங்கு சென்றாலும் பரவாயில்லை என்ற நிலையிலேயே பட்டதாரிகள் இருந்தனர். காலம், மாதம் ஒ்ன்றாகச் சென்று இப்போது ஒரு வருடமும் கடந்துவிட்டது. ஆனாலும் இதுவரையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் அம்பாறையில் பட்டதாரிகள் தமக்கான நிரந்தர நியமனம் கோரிப் போராட்டத்தினை நடத்தத் தயாராகியிருந்தனர். கடந்த வாரம் நடக்கவிருந்த அப்போராட்டம் ஏதோ பல காரணங்களால் கைவிடப்பட்டுள்ளது.

இருந்தாலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை அவ் அமைச்சு மாதுருஓயா, ரன்தம்பே, மின்னேரியா, சீனக்குடா போன்ற இராணுவ பயிற்சி முகாம்களில் நடத்தியிருந்தது. அதுதவிரவும் அவற்றுக்குச் செல்லத் தவறியவர்களுக்கான பயிற்சிகளை மாவட்ட ரீதியிலும் நடத்தியிருந்தது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 457 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். இதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இணைக்கப்பட்டவர்களின் மொத்தத் தொகை 16ஆயிரம் என்று பொருளாதாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்திருக்கிறார்.

திறன் அபிவிருத்திப் பயிற்சிப் பட்டறைகளை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியினை நிறைவு செய்ய பட்டதாரிகள் பல தடைகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டனர். இருப்பினும், இவ்கள் பயிற்சியை நிறைவு செய்தவுடன் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அது இன்னமும் நிறைவேறவில்லை.

இந்த நிலையில் தற்போது, 35 வயதைத் தாண்டிய பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படமாட்டா என்று ஒரு தகவல் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. நாட்டில் பயிலுனர்களாக இணைக்கப்பட்ட 52 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்குவது என்பது ஒரு சாதாரணமான விடயமல்ல. இந்த நிலையில் வடக்கு உட்பட 3 மாகாணங்களுக்குத் தேர்தல் அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு பிரச்சாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வாய்ப்புக்கள் குறைவு என்றாலும், மட்டக்களப்பில் நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள ஒரு தொகுதியினருக்கான திறன் அபிவிருத்தி பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்ட மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுனர்களாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்றி வருபவர்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பான நிரந்தர நியமனங்கள் செப்ரம்பர் முதலாம் திகதி கிடைக்கப்பெறும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ளவர்களுக்கு செப்ரம்பர் முதலாம் திகதியும், ஏனைய அமைச்சுக்களில் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு கட்டம்கட்டமாகவும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த பட்டதாரிகளின் நியமனங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வழங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா நிறைவு செய்தவர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், அபிவிருத்தி, சுகாதாரம் எனப் பல்வேறு விடயங்களிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் நிலையில் தற்போது பட்டதாரிகள் தமது நிரந்தர நியமனத்தினையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

பட்டதாரி நியமனங்கள், வேலையில்லாப் பிரச்சினைகள் எனப் பல தடவைகள் எழுதப்பட்டிருந்தாலும், தற்போதைய நிலையில் பயிலுனர்களாக உள்வாங்கப்பட்டுள்ளவர்களில் பல்கலைக்கழகங்களில் இருந்து அப்போதுதான் வெளியில் வந்தவர்கள் முதல், திருமணமாகிப் பிள்ளைகளுடன் இருப்பவர்களும் இருக்கிறார்கள். வீட்டில் தாய், தந்தையரின் வருமானத்தினை நம்பி இருப்பவர்களின் நிலைப்பாடு வித்தியாசமாக இருந்தாலும் தங்களது வருமானத்தினையே நம்பி வாழ்க்கை நடத்தும் குடும்பங்கள் தமது வாழ்க்கையைச் சாளிக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

பல குடும்பங்கள் இருக்கும், நகைகள் பொருள்களை விற்றும் கடனுக்கு மேல் கடன் வாங்கியும் தமது குடும்ப பொருளாதாரத்தினைச் சமாளித்துவருகின்றனர் என்பதே வெளிப்படையானது. இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும் என்று நிரந்தர நியமனத்தையே எதிர்பார்த்து நடந்தேறும் பல தேவைகளுக்கு அவ் நியமனமே தீனியாக இருக்கும்.

திட்டங்களோ, நோக்கங்களோ முன்வைக்கப்படாத நிலையில் பட்டதாரிகள் பல போராட்டங்களையும் உண்ணா விரதங்களையும் நடத்திக் கொண்டிருந்த வேளையில்தான் பட்டதாரிப் பயிலுனர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பட்டதாரிகள் வேலையற்று தமது எதிர்காலத்தினைத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியாதவர்களாக கடந்த பல வருட காலத்தை ஓட்டிவருந்திருந்த நிலையில் இவை கிடைத்திருந்தன.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் இருந்த யுத்த சூழ்நிலையில், உயிராபத்துக்கு மத்தியிலும் தங்கள் வறுமைச் சூழலிலும் தங்கள் பட்டப்படிப்புகளை நிறைவுசெய்திருந்தனர். பட்டதாரிகளான இவர்கள் கடந்த காலங்களைப் போன்று அரசாங்கம் பல துறைகளிலும் தொழில்வாய்ப்புகளை வழங்கும் என்ற நம்பிக்கையுடனேயே இருந்துவந்தனர்.

பட்டதாரிகளின் நலன்களையும், திறமைகளையும், ஊக்குவிக்கக்கூடிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் அரசாங்கம் முன்வைத்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளின் மத்தியில் வழங்கப்பட்ட பயிலுனர் நியமனங்கள் இப்போது இழுபறி நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டவர்களுக்கு முதலில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று நம்பிக்கொண்டே ஒரு வருடத்தைக் கடத்தி விட்ட நிலையில் எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஒரே தடவையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என்றும், 35 வயதைக்கடந்தவர்களுக்கு நியமனங்கள் கிடைக்காது என்றும், கட்டம்கட்டமாக என்றும் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை என்றே சொல்லவேண்டும்.

இந்த நியமனத்தால் வேலையற்றிருப்பவர்களின் தொகை குறைக்கப்பட்டுள்ளது. என்றாலும், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 10ஆயிரமாகும்.

இந்தப் பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக்கு எந்த வகையில் போதுமானதாக இருக்கும் என்பதை யாரும் சிந்திப்பதாக இல்லை என்பது பட்டதாரிகளது கவலையாக இருக்கிறது.

வேலையில்லாதோர் குறைக்கப்பட்டு வறுமை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இந்த வறுமை குறைக்கப்பட வேண்டுமாக இருந்தால் பட்டதாரிகள் அனைவருக்கும் நிரந்தர நியமனங்களை வழங்கியாக வேண்டும்.

இல்லாவிட்டால் கொடுப்பனவினையேனும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் தற்போதைய நிலையில் பட்டதாரிகளின் கோரிக்கையாக இருக்கிறது. இது சாத்தியப்படுமா என்பது வடக்குத் தேர்தல் முடியும்வரையில் காத்திருக்க வேண்டியதுதான்.

# ஊடக சுதந்திரம்?

எட்வார்ட் ஸ்னோடன் வைத்திருக்கும் அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களை தொடர்ந்து வெளியிடாமல் தடுப்பதற்கு, பிரிட்டிஷ் பத்திரிகை 'கார்டியனுக்கு' பிரிட்டிஷ் அரசால் கடும் அழுத்தம் கொடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரொனின் 'டொப்' ஆலோசகர் ஒருவர் இதற்காக களம் இறங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

இதுதொடர்பாக நேரடி செய்திகள் வெளிப்படையாக வெளியாகவில்லை. இருப்பினும், அப்படியொரு முயற்சி சீரியசாக நடப்பதாக தகவல்கள் உள்ளன. வெளிச் செய்திகளை விடுங்கள், கார்டியன் பத்திரிகை ஆசிரியரே இதை ஒப்புக்கொண்டுள்ளார். "பிரிட்டிஷ் அரசின் மிக சீனியர் அதிகாரி ஒருவர் என்னை தொடர்புகொண்டு, ஸ்னோடன் இரகசியங்களை தொடர்ந்து வெளியிடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள் என எச்சரிக்கை விடுத்தார். தாம் பிரிட்டிஷ் பிரதமரின் பிரதிநிதியாக என்னுடன் பேசுவதாகவும் அவர் சொன்னார்" என்கிறார், கார்டியன் பத்திரிகை ஆசிரியர் ஆலன் ருஸ் பிரிட்ஜர்.

பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களில் அடிபடும் (உறுதி செய்யப்படாத) தகவல்கள், கார்டியன் பத்திரிகைக்கு மிரட்டல் விடுத்தவர் ஜெரெமி ஹெய்வூட் என்கின்றன. இவர், பிரதமரின் சீனியர் அரசியல் ஆலோசகர்.

மீடியா வட்டாரங்களில் அடிபடும் மற்றொரு தகவலின்படி, கார்டியன் பத்திரிகை செய்தியாளர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அத்துடன், கார்டியன் பத்திரிகை அலுவலகத்தில் உள்ள சில கம்பியூட்டர் ஹார்ட் டிஸ்க்குகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

கார்டியன் பத்திரிகை நிர்வாகமே இந்த ஹார்ட் டிஸ்க்குகளை அழித்ததாகவும் சொல்கிறார்கள். "தேசிய பாதுகாப்பு" காரணம் காட்டி பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற முன்னெச்சரிக்கை காரணமாகவே, தம்மிடம் இருந்த சில ஆதாரங்களை கார்டியன் பத்திரிகை அழித்தது என்றும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், ஸ்னோடன் விவகாரத்தை பத்திரிகையில் வெளிப்படுத்திய செய்தியாளர் டீம், ஏற்கனவே பிரிட்டனில் இருந்து வெளியேறி தற்போது தென்அமெரிக்க நாடு ஒன்றில் இருந்து இயங்குவதாகவும் தகவல் உண்டு.

எட்வார்ட் ஸ்னோடன் தொடர்பான கட்டுரைகள் அனைத்தும் லண்டனில் வைத்து எழுதப்படுவதில்லை என்றும், தென்அமெரிக்க நாடு ஒன்றில் வைத்து எழுதப்பட்டு, அங்கேயே லே-அவுட் செய்யப்பட்டு, கம்பியூட்டர்மூலம் லண்டனில் உள்ள கார்டியன் அச்சகத்துக்கு பிரின்டிங்குக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் விபரம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

பிரிட்டிஷ் பிரதமரின் அலுவலக செய்தித் தொடர்பாளர் ஒருவர், "இது தொடர்பாக தெரிவிக்க தகவல் ஏதும் எம்மிடம் இல்லை. தனிப்பட்ட நிறுவனம் (கார்டியன்) ஒன்றின் மீது எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை பற்றி பிரதமர் அலுவலகம் கருத்து கூறுவதில்லை. ஆனால், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆவணங்கள் ஒரு தனி நபரிடமோ, அல்லது நிறுவனத்திடமோ இருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது நடைமுறை" என்றார்.

அமெரிக்க வெள்ளை மாளிகை செய்திப் பிரிவு, பிரிட்டனில் நடக்கும் இந்த விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கமறுத்துள்ளது. வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோன் ஏர்னஸ்ட், "விவகாரம் ஒரு அமெரிக்கர் (ஸ்னோடன்) பற்றியதாக இருந்தாலும், மற்றொரு நாட்டு (பிரிட்டன்) அரசின் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்கா கருத்துக்கூற முடியாது" என்றார்.

அப்போது செய்தியாளர் ஒருவர், "எட்வார்ட் ஸ்னோடன் தொடர்பான செய்திகளை வெளியிடும் அமெரிக்க பத்திரிகை ஒன்றின் கம்பியூட்டர் ஹார்ட் டிரைவ்களை அழிக்க வேண்டியநிலை, அமெரிக்காவில் ஏற்படும் என்று சொல்லமுடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த ஜோன் ஏர்னஸ்ட், "அப்படியொரு நடவடிக்கை அமெரிக்காவில் எடுக்கப்படும் என்பதை கற்பனைசெய்து பார்ப்பதே கடினமாக உள்ளது" என்பதுடன் நிறுத்திக்கொண்டார். பிரிட்டிஷ் அரசு இந்த விவகாரத்தில், தும்பை விட்டு வாலைப் பிடித்துவிட்டது போலத்தான் தெரிகிறது. டேவிட் கமரொன் அரசுக்கு எதிராக ஆளாளுக்கு பிய்த்து உதறப் போகிறார்கள் என்பது மட்டும் உறுதி.

ஆமா.. ஸ்னோடன் விவகாரத்தை மீடியாவில் வெளியிட்டது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதென்றால், எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுக்கப்போகிறது, பிரிட்டிஷ் அரசு?

சோ.திலகராஜ்
கண்டாவளை






# மாற்றங்கள்

அரவிந் எனக்குக் கிடைக்கா விட்டாலும் அவனுக்கோர் நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமென ஆர்த்தி கூறினாள்.

வெள்ளிக்கிழமை அரவிந் கோவிலுக்கு வருவான். அப்போது இவ்விடயத்தை கதைத்துவிடலாமென பார்வதி கோயிலுக்குப் போனாள். ஆர்த்தி தன்னை ஏமாற்றிவிட்டாள். அதுமட்டுமல்ல ஒரு கொலைகாரியாகவும் ஆகப்போகின்றாள். இனி எனக்கென்ன வாழ்க்கை பாட்டியை இந்த வயதுபோன வேளையில் நன்றாகக் கவனித்து அவர் வாழும்வரை அவருடன் இருந்துவிட்டு அவர் இறந்தவுடன் நானும் இறப்பதுதான்.

இவ்வுலகில் தான் அப்பா, அம்மாவுடன் சேர்ந்து வாழாவிட்டாலும் மறு உலகில் வாழும் தனது தாய், தந்தையுடன் பாட்டி சேரும் அதே நாளில் நானும் போய் விட வேண்டுமென்ற எண்ணம் மட்டுமே அரவிந்திடம் இருந்தது. இவ்வாறு விரக்தியடைந்த அரவிந் வழமைபோல் கோவிலுக்குப் போகவில்லை. நீண்டநேரம் எதிர் பார்த்த பார்வதி அரவிந்தின் G.S. அலுவலகம் சென்று கதைப்போமென நினைத்தார். அங்கு யாரும் நின்றுவிட்டால் பிசகாய்ப் போய்விடுமென யோசித்தவாறு வீடு சென்று கட்டையில் கட்டிநின்ற மாட்டைக் கழற்றிவிட்டாள்.

மாலை இந்த மாட்டைத் தேடுவது போல் அரவிந் வீட்டுக்குச் சென்று நேரடியாக உள்ளறைக்குச் சென்றுவிட்டாள். அப்போது இதைப்பார்த்த் பாட்டி என்ன வழமையாக கேற்றுக்கு வெளியேதான் நிற்பார். தம்பிக்கு விதானை வேலை கிடைத்தவுடன் உள் வளவிற்குள் மட்டும் வருவார்கள். இப்போ வீட்டிற்கு உள்ளே வந்துவிட்டார்கள் எனப் பாட்டி நினைத்தாள். நாவல் மரத்தடியில் சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்த அரவிந் எழுந்து வீட்டிற்குள் வந்தான்.

அப்போது எதுவும் சொல்லமுடியாமல் பார்வதியின் உதடுகள் படபடத்தன. தம்பி நான் இஞ்சை வந்ததை ஒருத்தரும் பார்க்கவில்லை. அப்படிப் பார்த்தா ஆர்த்திக்கு முதல் நான்தான் சாகவேண்டும் என்று கூறியது பார்ட்டியின் காதில் கேட்டுவிட்டது. நடக்கப்போவதை தன்னுள் சுதாகரித்துக் கொண்ட பாட்டி கேற் கதவையும், விறாந்தைக் கதவையும் பூட்டிவிட்டு குசினிப் பக்கம் சென்றுவிட்டாள்.

என்ன வந்தனீங்கள் சொல்லுங்கோ என அரவிந் கேட்க நான் இங்கே வந்தது ஆர்த்தியைப் பற்றிக் கதைக்கத்தான். இரண்டு பேரும் சேர்ந்து இப்படிப் பண்ணிப் போட்டியள். உங்களைச் சேர்ந்து வாழ எங்கடை ஆட்கள் விடமாட்டினம். இதை மீறி நீங்கள் இருவரும் முடிவெடுத்தால் உன்ரை உயிருக்கு ஆபத்து. ஆனா, நான் இப்போ உன்னிடம் கேட்கப் போவதும் உனது வாழ்க்கைக்கு ஆபத்து. என்ரை பிள்ளையும் சேர்ந்து செய்த பிழைக்கு நீ மட்டும் தண்டனையை ஏற்றுவிடு என்று நான் சொல்கின்றேன் என நினைக்காதே ஒரு உயிரைக் காப்பாற்ற எனக்கு வேறு வழி தெரியவில்லை.

ஆர்த்தியின் வயிற்றில் வளருகின்ற குழந்தையை அழிக்க என்ரை மனிசன் எவ்வளவோ முயற்சி செய்தார், முடியவில்லை. அதனால் இப்போ பிள்ளையைப் பிரசவித்து யாருக்கும் கொடுக்கும்படி கூறுகின்றார். இதற்கு வேறு இடம் அனுப்பவும் திட்டம் போட்டுள்ளார். எதுவுமே அறியா இப்பிள்ளையை யாருக்கும் கொடுப்பதா? தூய்மையான உள்ளம்கொண்ட நீயும் இப்பாவத்தைச் சுமக்காதே. இப்பிள்ளையை ஏற்று வளர்ப்பாயா? எனக் கேட்டு அழுதபடி பார்வதி அரவிந்தின் காலில் விழமுற்பட்ட போது அரவிந் அவரின் கையைப் பிடித்து என்ரை பிள்ளையை ஆர்த்தியும் சேர்த்து அழித்துவிட்டாள் என நினைத்தேன். ஆர்த்தி எனக்கில்லை என்றாலும் என் பிள்ளை கிடைத்தாலே போதும். காலம் பூராவும் நான் அதனுடன் வாழ்ந்து விடுவேனெக் கூறினான்.

வலியுடன் இருக்கும் ஆறாத காயம் ஒன்றின் வலி குறைத்தது போன்ற சுகமொன்று அரவிந் மனதில் ஏற்பட்டது. வாற மாதம் 03ஆம் திகதி ஆர்த்திக்கு பிரசவ நாள். அப்போது நீயும் எங்கும் போய்விடாதே. ஆஸ்பத்திரியில விசாரித்துப் பார் என்று கூறிவிட்டு பார்வதி வெளியே போய்ப் பார்த்துவிட்டு பொழுதும் இருளத் தொடங்கிவிட்டதால் வேகமாக நடக்கத் தொடங்கினாள். அப்போது முருகேசனும் மாட்டை தேடிக் கொண்டுவந்தார்.

இடையில் பார்வதியைக் கண்ட முருகேசன் என்ன மாடு கிடைச்சிட்டுதோ? இல்லை அதுவும் இங்கால சொந்தம் கொண்டாட வெளிக்கிட்டுதோ எனக் கேட்டவாறு வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார். இந்தக் கடவுள் என்னைச் சாகவும் விடமாட்டார், வாழவும் விடமாட்டார். ஏன் இப்படிச் செய்கின்றார் என அரவிந்தின் மனதை உறக்கிக் கொண்டாலும் தனது பிள்ளையுடன் என்றாலும் சந்தோஷமாக வாழவேண்டுமென நினைத்தான்.

(தொடரும்)

---

# இழப்புக்கள்!

A.பாரிஸ்
மிகிந்தலை

**வானம்** அழுது நீரைத்தூவிக்கொண்டிருந்தது! வாழ்க்கையை தொலைத்து வானம்போல் மலர்விழியின் விழியும் காலத்துக்கு வந்துபோகும் மழையைப் போலவே அவள் கண்களில் இருந்து கொட்டும் அவள் வாழ்க்கையின் துன்பதுயரங்கள் நினைவுத் திரையில் திரையாக்கப்படும் ஒவ்வொரு நிமிடமும்.

கணவன், மனைவியாய் மூன்று குழந்தைகளுக்கு தாயாகும்வரை வாழ்ந்தவள் அல்லவா? பாசம் எனும் பிணைப்பால் மலர்விழி பிணைந்திருந்தாள். கணவன் கரனுக்கோ காதல் உணர்வு கனவிலும் வந்ததில்லை போல் வாழ்ந்தான், வாழ்கிறான்!

மலர்விழி மலைநாட்டுப் பிரதேசத்தில் ஒரு பின்தங்கிய கிராமத்தில் தமிழ் ஆசிரியையாக பணியாற்றுகிறாள்! கணவன் வன்னியில்.

மலர்விழி ஒரு நாடோடியைப் போல், பலரை நாடோடியாக பரிமானம் செய்த அந்தப் பயங்கரப் போருக்கே இவளும் ஆளானாள்!

ஒரு காலத்தில் மலர்விழியின் தந்தை அனுராதபுர மாவட்டத்தில் பெரும் செல்வந்தர். அவரின் செல்வத்தையும் அவர் உட்பட குடும்ப உறுப்பினர் பலரின் உயிரையும் ஜூலை கலவரம் கைப்பற்றிக்கொண்டது! அத்தனை கொடுமைகளையும் புரிந்த கலவரம் அந்தக் குடும்பத்தில் மலர்விழியையும் தமயன் மணிவண்ணனையும் விட்டுவிட்டது! அந்தக் காலத்தில் மகளையும் மகனையும் கண்டி மாவட்டத்தில் படிப்புக்காக விட்டிருந்தார் மயில்வாகனம்.

அதன்பிறகு தமயனும், தங்கையும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு என்று எல்லா இடங்களுக்கும் நாடோடிகளாக காலத்தை கடத்தினர். குடியிருப்பதற்கு ஒரு காணித்துண்டையாவது வாங்க முயற்சிக்கவில்லை மணிவண்ணன். காரணம் அன்று நாட்டில் இருந்த போர்ச்சூழல்.

காலம் நகர்ந்தது. மலர்விழிக்கு ஆசிரியை நியமனமும் கிடைத்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டானில் இருக்கும் ஒரு சிறிய பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் முல்லைத்தீவிலேயே ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து திருமணத்தை முடித்து வைத்தான் மணிவண்ணன். மாப்பிள்ளைக்கு பத்து இலட்சம் ரூபாவுக்கு நகையும், பணமும் சீதனம் கொடுத்தான்! அது சமாதான காலம்.

அது ஒரு வெள்ளிக்கிழமை. தன் தங்கையை அழைத்தான். அண்ணன் மேல் ஆருயிர் என்பதால் காற்றைவிட வேகமாய் அருகில் நின்றாள் அன்புத்தங்கை மலர்விழி!

"அம்மா! மலர் உன்ர மனுஷனுக்கு கோடிக்கணக்கில் கொடுத்திட்டேன். அவருக்கு ஆச அடங்குதில்ல... நானும் உயிரோடு இல்லாமே போனா... உன்ர நிலையம்மா? எப்பவும் இப்படி தனிமையில இருக்க ஏலாது அம்மா! நான் நாளைக்கு வன்னிக்குப் போறேன்.

காணி ஒன்றை வாங்கி வீட்டகட்டி உன்ர புருஷன் கேக்கிறமாதிரி கொடுப்பம்மா.. பயப்படாம இரம்மா... அவரையும் பற்றி விசாரிச்சிட்டு திங்கட்கிழமை வந்திடுவேன்" என்று கூறிவிட்டு கண்டியிலிருந்து வன்னி நோக்கி கிளம்பினான் மணிவண்ணன்.

மலர்விழிக்கு அண்ணாபோகும் பயணத்தில் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. ஆனாலும் அவள் விழிபிதுங்க தனக்குள் இருக்கும் அந்த இயல்பான நம்பிக்கையை வரவழைத்து தன்னை சமாதானப்படுத்தி உணர்வுகளை ஊமையாக்கிக்கொண்டாள்.

மணிவண்ணன் வன்னியில் போய் இறங்கி சில மணித்தியாலத்துக்குள் வன்னிக்கு வந்தவர்களுக்கு வெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டது! சிலதினங்களில் முகமாலை இராணுவத்தின்மீது தாக்குல் துவங்கப்பட்டது. அன்று முதல் வெளியிடங்களுக்கான தொடர் பாடல் வசதிகள் துண்டிக்கப்பட்டது. இதுதான் இறுதிப் போராகவும் வெடித்தது.

மலர்விழியும் மூன்று குழந்தைகளும் கண்டியிலும், கணவனும் அண்ணனும் வன்னியில் கோரப்போரின் கையில் சிக்குண்டனர். இழந்தவை எல்லாம் இழந்தும் எஞ்சிய சொந்தத்தையும் இழந்ததுபோல் உணர்வை மலர்விழியின் மனசில் உதிர்த்தாலும், அவளை அவளே சமாதனப்படுத்திக் கொண்டாள். மலர்விழியின் காலம் கண்ணீரும் சோறுமாய் கடந்தது!



இறுதிப் போரும் முடிந்தது. முடியாத போராய் மலர்விழியின் இதயத்தில் போர் வெடித்துக் கொண்டிருந்தது.

வன்னியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிறகு வன்னிக்கு சென்றாள். தன் அண்ணாவையும் கணவனையும் தேடி. அங்கு கணவனை தேடக்கிடைத்தது. அண்ணாவை காணக்கிடைக்கவில்லை. கணவன் வேறொருத்தியுடன் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். அந்தப் பெண்ணுக்கும் இரண்டு பிள்ளைகள்.

அந்த அருவருப்பான காட்சியைக் கண்ட மலர்விழிக்கு இன்னும் பன்மடங்கு வெறுப்பை ஏற்படுத்தியது. அவன் மீது அவள் நினைத்ததற்கு மாறா கவே அனைத்தும் நிகழ்ந்தது. அவள் இதுவரை நினைத்திருந்த கணவன் காசுக்குத்தான் பைத்தியம். சீதனம்கேட்டு சண்டைபோடுவது மட்டும்தான் இவன் குணமாய் நினைத்திருந்தவள் இன்றுதான் உணர்ந்து கொண்டாள் பெண் பித்தன் என்பதையும்....?

பெரும் துரோகியான கணவனை பழிவாங்கவோ, வழக்குத் தொடுத்து நஷ்டஈடு, பிள்ளை செலவு என்று எதையும் நினைக்காமல் தனது இயல்பான குணத்துடன் வாழ்க்கையை ஆரம்பித்தாள்.

மலர்விழியிடம் இருக்கும் ஒரு மகத்துவமான குணம் திடீரெண்டு முடிவெடுப்பாள். அந்த முடிவு ஆயிரம் தடவை சிந்தித்து எடுக்கும் முடிவைப்போல் இருக்கும்.

ஆயிரம் பேர் ஆலோசனை கூறினாலும் அவளுக்கெண்டு ஒரு அபூர்வ சக்தி இருக்கு. முடிவெடுப்பதில் அன்றும் அதே போல் ஒரு அற்புத முடிவெடுத்தாள்.

இந்த கேவலமானவனுடன் இனிமேல் வாழ்க்கை நடத்துவதில்லை. பிள்ளைகளுக்குக்கூட அப்பாவை அறிமுகப்படுத்துவதில்லை. அவன் இரண்டாம் தரம் என்ன, இரண்டாயிரம் தரம் தாரம் கொண்டாலும் அவன் யாரோ, நான் யாரோ! என்று இறுதி முடிவெடுத்துக்கொண்டு அம்மா, அப்பா அனைத்து உறவுகளையும் இழந்து இறுதியாய் இருந்த அண்ணையும் இழந்து கட்டிய கணவனையும் இழந்து இழப்பதற்கு எதுவுமில்லாமல், எல்லாம் இழந்தவளாய் மூன்று பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக வாழ்க்கையை நகர்த்த ஆயத்தமானாள்! அத்தனை இழப்புக்களையும் அவளுக்கு இறைவன் விட்ட சோதனையாய் நினைத்து அவளுக்குள் நம்பிக்கைக்கு உயிர்கொடுத்தாள்.

(உண்மை கலந்த கற்பனை)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில் இருக்கின்ற தளத்தையும் இல்லாமல் செய்ய காங்கிரஸ் தலைமை விரும்பவில்லை.

இதனாலேயே இலங்கை மீனவர்களும், தமிழக மீனவர்களும் தங்களுக்குள் தீர்வுகாண மேற்கொள்கின்ற முயற்சிகளை கண்டுகொள்ளாமல் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தங்களுக்குள் ஓர் உடன்பாட்டிற்கு வருமானால் அது தங்களுக்கு வசதியாக இருக்கும் என்று காங்கிரஸ் அரசாங்கம் யோசிப்பதுபோல் தெரிகிறது.

இதுவரையில் இலங்கை மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் 7 தடவைகள் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டிருக்கின்றது. இதன்போது வருடத்தில் 70 நாட்கள் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பட்ட வேண்டுமென்றும், அதேபோன்று 70 நாட்கள் இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி தொழிலில் ஈடுபட முடியுமென்றும் இந்தியத் தரப்பு மீனவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இதனை இலங்கையின் மீன்வளத் துறை அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ணவினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாறாக, இரு தரப்புக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும்கூட நீண்டகால அடிப்படையில் இரு நாடுகளுக்கும் குறித்த உடன்படிக்கைகளால் தலைவலி தொடரவே செய்யுமென்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.


இருநாட்டு மீனவர்களும் எல்லை தாண்டுவதற்கு அனுமதிக்கப்படுவார்களாயின் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இரு நாடுகளுக்கும் இடையிலான சட்டவிரோதப் பயணங்களும் கடத்தல்களும் களைகட்டுவதை கட்டுப்படுத்துவது இருநாட்டுக் கரையோர காவற்படையினருக்கும் சவாலானதாகவே இருக்கும்.

தமிழகத்தின்மீது தாக்குதல் நடத்த முனைகின்ற தீவிரவாத அமைப்புக்கள், யாழ்ப்பாணத்தின் ஊடாக படகுகளில் சென்று தாக்குதல் நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனை தமிழக மாநில உளவுப் பிரிவான கியூ பிரிவினரும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். இலங்கையில் தமிழகத்தின் மீது தாக்குதல் நடாத்தும் நோக்கோடு 'சிலீப்பர் ஷெல்கள்' என்று அழைக்கப்படுகின்ற தீவிரவாதிகள் இலங்கையில் மறைந்து இருப்பதாக கியூ பிரிவு தெரிவிக்கின்றது. இவ்வாறானவர்கள் மீனவர்கள் போன்று இருநாடுகளுக்கும் இடையில் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழல் ஏற்படும். இவ்வாறான நாசகார சக்திகளின் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

எனவே இந்த விடயத்தில் தீவிரமான கவனத்தைச் செலுத்தி தமிழக மீன்வர்களின் எல்லை தாண்டும் விருப்பத்தை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு பெருமளவில் காணப்படுகின்றது. மத்தியில் ஆட்சி அமைத்திருக்கின்ற காங்கிரஸ் அரசாங்கம் வாக்கு வங்கி, இராஜதந்திர நகர்வுகள் என்று சிந்தித்துக்கொண்டு மௌனம் காக்காது வெளிப்படையான நடவடிக்கைகள்மூலம் குறித்த பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணவேண்டும். இதனால் பாதிக்கப்படுகின்ற தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவார்களாயின் அவர்களுக்கு ஆழ்கடலுக்கான மானியத் திட்டங்கள், மாற்று வழிவகைகள் பற்றி ஆராய்வது அவசியமாகும். அதைவிடுத்து இன்னொரு நாட்டின் இறைமையை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகளை கண்டுகொள்ளாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயல்வது இருநாடுகளுக்கு இடையிலும், இரண்டு தரப்பு மக்கள் மத்தியிலும் தேவையற்ற சலசலப்புக்களையே ஏற்படுத்தும்.

# வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் கதை

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



அந்தப் பேராசிரியரிடம் தமிழைக் கற்ற மாணவர்கள் நீங்கள் எங்களை விட்டுப்போகக் கூடாது என்று தடுத்தார்கள். எனது சமூகமே சென்றுகொண்டிருக்கின்றது. நான் மட்டும் எப்படி இங்கே இருப்பது என்று பேராசியர் கேட்டுவிட்டு அவரும்கூட உடுத்த ஆடையுடனே வடபகுதியை விட்டு வெறுங்கையுடன் வெளியேறினார்.

1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அதிகாலை நேரம்பொழுது புலரும் முன்பாகவே ஒரு சமூகம் திக்குத் தெரியாமல் தடுமாற்றத்துடன் சென்றுகொண்டிருந்தது.

'முஸ்லிம் வாட்' எனப்படும் யாழ்ப்பாணம் சோனகத்தெருவை வாகனங்களுடன் வந்து ஆயுதங்கள் சகிதம் சூழ்ந்துகொண்டு புலிகள் இயக்கத்தினர் நின்றபொழுது தாம் ஏன் சுற்றி வளைக்கப் பட்டுள்ளோம் என்பதைக்கூட அந்த அப்பாவி முஸ்லிம்கள் அறிந்திருக்கவில்லை.

தங்களிடம் உதவிபெற்று உண்டு, உடுத்து உறங்கியவர்கள் தானே. அதனால் தங்களுக்கு எதுவும் தீங்கிழைக்கமாட்டார்கள் என்று நினைத்திருக்கவும் மனசு இடம்தரவில்லை.

ஏனென்றால் எல்.ரீ.ரீ.ஈ.யினராகிய இவர்கள் தங்களது சொந்த சகோதரர்களை, அந்த சமூகத்தின் புத்திஜீவிகளை, அப்பாவிகளையெல்லாம் அழித்தவர்கள்தானே என்பதால் மனதில் உள்ளூர ஒரு நடுக்கமும் கலக்கமும் இருந்தது.

இரத்தம் உறைந்துபோன நிலையில் அந்த அதிகாலை நேரத்தில், தங்களுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிந்திராத யாழ். முஸ்லிம்கள், இணையற்ற ஏகவல்லவனான அந்த இறைவனை நினைத்துக்கொண்டனர்.

ஆண்கள் அதிகாலைத் தொழுகை முடித்துவிட்டு பள்ளிவாயலில் இருந்து வந்திருந்தார்கள். பெண்கள் தமது வீட்டுவேலைகளில் மும்முரமாக மூழ்கியிருக்க, தாங்கள் ஒன்றுக்குமே பழக்கப்படாத வேற்று இடங்களுக்கு விரட்டியடிக்கப்படப் போகின்றோம் என்பதை அறியாத குழந்தைகள் உறங்கிக் கொண்டிருக்கும் போதுதான் அந்தக் கொடுங்கோலர்களின் உத்தரவு வந்தது.

ஆமாம். பாலுக்குப் பதிலாக இனிமேல் தாய்மாரின் கண்ணீரைத்தான் பருகப்போகின்றோம் என்பதை அறியாத பச்சிளம் பாலகர்கள் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்க,

அடுத்தவேளை உணவுக்கு அன்றாடம் யோசிப்பவர்கள் தங்கள் நாளாந்த ஜீவனோபாயத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்க,

ஓர் அழிவுக்கான ஆரம்பத்தைப் பற்றிய புலிகளின் அறிவிப்பு வந்து, அந்த அப்பாவி மக்களின் செவிகளில் தோட்டாக்கள்போல் பாய்ந்தது. ஆம் யாழ் முஸ்லிம்கள் அனைவரும் ஜின்னா மைதானத்திற்கு வரவேண்டும் என்ற அறிவிப்பு உரத்த தொனியில் புலிகளால் ஒலிபெருக்கிகள்மூலம் விடுக்கப்பட்டது.

புலிகளின் அறிவிப்பை புறந்தள்ளாது யாழ். முஸ்லிம்கள் அனைவரும் ஜின்னா மைதானத்திற்கு வந்துசேர்ந்தனர். அந்த விளையாட்டு மைதானம் வடபகுதி "முஸ்லிம்களின் வாழ்வோடு புலிகள் விளையாடுவதற்காக இடம் விட்டு மௌனம் சாதித்தது.

அந்தப் பெருவெளியில் அங்கு கூடியிருந்த மக்களின் பார்வையில் அந்த விளையாட்டு மைதானம் போன்று ஒரு வெறுமை இருந்தது.

அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பற்றி அறிய ஆவலாய்த் துடித்தது மனது.

புலிகளின் வக்கிரமனம் ஓர் இனத்தின் இருப்பை துப்பாக்கி ரவைகள் போன்று துளையிட அங்கே கங்கணம் கட்டிநின்றது.

சின்னத்தம்பி மகாலிங்கம் எனப்படும் ஆஞ்சநேயனும் அப்போது இளம்பரிதி என்றழைக்கப் பட்டவருமான புலிப்பயங்கரவாதி அந்த அதிகாலை நேரத்தில் அங்கே வந்து உரத்ததொனியில் ஓர் பிரசங்கத்தைச் செய்தார்.

"முஸ்லிம் மக்கள்மீது வட-பகுதித் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை." என்று தொடங்கிய அவர் மட்டக்களப்பு முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கெதிராக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்று அபாண்டத்தைச் சொல்லி ஒரு குற்றச்சாட்டுப் பட்டியலையே வெளியிட்டார்.

ஆகையினால் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்கள்மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்று தமிழ் மக்கள் கருதுவதாக அப்பாவித் தமிழ் மக்களையும் முஸ்லிம்களுக்கெதிராக சிண்டு முடிந்துவிட்டார்.

இந்தக் காரணங்களால் 2 மணிநேர கால அவகாசத்தில் வடபகுதி முஸ்லிம்கள் அனைவரும் உடனடியாக வடபகுதியை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற புலித்தலைவரின், உறுதியானதும் இறுதியானதுமான உத்தரவை இளம்பரிதி பிரகடனப்படுத்தினார்.

அந்தோ பரிதாபம், அங்கே கூடியிருந்த அப்பாவி முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகள் உயிரோடு சேர்ந்து கடலலை போல் ஆர்ப்பரிக்கத் தொடங்கின. கண்கள் குளமாகி, உடலும் உள்ளமும் சோர்ந்து, நடை தளர்ந்து நாதியற்று நின்றனர்.

நம்பிக்கைவிட்டவர்களின் நயவஞ்சகர்களான புலிகளின் மீது நம்பிக்கை என்பதே இல்லாமலே போயிற்று.

ஆனால், அராஜகம் என்பது என்றோ ஒரு நாள் அழிந்தே தீரும் என்ற அசையாத நம்பிக்கை மட்டும் அடிமனதில் ஒளிக்கீற்றாய் ஒரு மூலையில் மின்னிக் கொண்டிருந்தது.

(தொடரும்...)



# அதிரடி அய்யாத்துரை

ஹி...ஹி...ஹி சத்தியமாய்ச் சொல்லுறனுங்கோ, நான் இப்ப நல்ல சந்தோசமாய்த்தான் இருக்கிறன். கன நாளைக்குப் பிறகு போன கிழமை நான் எழுதினதை நீங்கள் கனபேர் பார்த்து என்ஜோய் பண்ணி இருக்கிறியள் எண்டு மாத்திரம் தெரியுது.

அதில ஒரு பெடிப்பயல் எனக்குக் கடிதம் போட்டிருக்கிறான் பாருங்கோவன். அவன் அந்தக் கடித்தத்தில என்ன கேட்டவன் தெரியுமோ?!

"ஐயா! மண்டையன் குறூப்... மண்டையன் குறூப் எண்டு சொல்லுறியள் எனக்கு ஒண்டும் விளங்குதில்லை." எண்டு கேட்டிருக்கிறான் எண்டால் பாருங்கோவன்.

உந்தக் கேள்வியில இருந்து பெடிப்பயலுக்கு எண்ட பூட்டப்பிள்ளையளின்ர வயசுதான் இருக்கும் எண்டது விளங்குதுங்கோ.

ஏனெண்டால் 89, 90களில நடந்த விஷயம் ஒண்டும் தெரியுதில்லையெல்லோ...

தம்பி.... 88,89 ஆம் ஆண்டுகளில இருந்து இந்தியப் படையள் இங்கை இருக்கேக்கை புரட்சிகர அமைப்பு எண்டு சொல்லுறவையளிட்டத்தான் எல்லாத்தையும் கொடுத்திருந்தவையள். அவையளுக்கு அதுகளை எப்பிடி பாவிக்கிறது எண்டு தெரியாமல் கண்டமேனிக்கு ஆட்டம் போட்டவையள்.

அந்தக் காலத்திலை அவையளின்ர ஆட்சித் திறமையால கொலை, கொள்ளை எல்லாம் தாராளமாய் நடந்தது. பொம்பிளைப் பிள்ளையள் ஒழுங்காய் றோட்டால போகமுடியல்லை. எங்கையாவது சந்துபொந்துக்குள்ள மாட்டிக்கொண்டால் பிடிச்சு சிந்துபாடிப் போட்டுத்தான் விடுவினம் உப்பிடி அட்டூழியங்கள் நடந்த காலத்தில தங்களுக்குப் பிடிக்காதவையளை போட்டுத்தள்ளுறதுதான் அவையளின்ர ஸ்டைல். அதுக்காக தனிக்குறூப் ஒண்டையே வைச்சிருந்தவையள். அந்தக் குறூப்புக்குத்தான் 'மண்டையன் குறூப் எண்டு சொல்லுறது. உந்தக் குறூப்பை நடத்தின்து யார் எண்டு தெரியுமோ?

இப்ப வேதம் ஓதிக் கொண்டிருக்கிற கூத்தமைப்பின்ர சாத்தான் தானுங்கோ. அதுதான் அவையின்ர பேச்சாளரை எண்டு சொல்லுறனுங்கோ. இப்ப தம்பிக்கு விளங்குதோ. மண்டையன் குறூப் எண்டால் யார் எண்டு????

இது இப்படியிருக்க, இவற்றை குறூப்பில இருக்கிற ஒரு பிரதேச சபை தவிசாளர் ஒருவர் செய்த வேலை தெரியுமோ?

ஊருக்குள்ள ஒரு பழமொழியிருக்குத்தானே - தானும் தின்னான் திண்ணுறதுகளையும் விடமாட்டான் என்று சொல்லுறவை. அதுபோலை. இவற்றை ஆதிக்கத்திலை இருக்கிற பிரதேசம் ஒண்டிலை ஆரோ ஒரு புண்ணியவான் றோட்டுப்போட முன்வந்தவராமுங்கோ. அந்த மனிசன் றோட்டுப் போட்டால் தன்ர இமேஜ் டமேஜ் ஆகிப்போகும் எண்டு மறிச்சுப்போட்டு, இப்ப, ஊர்ச்சனம்தான் மறிச்சதெண்டு பேப்பர்களுக்கு கதை விட்டுக்கொண்டிருக்கிறாருங்கோ!

முன்னமும் இதே றோட்டை போடுறதுக்கு 'நெல்சிப் திட்ட'த்தாலை காசு வந்ததாமுங்கோ, அந்தக் காசை எடுத்து, பிரதேச சபைக்கு கட்டடம் கட்டுறன், வெட்டிப் புடுங்கப்போறன், வருமானத்தைக் கூட்டப்போறன் எண்டெல்லாம் ஸ்ரேட்மெண்ட் விட்டவராமுங்கோ.

ஆனா, தன்ரையும், மண்டையன் குழு தலைவற்ரயும் வருமானத்தை கூட்டுறாரே தவிர மக்களுக்கு ஒரு மண்ணும் இல்லை. எண்டு மகாஜனங்கள் கொதிக்குதுகளுங்கோ!

இன்னொரு விசயம் பாருங்கோ, அண்மையில ஒரு கருத்துக்கணிப்பு செய்திருக்கினமாம். அதென்னெண்டால் இந்த 2 வருசத்தில் எந்த பிரதேச சபை தவிசாளர் மக்களின்ர காசைச் சுருட்டி வசதியாய் இருக்கிறார் எண்டு. இதிலை இந்த புண்ணியவானுக்குத்தானாம் முதலாவது இடம் கிடைச்சிருக்கெண்டால் பாருங்கோவன்...!




"கொட்டடா முரசு கொட்டடா
முட்டடா பகையை முட்டடா
தட்டடா தோள் தட்டடா
வெட்டடா சிரம் வெட்டடா!"

ஆர்த்தது முரசம்
அழைத்தது போருக்கு!

தமிழரசன்
போருடை தரித்தான்!

"நில்லப்பா! - இது
வெல்ல முடியாத போரப்பா!
நீ ஏனப்பா போகிறாய்
வீணப்பா!"

சகோதரன்
தத்துவம் பேசினான்!

தமிழரசனின்
கண்கள் ஒளி வீசின!
செவியில் கேட்ட
செந்தமிழ் கவி
நெஞ்சத்தில் ஒலித்தது!

"ஓடியரெல்லாம்
உதையப்பராகிவிட்டால்
உதையப்பரெல்லாம்
ஓடியராகிடுவர்"

உரைத்தான்

உடைவாள் அணிந்தான்!

புறப்பட்டபோது
எதிர்ப்பட்டாள் இன்பா!

செங்கதிர் பட்ட
தாமரைபோல்
தன் முகம் மலர்ந்தாள்!

செவ்விதழ் உள்ளே
சிரித்தது முல்லை!

வேறொரு தருணம்
என்றால்
வீசியிருப்பான் வினா!

"பறிக்கவா?
பதிக்கவா?
என்று கேட்டிருப்பான்!

அவளும்தான் குறும்புக்காரி
எதைப் பறிப்பீர்?
எதைப் பதிப்பீர்?
எனக் கேட்டிருப்பாள்!


"பூத்திருக்கும் முல்லை
அதைப் பறிக்கவா?
பூவிதழில் முத்திரை
ஒன்றைப் பதிக்கவா?"

விடமாட்டாள் அவளும்
வீசுவாள் பதில்.

'பறித்தாள்
முல்லை மாலையாகும்!
முத்தம் பதித்தால்
பூவை இவள் மயக்கமாவாள்!
மாலை வேண்டுமா?
மயக்கம் வேண்டுமா?"

"மாலையும் வேண்டும்
மயக்கமும் வேண்டும்!
செவ்விதழ் தேனும்
சிறப்புற வேண்டும்!
கொய்யாக் கனிகள்
வசப்பட வேண்டும்!
கோல மயிலே
குலவிட வேண்டும்!
காலம் முழுதும்
களித்திட வேண்டும்!

இன்பா முகத்தில்
இளைய முறுவல்!



# உயிரோடு உயிராக

"வேண்டும்! வேண்டும்

எத்தனை வேண்டும்?"
"எல்லாம் வேண்டும்
இனியவை வேண்டும்!

பூவும், கனியும்
கமுகுத் தோளும்
வாழைக் கால்களும்
பஞ்சுப் பாதமும்
பிஞ்சு விரல்களும்
கொஞ்சு முகமும்
கொவ்வைக் கனியும்
கிளி மூக்கும்
கனிதரு மேனியும்
எப்போதும் வேண்டும்!"
என்பான் அவன்.

"எனக்கு வேண்டும்
எனக்கும் வேண்டும்"
என்றுரைப்பாள் அவளும்!

"குத்தும் மீசையும்
குறும்பு விழிகளும்
உருண்ட தசையும்
திரண்ட மார்பும்
நெற்றியில் புரளும் முடியும்
வெற்றியில் உயரும் புருவமும்
உரம்கொண்ட தேகத்தை
திடம் கொண்டு
தாங்கும் கால்களும்
எல்லாம் வேண்டும்
எப்போதும் வேண்டும்!"

தமிழரசன்
அவளை கைகளுக்குள்
கவர்ந்து கொள்வான்!
கைகள் பரவும்
கண்கள் ஏங்கும்!

"இப்போதே வேண்டுமா?
இங்கேயே வேண்டுமா?
காதோரமாய்
தமிழரசன் கிசுகிசுப்பான்!"

"ஆசைதான்
பொறுத்திரும் பிள்ளாய்
பொங்கி எழலாம்!
தள்ளிவிட்டு ஓடுவாள்!"

கண் எதிரே இப்போது
இன்பாவைக் கண்டதும்
தன் நெஞ்சுக்குள்
சிலிர்த்துப் போனான்!

"போய் வரவா - பகைப்
பேய் விரட்ட?"

கண்களால்
சம்மதித்தாள் இன்பா.
மென்மையாய் அணைத்தான்
போருடை பூண்ட மார்பில்
பூங்குயில் சாய்ந்தாள்!

முகத்தினை உயர்த்தி
அவனது உதட்டினை நாடி
இதழினால் ஒற்றினாள்!

இதழும், இதழும்
ஒட்டிக் கொள்ள
நாவுகள் இரண்டும்
நயத்தனை உரை
உயிர்கள் இடம்மாறி
உட்கார்ந்து கொண்டன!

அவள் உயிரை
வாங்கிக்கொண்டு
அவன் சென்றுவிட்டான்!

அவன் உயிரை
வைத்துக்கொண்டு
அவள் காத்திருந்தாள்!

'ஏனடி தோழி
உனக்கு பயம் இல்லையா?'

"ஏன் பயம் எனக்கு
என்னவர் வருவார்!

ஏன் என்று கேளடி
என் உயிர் அவரிடம்
எப்படி இழப்பார்?
தன் உயிர் என்றால்
போகட்டும் என்பார்
அதுதான் தோழி
என் உயிரை அனுப்பினேன்!"

தோழி வியந்தாள்
"பிரிவு
உன்னை சுடவில்லையா?
தனிமை உனக்கு
தகிக்கவில்லையா?"

எப்படிச் சுடும்
எப்படித் தகிக்கும்
கலந்திருந்த நினைவுகளை
சுவாசித்துக் கொண்டிருக்க
நாட்கள் கரைந்துவிடும்
அவர் வரும் நாள் வந்துவிடும்"

என்றவளுக்கு
தும்மல் வரும் போல
நாசிக்குள் உறுத்தல்!
வருவேன் என்ற தும்மல்
வராமல் மறைந்தது!

"ஐயோ... ஐயய்யோ
ஐயய்யோ... ஐயோ"
என்றாள் இன்பா.

"ஏனடி பதறுகிறாய்
என்னடி நடந்து போச்சு!"

தும்மல் வரும் போல்
இருந்தது தோழி - அது ஏன்?
நினைக்க நினைத்தார்
அதுதான்!
தும்மல் வராமல் போனது
தோழி - அது ஏன்?
நினைக்க நினைத்து
நினையாமல் இருந்துவிட்டார்
அதுதான்!"

வாடிப் போனாள் இன்பா
வருவது போல வந்து
வராத தும்மலுக்கு
வள்ளுவர் எழுதிய குறள் பாரீர்.

"நினைப்பவர் போன்று நினையார்
கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்"

அதிகாரம் 121 குறள் - 1203.




**சிந்தியா! இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை மதிப்பிடவே இலங்கை வந்துள்ளதாக கூறுகிறாரே ஐ.நா. செயலாளர் நவநீதம் பிள்ளை?**

கா.வந்தனா, கொள்ளுப்பிட்டி.

அவர் அப்படி கூறினாலும் அவரது வருகை ஏற்கனவே திட்டமிடப்பட்ட முக்கியத்துவ மிக்க பணிகளை ஆய்வுசெய்வதாகும். மனிதவுரிமை தொடர்பில் இவர் ஆய்வு செய்வதற்கு முன்னரே இரண்டு தடவைகள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதே. அவற்றை யார் ஆய்வு செய்தது?

**சிந்தியா! தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கிறதே...?**

கா.மனுசுதன், வவுனியா.

தேர்தலுக்குக்கான நாள் நெருங்க நெருங்க வாக்காளர்கள் மத்தியில் குழப்பம், வேட்பாளர்கள் மத்தியில் பதற்றமும் ஏற்படுவது சகஜம். ஆனால், சில வேட்பாளர்கள் தாம கூறுகின்ற கருத்துக்களின் பெறுமதிகளைப் பற்றி கவலைப்படாமல் அடிமுட்டாள்களைப் போல் உளறுவதுதான் வேதனைக்குரியது. வடமாகாணத்திலேயே அவ்வாறான உளறுகின்ற பல வேட்பாளர்கள் திரிகிறார்கள்.

**சிந்தியா! இந்தியாவின் மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கையின் முடிவுகள் பற்றி என்ன நினைக்கின்றீர் சிந்தியா?**

கே.மொறாயஸ், கண்டி.

இலங்கையின் பக்கம் நியாயங்கள் உண்டு. ஆனால் பிராந்திய ஒத்துழைப்பு, பாதுகாப்பு உறவுகள் என்பன தொடர்பில் சில விட்டுக்கொடுப்புக்களை இலங்கை செய்வதை அவதானிக்க முடிகின்றது. சீனர்களுக்காக இலங்கை இன்னும் எதையெதையெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியிருக்கிறது.

**சிந்தியா! முத்தம் பற்றி சில வார்த்தைகள் சொல்லமுடியுமா?**

ஆர்.எம்.இர்பான், தர்ஹாநகர்.

இன்னும் சிலநாட்களில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படும் தங்கமீன்கள் எனும் திரைப் படத்தில் இயக்குனர் அமீர் முத்தத்திற்கு இன்னுமொரு அர்த்தம் கொடுத்திருக்கின்றார். அதாவது, "முத்தம் காமவகையை சாராதது என்பது பெண் பிள்ளைகளைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டுமே தெரியும்" என்று. அப்படி முத்தம் வழங்கப்படுபவருக்கும், வாங்கப்படுபவருக்கும் இடையே இருக்கின்ற உறவின் அடிப்படையில் அதுவகை சேர்கிறது.

**சிந்தியா! சீறும் பாம்பை நம்பினாலும் சிரிக்கும் பெண்ணை நம்பாதே. என்கிறார்களே. நான் நம்பிவிட்டேன். அதற்கு என்ன செய்ய முடியும்?**

சீ.தமிழன்பன், கிளிநொச்சி.

நம்புவதற்கு முன் கேட்டிருந்தால் நான் பக்குவமாக பதிலளித்திருப்பேன். நம்பிவிட்டேன் என்கிறீர்களே. நான் என்ன செய்ய முடியும். நாகங்களிடம் சிக்கிவிடாதீர்கள்.

**சிந்தியா! திருமணத்தின்போது அருந்ததி காட்டுகிறார்களே. உண்மையில் அருந்ததி தெரியுமா?**

வ.அனுராதா, கொக்குவில்.

இல்லை. ஐயர் காட்டுகின்ற திசையில் ஆகாயத்தை பார்த்து புதுமணத் தம்பதிகள் நம்பிக்கையெனும் பொது உடன்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுபோல் அருந்ததியை பார்த்ததாக ஒரு பொய்யை ஏற்றுக் கொள்கின்ற சடங்கு இது.

**சிந்தியா! அரசியல் படங்கள் வெளிவர எதிர்ப்புத் தெரிவிப்பது படத்தின் 'பப்ளிசிட்டி'க்குத்தான் எனக் கருத்துக்கள் வெளியாகிறதே?**

கு. ஜெனா, காரைநகர்.

மாயை உலகமான சினிமா எப்படி விழுந்தாலும் அதில் தனக்கான இலாபம் எவ்வளவு என்றே பார்க்கின்றது. சிலசமயங்களில் எதிர்ப்புக்களை அதுவே உருவாக்குகின்றது. சிலசமயங்களில் எதிர்பார்க்காமல் எதிர்ப்புக்கள் உருவாகின்றது.

**சிந்தியா! மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி. அது எமது நாட்டுக்குப் பொருத்தமுடையதா?**

தொ.காண்டீபன், புத்தளம்.

ஒருகாலத்தில் சொல்லுக்கும் செயலுக்குமாய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் கூறிய வார்த்தைகள் இது. அத்தகைய சத்தியவான்களை மக்கள் சமகாலத்தில் காண ஏங்குகின்றார்கள். கண்டுபிடிக்கும்வரை நீங்கள் கூறிய வார்த்தைகள் நாம் கடந்துவந்த வரலாறுகள் மட்டுமே. இப்போதெல்லாம் மக்களும் மன்னர்களும் வெவ்வேறு வழியிலேயே வெகுதூரம் போயிருக்கிறார்கள்.

**சிந்தியா! இங்கிலாந்து வீரர்கள் மைதானத்துக்குள் சிறுநீர் கழித்து மகிழ்ச்சியை பரிமாறுகிறார்களே?**

பொ.அருந்தவராஜா, மாங்குளம்.

ஆமாம். முன்னதாக மொண்டி பனசர், மதுபானச்சாலையில் சிறுநீரை கழித்து சிக்கலுக்குள் மாட்டினார். இப்போது பீற்றர்சன், புறோட் போன்றவர்கள் ஒருபடி மேலே போய் மைதானத்துக்குள்ளேயே தங்களது போதையை தீர்த்திருக்கிறார்கள். ஜாம்பவான்களின் கிரிக்கெட்டை



உருவாக்கிய இங்கிலாந்து தேசமே இப்போது அதற்கு தலைகுனிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாகரிகம் என்ற பெயரால் நடுத்தெருவில் எதுவும் செய்யலாம் என்பதை அனுமதித்த மேலைத்தேசத்தின் பரந்த மனசிற்கு கிடைக்கின்ற பரிசுகளாக இவை இருக்கலாம்.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதில பூ




## கந்தசாமி

**வணக்கமுங்கோ.**
தேர்தல் சூடுபிடிக்கயில்லையோ எண்டு யாழ்ப்பாணம் வாறவை கேக்கினமுங்கோ.

முன்னமெல்லாம் யாழ்ப்பாணத்தில தேர்தல் நடக்குதெண்டால், எத்தனை பரபரப்பு, எத்தனை சலசலப்பு இருக்கும் ஆனால் பாருங்கோ, வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடங்கி மாசமும் முடியப் போகுது. இன்னும் தேர்தலுக்கான சம்பிரதாயங்கள், சடங்குகளை இன்னும் காணவில்லையுங்கோ.

ஐயா விக்கியைச் சந்திச்சுக் கேட்டால், ஏதும் லேட்டஸ்டாகச் சொல்லுவார் எண்டு கொழும்பில விசாரிச்சால் உண்மையைச் சொல்லினமில்லையுங்கோ.

சரி எண்டிட்டு யாழ்ப்பாணத்துக்கு வரும் வரை காத்திருந்தால், தேர்தல் ஆணையாளரோட கூட்டத்தில கலந்துகொள்ள வந்திருந்தாருங்கோ.

யாழ். நூலகத்தில கூட்டம் முடிஞ்சி ஆட்கள் வெளியேறும் போது கிட்டப்போனால், ஐயையோ, நான் மீடியாவோட ஒண்டும் கதைக்க மாட்டன் எண்டு ரெண்டு கையையும் மேல தூக்கிக் காட்டினாருங்கோ.

உந்த மீடியாக்கள்தான் சும்மா கிடந்த உங்களுக்கு கொம்பு சீவி சூப்பர் மேன் ஆக்கியது எண்டு ஐயாவிடம் யாரும் சொல்ல இல்லைப் போல.

பாவம் ஐயா. ஏற்றிவிட்ட ஏணியை காலால் உதைச்ச மாதிரி மீடியாக்காரரைக் கண்டு மிரண்டு போறார். மீடியாக்காரர் அசடு வழிஞ்சு போய் நிக்கினமுங்கோ.

வேட்பாளராக இருக்கும் போதே உந்த வெட்டு வெட்டுராரே. கால கஷ்டம் இவரை முதலமைச்சராக்கிட்டு எண்டால், எப்புடி ஆப்பு அடிப்பாரோ எண்டு புலம்பத் தொடங்கீட்டினமுங்கோ.

ஏன் மீடியாக்காரரைக் கண்டு மிரளுரார் எண்டு விசாரிச்சால், மீடியாக்கள் வித்தியாசமான நியூஸ் வேணுமெண்டு ஏதும் கேட்டாங்கள் எண்டால், தனக்கு அவ்வளவாக பொலிரிக்ஸ் பேசத் தெரியாதெண்டதால திக்குமுக்காடிப் போயிட்டால், அது அமானமாப் போயிடும் எண்டுதான், மீடியாக்காரரை மீட் பண்ணுறதை தவிர்த்துக்கொண்டு தப்பிக்கப் பாக்கிறாராமுங்கோ.

சரிவிடுங்கோ. மீடியாக்காரரும் தங்களுக்குத் தீனிபோடுவார் எண்டு ரொம்ப நம்பிக் கெட்டுப் போயிருக்கினமுங்கோ.

ஐயாவுக்கு பொலிரிக்ஸ்தான் வராதுங்கோ. ஆனால், நல்லாப் பொய்பேச வரும் எண்டதை நிருபிச்சுப் போட்டாருங்கோ.

நான் உப்பிடிச் சொன்னதும் என்னடா இது ஒரு முன்னாள் நீதியரசரைப் போய் பொய் பேசுறார் எண்டு பொல்லாதபடி கந்தசாமி கதை விடுகிறாரே எண்டு டக்கெண்டு கோபப்பட்டு இருப்பியள்.

எனக்கென்னங்கோ, நேத்திக்கடனோ, உப்பிடிச் சொல்ல வேணுமெண்டு. ஐயா தானுங்கோ வட மாகாண சபைத் தேர்தலில வாக்கு மோசடிகளைச் செய்யிறதுக்கான வேலைகளில ஈடுபட்டுவருவதாக அடிச்சுக் கூறி இருக்கிறாருங்கோ.

கள்ளவாக்குப் போடுவதற்கு எங்கே யார் முயற்சி எடுக்கினம் எண்டதை அவர் பொலிசுக்கும், தேர்தல் ஆணையாருக்கும் ஆதாரத்தோட முறைப்பாடு செய்து தடுக்க முயற்சி பண்ணலாமே.

அதைவிட்டுப் போட்டு எழுந்தமானமாக ஒரு கதையைச் சொல்லுறது ஐயா மாதிரி ஆளுக்கு அழகில்லையுங்கோ. அப்பிடித்தான் ஐயா போன தடவை, சர்வதேசத்தை அழைத்துவந்து மூன்றாம் கட்டப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகக் கூறினார்.

பிறகு, வடக்கில போடப்பட்ட காப்பெற் றோட்டெல்லாம் இராணுவ முகாம்களுக்குத்தான் போகுது எண்டு சொன்னதும் சிறுபிள்ளைத்தனமான கதைகளுங்கோ.

காப்பெற் றோட்டும், கரண்டும் இராணுவ முகாம்களுக்குத்தான் எண்டு சொன்ன அவரது அறிவை நினைச்சால், அவருடைய முன்னை நாள் முடிவுகள் எந்தளவுக்கு சரியானதாக இருந்திருக்கும் எண்டு திங் பண்ணத் தோணுதுங்கோ.

ஐயாவுக்கு பொலிரிக்ஸ்தான் வராதெண்டால், பொதுவான விசயங்களும் வருகுதில்லையுங்கோ. இவரெல்லாம் தமிழ் மக்களுக்கு தலைமை கொடுக்கிறதெண்டால் தமிழ் மக்களின் கூடாத காலம் தானுங்கோ.

ஐயா பேசாதவரை பெரிய மனுசன்தான். வாயைத் திறந்தால் வண்டவாளம் அம்பலம் ஆகிடுமுங்கோ. அதாலதான் யாரோடையும் அதிகம் பேசாமல் எலக்ஷன் முடியும் வரைக்கும் மூடிக்கொண்டு இருங்கோ எண்டு சம்பந்தமில்லாதவர் கூட்டம் போட்டிருப்பாரோ எண்டு ஒரு சந்தேகம் இருக்குதாமுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**



# உயிர் காத்த விளக்கு

இந்த நிலக்கரிச் செல்வமே தொழிற்புரட்சியின் போது பிரிட்டனை, உலகின் தொழிற்பட்டறை என்ற பெருமைக்கு உரியதாக்கியது.

பிரிட்டனைச் செல்வங்கொழிக்கும் நாடாக்கிய நிலக்கரி, ஏராளமான சுரங்கத் தொழிலாளர்களையும் பலிகொண்டது.

இத்தகைய விபத்துக்கள் சுரங்கங்களில் ஏன் ஏற்படுகிறது?

பூமியைக் குடைந்து, நிலக்கரியை வெட்டிச் சுரங்கம் அமைத்துக் கொண்டிருக்கும் போது, நிலக்கரி வாயு உண்டாகிறது. இந்த வாயு சுரங்கத்தில் நிறைய சூழ்ந்து கொள்ளும்போது, சுரங்கத் தொழிலாளிகள் வெளிச்சத்துக்காகப் பயன்படுத்தும் விளக்குகளின் சுடர், இந்த நிலக்கரி வாயுவில் தீப்பற்ற வைக்க, வெடி விபத்து ஏற்படுகிறது. விளக்குச் சுடர் வாயுவோடு தொடர்புகொள்ளாமலிருக்க, பாதுகாப்பு முறைகளில் அப்போது அதிகம் கவனம் செலுத்தப்படவில்லை. 1813 வரை சுரங்கத்தினுள் ஏற்படும் வெடி விபத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து யாரும் விவாதிக்கவில்லை.

விபத்துக்கள் தொடரவேதான், நிலக்கரிச் சுரங்க விபத்துக்களைத் தடுக்கும் கழகம் (Society for Preventing Accidents in Collieries) உருவாயிற்று. இக்கழகம் துரிதமாகச் செயற்படலாயிற்று. லண்டனில் இருந்த சர் ஹம்ஃப்ரி டேவி என்பவரிடம் எரிவாயுவினால் ஏற்படும் விபத்துக்களை அகற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்து உதவும்படி கேட்டுக்கொண்டது. அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். டேவி, கழகம் இதையே தங்கள் முதல் வெற்றியாகக் கருதியது.

ஹம்ஃப்ரி டேவி அப்போது புகழ்பெற்ற விஞ்ஞானி, தனது பதினாறாவது வயதில் மருத்துவம் பயிலத் தொடங்கியவர். விரைவில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடலானார். இவரது ஆர்வத்தை அறிந்த ஆசிரியர்கள், இவரை பிரிட்டனில் உள்ள நுரையீரல் ஆராய்ச்சிக் கழகத்தின் சூப்பிரண்டாக்கினார்கள். பல்வேறு வாயுக்களைப் பற்றி ஆராயும் கழகம் இது.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(29.08.2013 தொடக்கம் 04.09.2013 வரை)

## மேடம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார், உறவினர்களின் திடீர்வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். உடல்நிலையில் இதுநாள் வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையும். காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். தேவையற்ற புதிய நட்புகளால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும்.

## துலாம்

வெகுகாலமாக வழிபடாமல் விட்டுப்போன குலதெய்வ ஆலயங்களைத் தரிசனம் செய்வதற்கான காலமாகும். வழக்கு சம்பந்தமான விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையில் வாக்குவாதங்கள் ஏற்படும். பொதுச்சேவைகளான ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் எடுப்பீர்கள். குலதெய்வ ஆலய யாத்திரை செய்யுவா முயற்சிப்பீர்கள். காதல் விசயங்களில் மற்றவர்களின் ஆதரவுகள் கிடைக்கும். உத்தியோகத் துறையினருக்குப் பதவிஉயர்வுடன் கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டாகும். குடும்பத்தில் தேவையற்ற மனக்குழப்பங்கள் வர இருப்பதால் மிகுந்தகவனமுடன் இருத்தல் உகந்ததாகும். பொதுவாக இது ஒரு மன நிம்மதி தரக்கூடிய வாரமாகும்.

## இடபம்

உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்களது மேலதிகாரிகளுடன் மிகவும் பொறுமையுடன் பணி ஆற்றுதல் நல்லதாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த தீர்த்த யாத்திரைகள் சென்றுவர வாய்ப்புகள் உள்ளது. குடும்பத்தில் தந்தையின் மருத்துவ செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். நீண்டகாலமாக இருந்து வந்துள்ள காதல் விசயங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைப்பதற்கு இன்னும் சற்றுப் பொறுமையுடன் இருத்தல் நல்லது.

## விருச்சிகம்

தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி சற்றுமுன்னேற்றம் காண்பீர்கள். வடக்குத்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். சகோதர சகோதரிகளின் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது.

## மிதுனம்

தாயின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும் பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுக்களும் பொருள்வரவும் உண்டாகும். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுவதற்காக நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேர இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தந்தையின் உடல்நிலை பாதிப்பால் குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் ஏற்படும்.

## தனுசு

விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ள காலமாகும். வீடுகளில் அல்லது யாத்திரையில் புதிய நட்புக்கள் உண்டாகி அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயம் அடைவீர்கள். உடம்பில் சளி மற்றும் காய்ச்சல் சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பணநெருக்கடிகள் மாறிச் சற்றுமுன்னேற்றம் காண்பதன்மூலம் மனநிம்மதி அடைவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். விசா பிரச்சினைகள் தீருவதற்கான காலமாகும். பொதுவாக இது ஒரு ஆறுதல் தரும் வாரமாகும்.

## கடகம்

உடம்பில் சளி அலர்ஜி போன்ற தொல்லைகள் வந்துபோகும். வங்கிகளில் இருந்து வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகை கிடைக்கும். புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். கணவன் – மனைவி உறவுகளில் இதுநாள் வரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்றுதிரும்ப வாய்ப்பு உள்ளது. விவசாயம் சுமாராகப் பலிதமாகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவும் தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்தகவனமுடன் இருக்கவும். உடம்பில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகலாம். மஹான்களின் தரிசனங்களால் மனமகிழ்ச்சியோடு காரியசித்தியும் அடைவீர்கள். உடல்நிலையில் இதுநாள்வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## சிங்கம்

உடல்நிலையில் கண், காது போன்ற இடங்களில் கவனம்தேவை. குடும்பச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரிய மனிதர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். புதிய வீடு, வாகனங்களை வாங்குவதற்காக வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கைவந்து சேரும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வர இருப்பதால் எதிலும் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூரம் உல்லாசப் பயணங்கள் சென்றுவருவதன்மூலம் மகிழ்ச்சியை அடைவீர்கள். காதல் விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும்.

## கும்பம்

பிரிந்துபோன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்துவாழ வாய்ப்பு உள்ள காலமாகும். மற்றவர்களுக்காக ஜாமீன்போட்டு வீண்சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாமல் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. வரவேண்டிய பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பிரச்சினைகளில் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் நல்லமுடிவுகள் கிடைக்கும். விசா போன்ற வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு எச்சரிக்கை நிறைந்த வாரமாகும்.

## கன்னி

குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டில் இருந்து செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் மனக்குழப்பங்கள் உண்டாகலாம். நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு வாகனங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறவாய்ப்பு உள்ள காலமாகும். உடம்பில் வாயு, வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். வீட்டை அலங்கரிப்பதிலும், வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமும் பொருட்செலவுகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் மற்றும் பரிசு பாராட்டுக்களும் கிடைக்கும். அண்டை அயலார்களுடன் காரணமற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப்பழகுதல் நல்லது. தென்திசையில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். நீண்ட காலமாகக் காணாமற் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

